பதிப்புரிமையுடையது

வெளியீடு II

பாகம் II



# G. C. E. (A/L)

# இந்துசமயம் இந்துநாகரிகம்

புதிய பாடத்திட்டத்திற்குரியது

திருமதி. சாந்தி கேசவன் B. A (Hons), Dip in Edu.
(ஆசிரிய ஆலோசகர்)
மட் / கல்வித்திணைக்களம், மட்டக்களப்பு.

வெளியீடு
ராஜாஸ் புத்தக நிலையம்
111, பிரதான வீதி, மட்டக்களப்பு.

மூன்றாம் பதிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## முக்கிய அறிவித்தல்

### உடனுதவும் பகுதி

நீங்கள் எடுத்து வாசிக்கும் புத்தகத்தில் கீறுதல், கிறுக்குதல், அழித்தல் வெட்டுதல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்யவேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம். புத்தகங்களை எடுக்கும்பொழுது இப்படியான குறைகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். இல்லாவிடின் இவ்வூறுபாடுகள் தங்களாலேயே செய்யப்பட்டதென்று கருதப்படுவதுடன் நூலகத்தில் விதிக்கப்படும் தண்டனையையும் ஏற்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126883

பதிப்புரிமையுடையது

வெளியீடு II

பாகம் II



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# G. C. E. (A/L)

# இந்துசமயம் இந்துநாகரிகம்

புதிய பாடத்திட்டத்திற்குரியது

திருமதி. சாந்தி கேசவன் B. A (Hons), Dip in Edu.
(ஆசிரிய ஆலோசகர்)
மட் / கல்வித்திணைக்களம், மட்டக்களப்பு.

வெளியீடு
ராஜாஸ் புத்தக நிலையம்
111, பிரதான வீதி, மட்டக்களப்பு.

மூன்றாம் பதிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்நூலானது என்னால் வெளியிடப்பட்ட இந்துநாகரிகம், இந்துசமயம் I, ன் தொடர்ச்சியின் வளர்ச்சியுடன் வெளியீடு II (பகுதி II) ஆக உருவாக்கம் பெற்றுள்ளது என்பதைக் கூறுவதில் பெருமகிழ்ச்சியுறுகின்றேன்.

வெளியீடு I ல் 1-571 சுருக்க வினாவிடைகளும் வெளியீடு II ஆகிய இந்நூலில் 572 - 615 சுருக்க வினாவிடைகளும், பதினாறு கட்டுரை வினாக்களும் விடைகளும் அமைந்துள்ளன. பகவத்கீதை, பன்னிருதிருமுறைகள், சங்கரரது அத்வைதக் கோட்பாடு, இராமானுஜர் விசிட்டாத்துவைதம், ஆச்சிரமக் கோட்பாடு, இந்துக்களின் வாழ்வில் கோயில், சைவசித்தாந்தம் கூறும் ஆணவம், யோகங்கள், மூவகைக் கிரியைகள் அறுவகைச் சமயங்கள் (சாக்கம், காணபத்தியம்) கன்மம், மறுபிறப்பு, ஆலய அமைப்பு, தத்துவம், திருக்கோயிலில் வழிபாடு, புருடார்த்தங்கள், ஒழுக்கம் முதலிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இதுவரை என்னால் க.பொ.த. உயர்தரம், G. A. Q. இந்து சமயம், இந்துநாகரிகத்திற்கென ஆறு நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

வெளியீடு III பாகம் V ஆக மலர்ந்துள்ள நூலில் 616-1040 வரையிலான சுருக்க வினா விடைகள் உள்ளன. வெளியீடு I, II ல் விடுபட்ட அனைத்து வினாக்களுக்கான விடைகள் புதிய பாடத்திட்டத்திற்கமைவாக சேர்க்கப்பட்டுள்ளன.

இந்துசமயம், இந்துநாகரிகத்துக்குரிய பாகம் I ல் சிந்து வெளிநாகரிகம், வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், புராணங்கள், அதர்வவேதம், இதிகாசங்கள், சங்ககாலம், பல்லவர் காலம், சோழர்காலம், விஜயநகர நாயக்கர் காலம், நவீன கால சீர்திருத்த இயக்கங்கள், ஆறுமுகநாவலர், தென்கிழக்காசியாவில் இந்துப்பண்பாடு, நடராஜ, தட்சணாமூர்த்தி வடிவங்கள், இலிங்க வழிபாடு, பிராமணங்கள், பெரிய புராணம், கந்தபுராணம், சௌரம் முதலிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

பாகம் IIIல் வைணவம், வைணவலட்சணம், அர்த்த பஞ்சக ஞானம், பஞ்ச ஸம்ஸ்காரம், வைணவம் கூறும் இரஹஸ்ய திரயம், தசாவதாரம், வைணவம் கூறும் இறைவனின் ஐந்து நிலைகள், குப்தர்காலம், இசைக்கலை, திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் முதலிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

பாகம் IVல் ஈழத்து சைவப் பெரியார்கள் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, சேர். பொன். இராமநாதன், காசிவாசி செந்திநாதையர், மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளை, இந்துபோட் சு. இராசரெத்தினம், சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், விபுலானந்த அடிகள், சைவ பரிபாலனசபை, சைவவித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்த சபை, தெவிநுவர விஷ்ணு ஆலயம் முதலிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறாக நான் எழுதிய பல நூல்களை ஆசிரிய, மாணவ உலகம் பாராட்டி வருகின்றமை மேலும் நூல்கள் பல எழுதுவதற்கு தூண்டியுள்ளது. நேரிலும் கடிதமூலமும் பாராட்டிய அனைவருக்கும் என் நன்றிகள்.

தவிர இந்நூல் உருவாக்கம் பெறுவதற்கு எழுதி உதவி செய்த என் அன்புக்குரிய மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் என் நன்றி. குறிப்பாக ஏ. கோணேஸ், த. ரமேஷ் ஆகியோருக்கு விசேட நன்றிகள்.

இந்நூலை வெளியிடும் ''ராஜாஸ்'' நூல்நிலையத்தாரின் உதவிகளுக்கு என் நன்றிகள் உரித்தாகட்டும்.

கூடிய விரைவில் இதை அச்சிட்ட 'ஜெஸ்கொம்' அச்சகத்தாருக்கும் பாராட்டுக்கள்.

இந்நூலின் குறை. நிறைகளை எழுதுங்கள். நிறைகள் என்னை ஊக்குவிக்கும், குறைகள் என்னைத்திருத்தும்.

**என் நன்றி**

*78, கோவிந்தன் வீதி,*
*மட்டக்களப்பு.*
*09 - 04 - 1998*

அன்புடன்,
திருமதி. சாந்தி கேசவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயம் வெளியீடு Iன் தொடர்ச்சி---

572. ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் திருத்தலம் எது?

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் காரைநகர் சிவன்கோயில்

573. துவஜாரோகணம் என்றால் என்ன?

கொடியேற்றத் திருவிழா

574. அக்ஷயநவமி பற்றி விளக்குக?

கார்த்திகை மாதத்துச் சுக்கில பட்சத்தின் ஒன்பதாம் நாள் மகா விஷ்ணுவுக்கு புனிதமான நாளாகும். இந்நாளிலே அடையும் எந்த நன்மையும் முடிவடையாத சிறப்பினையுடையது.

575. லிங்கோத்பவர் சிவன் கோயிலில் அமர்ந்திருக்கும் இடம் யாது? விளக்குக.

சிவன் கோயில்களிலே கருவறையில் அமைந்துள்ள மூலமூர்த்திக்கு பின்பக்கத்தில் வெளி விமானத்திலே மேற்கு நோக்கி இலிங்கோற்பவ வடிவம் அமைந்திருக்கும். சிவபெருமானின் மகேசுவர மூர்த்தங்களில் (உருவத் திருமேனிகளில்) இவ்வடிவம் முக்கியமானவையாகும். இலிங்கோற்பவர் வடிவம் சிவலிங்கத்தின் நடுவே வளர்ந்து தோன்றி நிற்கும். இறைவனின் சிரசும் பாதங்களும் கண்ணுக்குப் புலப்படாத முறையில் வடிவம் அமைந்திருக்கும். நான்கு கரத்திலே பின்கரம் இரண்டும் மான்மழுத் தாங்கிய வடிவிலும் முன் கையிரண்டும் அபயவரத முத்திரையிலமைந்தும் காணப்படும். இலிங்கோற்பவரின் முடிக்கயலிலே அன்ன வடிவத்திலே பிரமனும் கீழே பன்றி உருவிலே விஷ்ணுவும் இடம் பெறுவர். இலிங்கோற்பவரின் தோற்றத்தின் கதை கந்த புராணம் தட்சகாண்டத்து அடிமுடி தேடிய படலத்திலே விரிவாக விளக்கப்பட்டுள்ளது இலிங்கோற்பவர் தோன்றிய சிவராத்திரி சிவபெருமானுக்குரிய விரதங்களிலே சிறப்பு வாய்ந்தது.

576. அகப்புறச் சமயங்கள் எவை?

பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம்

577. வடமொழியிலுள்ள மகாபாரதத்தின் மூன்றாவது பருவமான வனபர்வதத்திலே இடம் பெறுவது எது?

இராமோபாக்கியானம் (இது இராமாயணக் கதையின் சுருக்கமாக அமைகின்றது)

578. வைணவர் ''சரணாகதி'' எனப் போற்றும் நூல் எது?

இராமாயணம்

579. அசுவத்தை (குதிரையை) முக்கியமாகக் கொண்டு செய்யப்படும் வேள்வி எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

அசுவமேதயாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

580. இருக்குவேதத் தெய்வங்களுள் ஒன்றான அசுவினி தேவரது சூக்தங்கள் எத்தனை?

சுமார் ஐம்பது சூக்தங்கள்

581. சப்த விடங்கத் தலங்கள் எவை?

1) நள்ளாறு
2) நாகைக் காரோணம்
3) காறாயில்
4) கோளிலி
5) வாய்மூர்
6) மறைக்காடு
7) ஆரூர்

582. அட்டமா சித்திகளும் எவை?

1) அணிமா (அணுவைப்போற் சிறிதாதல்)
2) மகிமா (மேருவைப்போற் பெரிதாதல்)
3) லகிமா (காற்றைப்போல் இலேசாயிருத்தல்)
4) கரிமா (பொன்போற் பழுவாயிருத்தல்)
5) பிராப்தி (எல்லாவற்றையும் ஆளுதல்)
6) பிரகாமியம் (கூடு விட்டுக் கூடு பாய்தல்)
7) ஈசத்துவம் (விரும்பியவற்றைச் செய்து முடித்து அனுபவித்தல்)
8) வசித்துவம் எல்லாவற்றையும் வசப்படுத்துதல்)

583. இறைவனுடைய அட்டமூர்த்தங்களும் எவை?

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா

584. சிவபெருமான் செய்த அற்புதத் திருவிளையாடல்களையும், ஆசிரியருக்குச் செய்த நன்மைகளையும் கூறும் நூல் எது?

அதிசயமாலை

585. இரகசிய கிரந்தங்களில் வசிட்டாத்துவைத தத்துவம் கூறும் நான்கு கோட்பாடுகளும் எவை?

1) ஆன்மா - உடல் உறவு (சரீரசரிரபாவம்)
2) இறைவன் சேவை: அடியார்களுக்கும் நீடிக்கப்படுவது (கைங்கரியம்)
3) சரணடைதல்
4) இறைவனை அடையப் பிராட்டியார், ஆசாரியர் உதவி (புருஷகாரம்)

586. அநந்த விரதம் அனுட்டிக்கப்படும் நாளெது?

ஆவணி மாதத்து சுக்கில பட்சத்து பதினான்காம் நாள் மிருக சீடம் உச்சத்திலே இருக்கும்போது அநுட்டிக்கப்படும் விரதம் அல்லது அநந்த பத்மநாப விரத நோன்பு ஆகும்.

587. அநுபூதி என்றால் என்ன?

கடவுளை ஆன்மா அனுபவித்து அறிவது அநுபூதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

588. 'அர்ச்சிராதி' எனும் நூல் விவரிக்கும் முக்கிய விடயம் யாது?

பூமியில் இருந்து வைகுண்டத்திற்குச் செல்லும் உடல் விட்டு நீங்கிய ஆன்மாவின் பயணத்தை விபரிக்கின்றது.

589. வைணவர் 'கோயில்' எனத் தனித்துச் சிறப்பிக்கும் பெருமையுடைய தலம் எது?

திருவரங்கம்

590. இறைவனின் 'அரியர்த்தர்' வடிவம் எவ்வாறமைந்திருக்கும்? விளக்குக.

சிவபெருமானின் மகேஸ்வர மூர்த்தங்களில் (உருவத் திருமேனிகளில்) ஒன்று அரியர்த்தர். 'அர்த்தம்' என்பது பாதி, அரியைப் பாதியாக உடைய திருவுருவம் அரியர்த்தர். அரன் வடிவம் பாதியாகவும் கொண்டு விளங்கும் போது சிவபெருமான் அரியர்த்தர் எனப்படுவர். இவ்வடிவத்திலே அரன் (சிவன்) வடிவு வலப்பக்கத்திலும் அரிவடிவு (விஷ்ணு) இடப்பக்கத்திலும் அமைந்திருக்கும்.

அரியர்த்தர் திருக்கோலத்திலே வலப்பக்கத்தில் கொன்றைப்பூவும், புலித்தோலாடையும், திருக்கரத்தில் மானும், செந்நிறம் பொருந்திய திருமேனியும் அமைய, இடப்பக்கத்தில் துளசியும், பீதாம்பரமும், திருக்கரத்தில் சக்கரமும், பச்சைநிறம் பொருந்திய திருமேனியும் அமைவன.

591. "இதோபதேசம்" என்பதன் பொருள் என்ன?

இதோபதேசம் என்பது இதம், உபதேசம் எனும் சொற்களின் சேர்க்கையாகும். இதம்-நன்மை. தகுதி; உபதேசம்-போதனை. அதாவது நன்மை தரும் போதனைகளையுடையது என்பது பொருள்.

592. 'நம்மாழ்வார்' திருவவதாரம் செய்த தலம் எது?

ஆழ்வார் திருநகரி

593. வைணவர் 'ஆழ்வார்களை' எவ்வாறு நினைத்து வழிபடுவர்?

அவதார புருஷர்களாக நினைத்து வழிபடுவர்

594. ஆவணி அவிட்டம்?

உபநயனம் செய்துகொண்ட பிராமணர் பொதுவாக ஆவணி பௌர்ணமியில் கொண்டாடும் உபகர்மம் என்னும் ஆண்டுச் சடங்கு ஆவணி அவிட்டம் எனப்படும். ஆவணி அவிட்டத்தில் உபநயனம் செய்தோர் தங்கள் பூணூலைப் புதுப்பிப்பதோடு வேதங்களைப் படிக்கவும் தொடங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

595. 'ஆருத்திரா' தரிசனம் என்றால் என்ன? விளக்குக.

மார்கழி மாதத்திலே வரும் திருவாதிரை திருநாளே ஆருத்திரா தரிசன நாள் எனப்படுவது. திருவாதிரை சிவனுக்கு உரிய நட்சத்திரம் திருவெம்பாவை விரதத்தின் இறுதிநாள் திருவாதிரை

மார்கழித் திருவாதிரை சிவபிரானுக்குரிய புண்ணிய நாட்களில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. இந் நாளிலே நடேசர் அபிடேகத் திருவிழா நடைபெறும். ஆருத்திரா தரிசம் கிடைத்தற்கரியதாக கருதப்படும்.

596. நாலாயிரத் திவ்விய பிரபந்தம் தோன்றிய பின்னர் வைணவச் சார்பாக எழுந்த பிரபந்தத் தொகுதி எது?

அஷ்டப் பிரபந்தம்

597. அஷ்டாதச புராணம் எனப்படும் புராணங்கள் எத்தனை?

பதினெண் புராணங்கள்

598. வைணவர் ஆகமங்களை வேறு எப்பெயர் கொண்டு அழைப்பர்?

மந்திரம், சம்கிதை, பாகவத சாத்திரம்

599. வைணவ ஆகமத்தின் இரு பிரிவுகளும் எவை?

பாஞ்சராத்திரம், வைகாசனம்.

600. நம்மாழ்வாரின் பெருமையைப் போற்றும் மணிப்பிரவாள நடையிலமைந்த நூல் எது?

ஆசார்யஹ்ருதயம்

601. ஆசாரக்கோவை: ஒழுக்கங்களைத் தொகுத்துரைப்பது

602. வைணவ ஆழ்வார்களிலே பெண்ணாக விளங்கும் பெருமை பெற்றவர் யார்?

ஸ்ரீ ஆண்டாள்

603. திருவரங்கத்து மாலையைப் பாடியவர் யார்?

மங்கை மணவாளதாசர் (இவரது நூல் ஸ்ரீரங்கப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது)

604. 'ஸ்ரீ ருத்திரம்' வேதத்தின் எப்பகுதியில் இடம் பெறுகின்றது?

யசுர் வேதத்தில் இடம் பெறுகின்றது

605. குமரக் கடவுளின் மூர்த்தங்களைக் கூறும் வடமொழி ஆகமம் எது?

குமார தந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

606. கிருஷ்ணாவதாரத்திற்கு பாகவதம் போன்று இராமாவதாரத்திற்குரிய பாராயண நூலெது?

அத்யாத்தும இராமாயணம்

607. வைணவர்கள் நெற்றியில் எதை அணிந்து கொள்வர்?

திருமண்

608. மகேஸ்வரன் என்ற நிலையில் நின்று சிவன் ஆற்றும் தொழில் யாது?

மறைத்தல்

609. ஞான பூசனை என்றால் என்ன? விளக்குக.

ஞானத்தைப் பெறுவதற்கு நல்ல வழியொன்று உண்டு. அதுவே ஞானபூசனை எனப்படும். ஞான நூல்களை ஒருவர் படித்தல், தாம் படித்தவற்றை மற்றவர்களுக்குப் படிப்பித்தல், மெய்ப் பொருளை ஞானாசிரியரிடம் கேட்டல், தாம் கேட்ட பொருளைப் பக்குவமுடையோருக்குச் சொல்லல். அந்த மெய்ப்பொருள் பற்றி சிந்தித்தல் ஆகிய ஐந்துமே ஞானபூசனை எனப்படும்.

610. திருக்கோயிலின் கட்டடத்திலே உபபீடத்திற்கு மேற்பட்ட பகுதி எவ்வாறழைக்கப்படும்?

அதிஷ்டானம்

611. பரவெளியாகிய சிதம்பத்ரதை சிவலிங்கத்தின் எப்பாகம் குறித்து நிற்கும்?

மேற்பாகம்

612. திருத்தாண்டகம் பாடிய சைவ, வைணவப் பெரியார்கள் யாவர்?

அப்பர், திருமங்கையாழ்வார்

613. 'மாக்கதை' என்று சொல்லப்படும் புராணம் எது?

பெரிய புராணம்

614. இந்தியாவிலுள்ள வடநாட்டவர் எண் வைகுண்டங்களாகக் கருதும் தலம் எது?

அட்டசுயம்பு தலங்கள்

615. ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச் செய்த இருபத்து நான்கு பனுவல்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

616. வைணவ மரபிலே விசிட்டாத் வைதிகள் முக்கியத்துவம் அளிக்கும் மூன்று இரகசிய மந்திரங்களும் எவை?

1) திருமந்திரம் 2) துவயம் 3) சரமசுலோகம்.



நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

617. 'இராம நவமி' கொண்டாடப்படும் நாளெது? விளக்குக.

ஸ்ரீ இராமபிரான் அவதரித்த திருநாள் விழாவாகக் கொண்டாடப்படுவது ஸ்ரீ ராம நவமி. சித்திரை மாதத்திற் புனர்பூச நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்போது சுக்கில பட்சத்தின் ஒன்பதாம் நாள் இராம நவமி கொண்டாடப்படுகின்றது.

வட இந்தியாவிலே ஒன்பது நாட்களுக்கு விழாக் கொண்டாடுவார்கள். அப்பொழுது இராம சரிதங்களைப் படிப்பதும், காலாட்சேபம் செய்வதும் சிறப்பாக நடைபெறும். தமிழ்நாட்டிலும் இராமநவமி கொண்டாடப்படும்.

வெற்றியும், செல்வமும், நல்லின்பமும், நல்லறிவும், நீண்ட வாழ்க்கையும் சித்திக்க வேண்டும் என்று பக்தர்கள் இவ் விழாவினைக் கொண்டாடுவர்.

## 1. இந்து சமய தத்துவ நூல்களுள் பகவத்கீதை பெறும் முக்கியத்துவத்தை (சிறப்பிடத்தை) ஆராய்க:-

பகவத்கீதை உலகப் பிரசித்தி பெற்ற ஒரு அறிவுக்களஞ்சியம் ஆகும் பாரத நன்னாடு உலகுக்கு உபகரித்த ஓர் அருட்செல்வமென்றும் அதைக் கூறுதல் பொருந்தும். உலகில் பகவத்கீதையானது ஆங்கிலத்தில் மட்டுமல்ல கிரேக்க மொழி, லத்தீன் மொழி, பிரஞ்சு மொழி, ஜேர்மன் மொழி ஆகிய பல ஐரோப்பிய மொழிகளிலும் இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மேல் நாடுகளிலேயே இந்நூலுக்கு இவ்வளவு வரவேற்பு இருக்கும் போது நம் பாரத நாட்டில் இதற்கு அளிக்கப்பட்டுவரும் பெருமையைப் பற்றி நாம் வியப்பு அடையவேண்டியதில்லை. இந்த நாட்டில் உள்ள சிறப்பான மொழிகள் அனைத்திலுமே இதன் மொழி பெயர்ப்புக்களை நாம் காண முடிகின்றது.

பழமையில் பற்றுள்ள பெரியோர்கள் கீதையை ஒரு கடவுள் தன்மை வாய்ந்த நூலாகப் போற்றி வணங்குகிறார்கள். புதுமையில் பற்றுள்ள இலக்கிய வல்லுனர்கள் அதன் எழில்மிக்க எளிய நடையையும், தூய்மைமிக்க பொருள். ஆழத்தையும் கண்டு வியப்பு அடைகின்றார்கள். இந்துக்களை மட்டுமன்றி ஐரோப்பியர், அமெரிக்கர், ஆகியோரின் கருத்தை ஈர்த்துள்ள பண்புடைய பாரத நாட்டு இலக்கியங்களுள்ளே பகவத்கீதைக்கு இணையாக இன்னொரு நூல் இல்லை என்றே சொல்லலாம்.

கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த மேல் நாட்டுப் பாதிரிமார்கூட கீதையால் கவரப்பட்டுள்ளார்கள் என்பது கீதையின் சிறப்பிற்கு ஓர் சீரிய சான்று. ஆக்ஸ்போர்டு கிறிஸ்தவ மடாலயத்தைச் சேர்ந்த றெவரண்டு ஜே. என்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்க்குஹார் என்பவர் ''கீதையும், கிறிஸ்தவ வேதமும்'' என்னும் தமது நூலில் ''உலகில் உள்ள எல்லா இலக்கியங்களிற்குள்ளேயும் பகவத்கீதையோடு ஒப்பிடக் கூடியவை ஒரு சிலவே இருக்கின்றன. ஒரு புதுமையான கவிதைய்ழகு வாய்ந்த ஓர் நூலது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி எல்லோருமே ஒருமனதாய் போற்றுமாறு விளங்கும் கீதையின் முக்கியத்துவத்தைத்தான் என்ன என்பதைப் பார்ப்போம்.

பகவத்கீதை மகாபாரதத்தின் பீஷ்ம பர்வத்தில் 25வது அத்தியாயத்திலிருந்து 42வது அத்தியாயம் வரை காணப்படுகின்றது. மகாபாரதப்போரிலே துரியோதனாதியோரை எதிர்த்துப் போர் செய்வதற்கு வந்த அர்ச்சுனன், எதிர்க்கட்சியிலே நின்ற தனது உறவினர்களையும், ஆசாரியர்களையும் கண்டு, அவர்களையெல்லாம் கொல்லவேண்டுமேயென்று மனங்கவன்று தயங்குகின்றான் அந்த நிலையிலே அவனுக்குதுக்கம் மேலிடுகின்றது. கலக்கம் அடைகின்றான். அந்தத்துக்கத்தை நீக்கிக் கலக்கத்தினைத் தெளிய வைப்பதற்காக அமைந்ததே கீதோபதேசம்.

இக்கீதோப தேசமானது மனித வர்க்கத்தினால் சிறப்பிக்கப்படுவதற்குக் காரணம் இதனது தெய்வீகத்தன்மையே. இது இறைவனின் அவதாரம் எனக்கருதப்படும் கண்ணனாலேயே அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்ட இக்கீதையானது சாதாரண மனிதனாலேயே உபதேசிக்கப்பட்டிருந்தால் இது பெரும் சிறப்பினைப் பெற்றிருக்கும் என்று கூற முடியாது. விஷ்ணுவின் அம்சமான கண்ணன் வாயினால் மக்கள் வாழ்க்கை நெறியை அமைத்துக் கொள்வதற்கு ஏற்ற வழியினை வகுத்து கூறுவதால் இந்நூல் தெய்வீகத் தன்மை பெற்று சர்வதேச அரங்கிலே ஒரு தனி மதிப்பைப் பெற்றுள்ளது.

அடுத்ததாக பிரஸ்தான திரயத்தில் ஒன்றாக பகவத்கீதை இடம் பெறுவதால் இது சிறப்பிடத்தைப் பெறுகின்றது. அதாவது பிரம்ம சூத்திரம், உபநிடதம் பகவத்கீதை என்பன பிரஸ்தான திரய நூல்களாக இடம் பெறுகின்றன. இம்மூன்றினுள் கருத்து வேற்றுமை கிடையாது – இந்து மதத்திற்கு சாஸ்திரம் எது என கேள்வி வருமிடத்து பிரஸ்தான திரயம் என கூறல் வேண்டும். இவைகளில் அடங்காத வசனங்கள் வேறு எந்த நூலிலும் இல்லை என்றே கூறலாம். இவ்வாறு பிரஸ்தானதிரயங்களினுள்ளே ஒன்றாக பகவத்கீதை எண்ணப்படுகிறது என்றால் அதன் சிறப்பை என்னவென்று கூறுவது.

பகவத்கீதையானது ஒரு உபநிடதமாக காணப்படுவதனாலும் அது சிறப்பிடத்தைப் பெறுகின்றது. உபநிடதங்கள் வேதங்களினின்று வந்தவை. கீதையோ மகாபாரதத்திலிருந்து வந்தது. ஆயினும் இது உபநிடதம் என்று அழைக்கப்படுகின்றது. ஏனெனில் எல்லா உபநிடதங்களின் சாரம் இதில் உண்டு. உபநிடதங்களை பசு என்று வைத்துக் கொண்டால் பகவத்கீதை அது தரும் பால் எனக் கூறலாம். போகுமிடங்கள் எல்லாம் பசுவைக் கொண்டு போக முடியாது. பாலை எங்கு வேண்டுமானாலும் பாதுகாத்துக் கொண்டு செல்லலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது கீதையை நன்றாக அறிந்து கொண்டவன் பின்பு உபநிடதங்களில் அடங்கியிருக்கும் கோட்பாடு யாது என்று கவலைப்பட வேண்டியதில்லை. எல்லோருக்கும் எளிதில் விளங்காத உபநிடதங்களை விளங்கும்படி வழி செய்தவர் கிருஷ்ண பரமாத்மா.

அடுத்தாக பிரம்ம வித்தை பற்றி எடுத்துக் கூறுவதில் சிறப்பிடத்தை பெற்றுக்கொள்கிறது. எதை அறிந்தால் அறிவு பூர்த்தியாகின்றது. எதையறிந்து கொண்டால் இயற்கையின் மர்மம் விளங்கிவிடுகின்றது? மூலதத்துவத்தை அறிந்த பின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் விடை கிடைத்துவிடும் என்பதை கீதை எடுத்து வழி காட்டுகின்றது. பிரம்ம வித்தை புகட்டு வதுதான் கீதையின் நோக்கமாகும். அர்ச்சுனன் கேட்டது போர் புரிவதா? பின்வாங்குவதா? என்பதாம். இதற்கு இரண்டில் ஒன்றை இயம்புவதற்குப் பதிலாக பிரமத்தைக் (கடவுள்) பற்றிய அறிவை ஏன் பகவான் எடுத்துக் கொண்டார். அப்போதைக்கப் போது உண்டாகும் சந்தேகங்களை அகற்றி வைப்பது ஓர் உதவி. புதிய சந்தேகம் பிறப்பதற்கு இடம் இல்லாது ஐயங்கள் அனைத்தையும் அறவே அகற்றி வைப்பது உயர்ந்த உபகாரமாகின்றது. மனிதன் ஒவ்வொருவனும் தன் அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகக் கூடிய ஒரு மேன்மையான கடவுள் தன்மையை அவன் அடைவதற்கு வழிகாட்டும் அறிவை பகவத்கீதை எடுத்துக் காட்டுகின்றது. எனவே பகவத் கீதையால் ஒருவன் அடைவது என்ன? மனிதனது இறுதியான குறிக்கோளைப் புகட்டுகின்றது. நமக்குள்ளே இருக்கும் கடவுளைக் கண்டு நாமும் அந்தக் கடவுளாகவே ஆகிவிடுவதுதான் பகவத்கீதையால் நாம் பெறத்தக்க பெரும் பேறாகும்.

இது மட்டுமல்ல இந்தப் பேறு நாம் இறந்த பிறகு, இவ்வுலகத்தை விட்டு வேறு எவ்வுலகத்தையோ போய் அடையப்படுவது அல்ல. இவ்வுலகத்திலேயே இப்போது கூட நாம் அடையலாம் எனவும் கீதை வழி காட்டுகின்றதில் முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளதை நாம் காணலாம்.

ஆன்மா பற்றியும்' கன்மம் மறு பிறப்புப் பற்றியும் கீதை எடுத்தியம்புவதில் சிறப்பிடத்தைப் பெறுகின்றது. கீதையானது, ஆன்மா ஒன்று உண்டு. உடல் அழிந்தாலும் ஆன்மா அழிவதில்லை. ஆன்மா மீண்டும் அது செய்த செயலுக்குத் தக பிறவி எடுக்கும் என்பதை தத்துரூபமாக விளங்கச் சொல்கின்றது.

அர்ச்சுனன் போர்க்களத்தில் எழுந்த மயக்கத்தை போக்கும் பகவான் ''நான், நீ இந்த அரசர்கள் ஆகிய எவரும் முன்பு இல்லாமல் இருந்ததில்லை இந்த உடல்கள் அழிந்து விடுகின்ற காரணத்தால் நாம் இல்லாமலும்'' போய் விடுவதில்லை என்றும் ''பழைய துணிகளைக் களைந்துவிட்டு புதிய துணிகளைப் போட்டுக் கொள்வதுபோல பழைய' உடலங்களை நீத்து ஆன்மா புதிய உடல்களில் குடி புகுந்து விடுகின்றது' என்பதன் மூலம் ஆத்மா கொல்வது இல்லை கொல்லப்படுவதும் இல்லை என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஆன்மா பற்றி, கன்மம் மறுபிறப்பு பற்றி பேசும் கீதையானது ஒழுக்கம் பற்றிக் கூறுவதிலும் சிறப்பிடத்தை வகிக்கின்றது. அதாவது அர்ச்சுனன் எதிரணியினரைப் பார்த்து அவர்களையெல்லாம் அழிக்க வேண்டியிருக்கிறதே என்று குழப்பமடைந்திருக்கும்போது பகவான் அர்ச்சுனனுக்கு சத்திரிய தர்மத்தை (ஒழுக்கத்தை) விளக்கிக்காட்டுகின்றார். அதாவது சத்திரியனுக்குரிய கடமை அதர்மத்தை தவிர்த்து தர்மத்தை நிலைநாட்டுவதே என்பதை விளக்குமுகமாக ''உடல்களை அழிக்க வேண்டியிருக்கிறதே என்று குழப்பமடையாமல் வில்லேந்திப் போர் புரிந்து உன்னுடைய கடமைகளைச் செய், பலனை எதிர்பாராதே'' என்று கூறி ''அரசனது உயிரிலும் பெரிதானது போர் புரிவதால் அறம் வளர்க்கப்படுகின்றது. போரில் இருந்து விலகுவதால் மறம் மேலோங்குகிறது'' என்று அரச தர்மத்தை எடுத்து விளக்குகின்றார்.

மேலும் ஒருவன் கடமையை செய்து பலனை எதிர்பாராதவனாக, நடுநிலைமை உடையவனாக மனவமைதி உடையவனாக, பஞ்சையக்ஞங்களை செய்பவனாக அகங்காரம் மமகாரம் இல்லாதவனாக, அன்பு பொறுமை சத்தியம். நேர்மை, கொலைசெய்யாமை முதலிய பல நல்ல பண்புகளை உடையவனாக இருக்க வேண்டும் என்று பல ஒழுக்கக்கருத்துக்களை வலியுறுத்திக் காட்டுகின்றார் கிருஷ்ண பரமாத்மா

மேலும் முத்தியைப் புகட்டுவதில் அது மேலாம் நிலையைப் பெறுகின்றது. வாழ்கையின் குறிக்கோள் முத்தி என்பதை இது நன்கு தெளிவுப்படுத்துகின்றது. எல்லா சமயங்களும் இறுதியாக கடவுளை அடைந்து பேரின்பப்பெருவாழ்வை அடைவதைக் கூறுகின்றன. இறந்த பின் அடையும் நிலை அது. ஆனால் கீதை ஆன்மா உடம்புடன் இருக்கும் போதும் இவ்வுலக வாழ்க்கையில் ஜீவன் முத்தியடையலாம் என்றும் கூறுகின்றது.

கர்மத்தை இரண்டு பாங்குடையாத பிரித்து வைப்பார் உளர். ஒன்றை பரமாத்தியத்திற்குரியது என்றும் மற்றையதை இகலோகத்திற்குரியது என்றும் அன்னவர் கருத்துகின்றனர். கீதையானது கர்மத்தை இரண்டாகப் பகுக்கவில்லை. ஆகையால் மனிதன் புரியும் கர்மத்தை அது மேலானது இது கீழானது எனப் பாகுபடுத்துவதில்லை. நல்வாழ்க்கை வாழத் தெரிந்தவன் கடவுள் வழிபாடு போன்ற மேலாம் கருமத்தை கெடுத்து பந்த பாசத்துக்குரியதாக்கி விடலாம். வினைகளை எல்லாம் மேலாம் வினைகளாக மாற்றக் கற்றுக் கொடுப்பது பகவத்கீதையே, இல்வாழ்க்கை நெறிக்குரிய கோட்பாடு இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

பகவத் கீதைக்கு அமைந்துள்ள தனிச் சிறப்புகளுக்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு. அதாவது அது ஏக காலத்தில் சுருதியாகவும் ஸ்மிருதியாகவும் விளங்குகின்றது.

சுருதி என்பது பரம்பரை பரம்பரையாக காதால் கேட்டு வந்தது. அப்படி வந்ததெனினும் அதன் சொல்லமைப்பை யாரும் மாற்றி வைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்மிருதி என்பது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப்பட்டது எனப் பொருள் படுகின்றது சமூக வாழ்க்கை சம்பந்தமான கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங் களுடன் ஸ்மிருதி எனப் பெயர் பெறுகின்றது. இவை காலத்திற்கும் இடத்திற் கும் ஏற்ப மாறியமையும். உதாரணமாக மனுஸ்ருதியைக் கொள்ளலாம். ஆனால் கீதையை மாற்றியமைக்க முடியாது. கீதையில் சமூக நடைமுறை யாலும் எக்காலத்திலும் பொருந்தும் பொதுவான கோட்பாடுகள் உண்டு. மாறுபாடு அடையும் உலகில் மாறுபாடு அடையாத கோட்பாடுகளையும் கீதாசாத்திரம் கொண்டுள்ளது. ஆகவே இது எக்காலத்தும் எல்லா சமூகங் களுக்கும் உதவுகின்ற ஸ்மிருதியாக விளங்குகின்றது.

இவைதவிர கீதையின் சிறப்புகளுள் இன்னொன்று யோக சாத்திர மாக விளங்குவது. மனத்தின் விருத்திகளை ஒழிப்பதே யோகம் என்கிறார் பதஞ்சலி முனிவர். அதையே வேறொரு வகையாக கூறுகிறது பகவத் கீதை. எந்த நிலையிலும் மனம் தன் அமைதியை இழக்காமல் இருப்பதே யோகம் என்பது கீதை வகுக்கும் இலக்கணம் அத்தகைய அசைவில்லாத அதாவது அசைக்கமுடியாத அமைதி நிலையை ''சமத்துவம்'' என்ற சொல்லால் கீதை குறிப்பிடுகின்றது. இதையே பகவான் 'சமத்துவம் யோகம் உச்சயதே'' என் கிறார். கீதையில் 18 அத்தியங்களும் ஒவ்வொரு 'யோகம்' என்ற பெயருடன் வந்தமைகிறது. மனதின் பண்பாடு (யோகம்) ஆகின்றது. மனம் தளர்வுறு வோர்க்கும், துயருறுவோர்க்கும் யோகம் இல்லை என்பது கீதையின் கோட்பாடு.

இந்த 18 யோகங்களையும் மேலும் தொகுத்து அடக்கிவிடலாம். அவை கர்ம யோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம், இந்த நான்கு யோகங்களிலும் வேற்றுமைகளையோ, தாரதம்மியத்தையோ பாராட்டுகின்ற அறிகுறியை காணமுடியாது என்கின்றது பகவத்கீதை. இங்கு கருமத்தோடு உயர்ந்த ஞானம் இணைக்கப்படுகின்றது. பிறகு பக்தியும் ஒரே பாங்கில் பொருட்படுத்தப்படுகின்றது. இன்னோர் இடத்தில் யோகமும் பக்தியும் ஒரே பாங்கில் பொருட்படுத்தப்படுகின்றது. இங்ஙனம் எல்லா யோகமும் உயர்வுடை யதே என்று கூறுவது கீதையின் சிறப்பியல்பாகும்.

பகவத்கீதையை பகவான் மக்களுக்கு போதித்த போதனை முறையிலும் சிறப்பிடத்தை வகிக்கின்றது. ஸ்ரீமத் பகவத்கீதை போதனா முறையில் மிக எளியதே. படிக்கின்றவர்களுக்கு விளங்காத பகுதி மிகக் குறைவு. இவ்வளவு எளிதாக இருப்பது மட்டுமல்ல ஆழ்ந்ததாகவும் இருக்கின்றது. சிறப்புப் பெறும் கீதையை ஒரு கொலை நூல் என்றும் சந்நியாசி நூல் என்றும் கூறி அதைத் தாக்குபவர்கள் ஒரு சிலர் இருக்கின்றார்கள். அறிவிலிகள் ஒரு நூலை முறை யாக அறிந்து கொள்ளவில்லையானால் அது அந்த நூலின் குற்றமாகாது கீதையைப் பற்றி காந்தியடிகளே அழகாக விளக்கம் சொல்லி இருக்கிறார். கீதை ஒரு உலக மாதா. அவள் யாரையும் புறக்கணிப்பதில்லை அவளுடைய கதவுகள் எல்லோருக்கும் திறக்கப்பட்டிக்கின்றன. கீதையிடம் ஈடுபாடு வைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பவனுக்கு ஏமாற்றம் இன்னதெனத் தெரியாது. கீதையை சரியானபடி உணர்கிறவன் விரிக்கமுடியாத இன்பத்திலும் அமைதியிலும் திளைக்கின்றான்...'' என அதன்சிறப்பை எடுத்துக் கூறுகின்றார்.

அடுத்து சந்நியாசி நூல் என்று கருதும் சிலர் பெண்டாட்டி பிள்ளைகளைத் துறந்து மொட்டையிட்டு ஆண்டியாய் திரிவோர்களுக்கு எழுதப்பட்ட நூல் என்று நினைக்கின்றார்கள். இதைக் காட்டிலும் ஆச்சரியமான தப்பிதம் கிடையாது. கீதையை கேட்டவனும் சந்நியாசி அல்ல, சொல்லியவனும் சந்நியாசி அல்ல, பாண்டவர் ஐவருள் பகவான் ஏன் அர்ச்சுனனுக்குப் புகட்டினார்? இங்கு தான் விடை இருக்கின்றது. வீமனிடத்தில் இருந்தது முரட்டுத்தனம். அது கிட்டத்தட்ட விலங்கின் பாங்கு. கீழ்மையே வடிவெடுத்த அவனுக்கு யோக சாஸ்திரம் உதவாது. கீழ்மகன் அதை கேட்கவும் மாட்டான். மூத்தவன் தர்மராஜன் போன்று தெய்வத்தன்மையில் நிலை பெற்றிருப்பவனுக்கு யோக சாஸ்திரம் தேவையானதல்ல. அர்ச்சுனனுடைய பாங்கு இவ்விருவருடைய பாங்குகளிலும் நடுவில் இருக்கும் மனிதத்தன்மை காணப்பட்டதாலேயே அவனுக்கு இக்கீதாசாத்திரத்தை பகவான் திருவாய் மலர்ந்தருளினார். அர்ச்சுனன் மக்களுக்கு சிறந்த வழிகாட்டி ஆகின்றான். மக்கள் நிலையில் இருப்பார் எல்லோரும் கீதையைக் கற்கவும் அதன் படி நடக்கவும் ஆளாகின்றனர். அது பற்றிய விளக்கம் புரியாதவர்களே உன்னதமான பகவத் கீதையை சந்நியாசி நூல் என்று பகர்கின்றார்கள்.

எனவே கீதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கும், நாட்டிற்கும், இனத்திற்கும் உரிய ஒரு நூல் அல்ல. ஒரு மனிதன் எந்தக் காலத்தை சேர்ந்தவன் ஆயினும் இந்த உலகியலில் துன்பங்கள் வந்து தாக்காமல் காப்பாற்றி இடையறாத இன்பம் நிறைந்த ஒர் உயரிய வாய்ப்பை அவனுக்கு அளிக்கக்கூடிய ஒப்பற்ற நூலது. இதனால் தான் சாதி, சமய வேறுபாடுகள் இன்றி எல்லோராலும் ஒருங்கே கீதை பாராட்டப்பட்டு இந்து சமய தத்துவ நூல்களுள் சிறப்பிடத்தைவகிக்கின்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பன்னிரு திருமுறைகளின் தொகுப்பும், அதன் சிறப்பும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

தெய்வத்தன்மையுடைய அருட்பாக்களின் முறையான தொகுப்பு என்பது திருமுறை என்பதன் பொருளாகும். இத்திருமுறைகள் தமிழ், வேதம், தோத்திர நூல்கள், திருப்பதிகங்கள், திரு நெறித் தமிழ் எழுது மறை என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. சிவனடி மறவா சிந்தையரான மெய்யடியார்கள் பலர் காலத்திற்கு காலம் இறைவன் மீது அருட் பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கின்றனர். இவற்றுள் சம்பந்தரின் தேவாரப் பதிகம் தொடக்கம் சேக்கிழாரின் பெரியபுராணம் வரை பாடப்பட்ட பாடல்கள் பலவற்றின் தொகுப்பே பன்னிரு திருமுறைகளாகும். இத் திருமுறைகள் பிரணவத்தின் விரிவாக உள்ளன. இவை ஔகார உயிரொலியில் 'தோடுடைய' என்று தொடங்கி 'உலகெலாம்' என்று மகர ஒலியில் முடிகின்றன.

இத்திருமுறைகளை தொகுத்தவர் நம்பியாண்டார்நம்பி. தொகுப்பித்தவர் இராஜ இராஜ சோழன் தேவாரப்பதிகங்கள் சிலவற்றை' அன்பர்கள் உரையை விரிவாகக் கேட்டு மகிழ்ந்தான். ஏனைய தேவாரத் திருப்பதிகங்களையும் சேகரிக்க வேண்டும் என ஆசைப்பட்டான். அவற்றைத் தேடும் முயற்சியில் இறங்கினான் முயற்சி பயனளிக்கவில்லை. பின் பொல்லாப்பிள்ளையாருக்கு பூசை செய்து வந்த நம்பியாண்டார் நம்பியின் பெருமையை அறிந்து அவரது உதவியை நாடினான். நம்பியாண்டான் நம்பியின் மூலம் தில்லையில் சிற்றம்பலத்திற்கு மேற்கே ஓர் அறையினுள் இருக்கின்றதென்பதை அறிந்தான். உடனே நம்பியாண்டார் நம்பியையும் அழைத்துக்கொண்டு தில்லையை அடைந்தான். அங்குள்ள அந்தணரோ 'தேவாரம் பாடிய' மூவரும் வந்தால் மட்டுமே தேவார ஏடுகள் இருக்கும் அறையின் கதவு திறக்கும் என்றார். உடனே அரசன் மதிநுட்பத்தால் மூவரது சிலைகளையும் கோயில் வலம் வர 'மூவரும் வந்தனர் கதவைத் திறக்கலாம்' என்றான். பின்னர்கதவு திறக்கப்பட்டது. ஆனால் அங்கே ஏடுகள் கறையானால் மூடப்பட்டுக் கிடந்தன. அரசன் சலிப்புற்ற நிலையில் அசரீரி 'வேந்தா இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை அழியாது வைத்திருந்தோம்' என்று கேட்டது. மகிழ்ந்த வேந்தன் நம்பியாண்டான் நம்பியிடம் திருமுறைகளை வகுத்துத்தரும்படி வேண்ட. அவரும் அவற்றை பதினொரு திருமுறைகளாக வகுத்தார். (சேக்கிழார் பெரிய புராணம் பின்னால் 12ம் திருமுறையாக சேர்க்கப்பட்டது)

திருமுறையில் முதல் ஏழு திருமுறைகளும் 'அடங்கன் முறை' எனப்படும் இவை தேவாரங்கள் எனவும் கூறப்படுகின்றன. இவற்றை அருளிச் செய்த சம்பந்தர்' அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் 'தேவார முதலிகள்' என அழைக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞான சம்பந்ர்த பாடியவற்றுள் செல்லரித்தன போக முன்நூற் றெண்பத்தி நான்கு பதிகங்கள் கிடைத்தன. இவை முதன் மூன்று திருமுறையாக வகுக்கப் பெற்றன. இவரது பாசுரங்களை நோக்குமிடத்து இவர் இயற்கை வனப்பில் ஈடுபாடு உடையவர் என்பதையும் அவ்வனப்பில் தெய்வீக காட்சியை கண்டு இன்புற்றுப் பாடி இருப்பதை அவதானிக்கலாம். சம்பந்தர் பாடல்கள் கோயிற்சிறப்பு ஆகிய அம்சங்கள் சிறந்து விளங்குகின்றன.

திருநாவுக்கரசர் பாடியவைகளாகக் கிடைத்த மூற்நூற்றெழுபத்து மூன்று பதிகங்கள் அடுத்த மூன்று திருமுறையாக வகுக்கபெற்றன. இவரது தேவாரங்களில் மிகுதியாகக் காணப்படுவது கழிவிரக்க உணர்வு, தாம் சமண சமயத்தைச் சார்ந்திருந்த காலத்தில் சிவனை சிந்தியாது வாழ்ந்ததை எண்ணி கவலைப்படும் பரிவுணர்வு பல பாடல்களில் காணப்படுகிறது. அப்பர் பாடிய பாடல்களுள் தாண்டவம் தனிச்சிறப்பு வாய்ந்தது. வாகீசருடைய பாடல்கள் பல இளமை, யாக்கை, செல்வம் ஆகியவற்றின் நிலையாமையை எடுத்துக்கூறிய இறைவன் திருவருளாகிய செல்வமும் அது பெற வாழும் வாழ்வுமே மேலான செல்வம் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றன.

சுந்தரர் பாடிய திருப்பதிகங்கள் 100 இருந்தன. இது ஏழாம் திரு முறையாக வகுக்கப்பட்டுள்ளது. இவரது பாடல்கள் செந்தமிழ்நயம் மிக்கவை உலக போகங்களை அனுபவித்து வாழ்வதற்கென மணவினை மேற்கொள்ள முயன்றபோது இறைவனாற் தடுத்தாளப்பட்டு ஞானம் பெற்றவர் சுந்தரர். உலகியல் இன்ப துன்பங்கள் மத்தியில் உடலளவில் வாழ்ந்தவாறே உள்ளத்தை இடையறாது இறையுணர்வினைச் செலுத்தி யோக நிலையில் பயின்றவர். இறைவன் உள்ளத்துள்ளே நிற்கும் ஒண் பொருள். பூவும் நீரும் கொண்டு பூசனை புரியவல்லார்க்கு ஞானம் கைகூடும் என்ற கருத்தை அழுத்தமாய் உணர்த்தியவர் சுந்தரர். திருத்தொண்டர் தொகை பாடிலரேல் திருத் தொண்டர் புராணம் எழுந்தருளியிருக்காது. அடியார் பெருமைகளை நாம் அறிந்திருக்கவும் முடியாது.

மாணிக்கவாசகர் பாடிய திருமுறை எட்டாந்திருமுறையாக வகுக்கப் பட்டுள்ளது. இதில் திருவாசகமும் திருக்கோவையாரும் அடங்குகின்றன. திரு வாசகம் ஐம்பத்தொரு திருப்பதிகங்களுடன் திகழ்கின்றது. அவைகளில் அடங் கியுள்ள பாடல்களின் தொகை அறுநூற்று ஐம்பத்தாறு. சொல் அழகு பொருள் அழகு ஆகிய இரண்டும் சேர்ந்து திருவாசகத்தை உச்சஸ்தானத்தில் வைத்துள்ளது. இதில் மேலான கருத்துக்களும், தத்துவங்களும் அடங்கியுள்ளன திருவாசகத்தில் திகழ்கின்ற பரம் பொருள் விளக்கம் அனுபூதிமான்களுக்குப் பரவசத்தை உண்டுபண்ணுகின்ற அருள் விருந்தாம். மனிதனுடைய உள்ளத்தில் புகுந்துள்ள சிற்றியல்புககளைக் களையும் முறைகள், பரத்தை நாடுபவர்கள் பெறவேண்டிய பேரியல்புகள், அதை வளர்க்கும் முறைகள். அருள் தாகம் கொள்ளுதல், அருளைப் பெறுதல், அருளில் ஆழ்ந்து தோய்தல், பரமனைக் காணுதல், பரமனோடு தொடர்பு கொள்ளுதல், பரமனிடமிருந்து பெற வேண்டியதைப் பெறுதல், பக்தியைப் பெருக்குதல், பக்தி பராபக்தியாக வடி



126883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடுத்தல், தர்சனம் பெறுதல், பரத்தினில் இரண்டறக்கலத்தல். இத்தனை வித தெய்வீக படித்தரங்களும் அடங்கப்பெற்றது திருவாசகம். அதில் எப்பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அது ஜீவனை சிவசொரூபமாக்க வல்லதாம். அது ஆத்ம சாதங்களுக்கு அரியதொரு அருள் விருத்தம்.

மேலும் தத்துவக் கருத்துக்கள் இந்நூலில் பொதிந்து காணப்படுகின்றது; இறை பற்றிய உண்மைகள் மாயாதத்துவம், மும்மலம் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளன, ''திருவாசகத்திற்கு உருகாதகர் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்னும் விதத்தில் திருவாசகம் முதன்மை [பெற்ற ஒன்றாக விளங்குவதை நாம் காணலாம். திருவாசகத்திற்கு குறித்த பெரும்பாலான கருத்துக்கள் திருக்கோவையாரில் கனிநலம் மிளிரப் பேபசப்பட்டுள்ளன சாத்திரக்கருத்துக்களும், கூத்தப் பெருமான் கீர்த்தியும், கோயிலின் பெருமையும் இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் பேசப்படுகின்றன.

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. திருவிசைப்பா என்பது இறைவனின் இசை (புகழ்) பாடும் பாடல் தொகுதி என்பது பொருள். இத் திருவிசைப்பாவை ஒன்பது அடியார்கள் பாடினார்கள். திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்திக்காடவநம்பி கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலயமுதனார், புருடோத்தமநம்பி, சேதுராயர் முதலியோராவர்.

திருப்பல்லாண்டு ஒரு தனிப்பதிகம். இது 13 பாடல்களைக் கொண்டது. அதை சேந்தனார் என்பார் பாடியருளினார் இறைவன் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என அவரை வாழ்த்துவது இப்பதிகமாகும். மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் தேர் அசையாது நின்ற வேளை சேர்தனார் இப் பல்லாண்டு என்னும் பதிகம் பாடி தேரை அசைவித்தனர் என்பர்

திருமூலர் அருளிச் செய்தவை பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இதில் 3000 திருப்பாடல்கள் உள்ளன. இதில் அன்பு, ஞானம், ஒழுக்கம், பக்தி, உண்மை, சமயம், ஆன்மா, திருவருள், வேதம், ஆகமம், பஞ்சாக்கரம், குருபாரம்பரியம். குருமடவரலாறு முதலிய பல பகுதிகள் கூறப்பட்டுள்ளன. யோகநெறி பற்றி நூல் முழுவதும் பரக்கக் கூறப்பட்டுள்ளது. ''அன்பே சிவம்'' என்பது திருமந்திரத்தின் மூலப் பொருள். திருமந்திரம் சமய தத்துவ நூலாக விளங்குவதோடு ஒரு வாழ்க்கை நூலாகவும் திகழ்கின்றது. இதில் மழை, செல்வம், ஆட்சி, கல்வி வேள்வி, ஒழுக்கம், காலநிலை, உடலோம்பல, ஆயுள்வகை, மருத்துவமுறை, பிரணயாமம், நாடிநலம் அறிவொளி, அறிதுயில் முதலிய பல்வகை வாழ்க்கை குறிப்புகளையும். கூறுகின்றது

நாற்பது பிரபந்தங்கள் பதினொரந்திருமுறையாக வகுக்கப்பட்டது. இவற்றை இறைவன் முதலாக நம்பியாண்டார் நம்பி ஈறாகப் பன்னிரு அடியார்கள் அருளிச் செய்தார்கள். இவர்கள் பாடிய பிரபந்தங்களில் 1388 திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் உள்ளது. இத்தொகுதியில் உள்ள முதலாவது திருப்பாடல்களாகிய திருமுகப்பாசுரத்தை பாடியவர் திருவாலவாய் இறைவன் திருவாலயாய் இறைவனோடு காரைக்கால் அம்மையாரர், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணர், இளம் பெருமானடிகள், அதிராவடிகள் பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி முதலியோர் இத்திருமுறைகளை அருளிச் செய்தனர்.

இந் 40பிரபந்தங்களில் முக்கியமானவற்றைப் பார்க்குமிடத்து காரைக் காலம்மையாரது பாடல்களில் அடிப்படைப் பெகருள் திருவாலங்காட்டு திரு நடனம் என எண்ணப்படுகிறது. சுடுகாட்டுக் காட்சியில் தோன்றிய ஞானம், உள்ளம் உருக்கும் இனிய பாடல்களாக அமைந்துள்ளன.

சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத் தந்தாதி இறைவன் புகழ்பாடுவதெல்லாம் வாழ்க்கை துன்பத்திலிருந்து விடுபடுவதற்கே என்பது தான். இதன் கருப்பொருள். திருவாரூர் மும்மணிக்கோவையில் பெரும்பாலக னவை இறைவனிடத்து மானிட மகளிர் காதல் கொண்டதாகப் பாடப் பெற் றவை. திருக்கைலாய ஞான உலாவில் சிவபெருமானே தலைவன்.

ஐயடிகள் காடவர்ககோன் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோயிலைக் குறிப்பிடுகின்றது. இப் பாடல்கள் நிலையாமையை வற்புறுத்துவன வாய் அதனை உணர்ந்து. வாழ்க்கையில் இறைபக்தியில் நிற்குமாறு அறிவுறுத் துவன.

பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டது பெரியபுராணம். இயற் றியவர் சேக்கிழார். இதிலே பதினொரு சருக்கங்களில் 4286 திருப்பாடல்கள் யாவும் பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்டவையாகும். சுந்தரரை கதாநாயகனாகக் கொண்டு 63 நாயன்மார்களின் வரலாறு அவர்கள் செய்த திருத்தொண்டுகள் கூறப்பட்டுள்ளன. இது அவர்கள் புகழ் பாடுவதனையே விழுப்பொருளாகக் கொண்டது இந்நூல் ஞானிகளைப் பற்றி பேசும் ஞானநூல். தமிழ்சுவை பக்திச்சுவை நாடுவோர்க்குப் பெருங் காப்பியம் உலகியல் நெறி தேடுவோர்க்கு உலகப் பொது உண்மைகளை உணர்த்தும் வாழ்க்கை நூல், வரலாற்று உண்மைகள் தேடுவோர்க்கு சிறந்த சரித்திர நூல்.

இதில் முப்பொருளியல்பு நிறைய உண்டு நாற்பாதம் தேவாரச் சிறப்பு. பொருளியல்பு, அறத்தின் சிறப்பு, ஆட்சிமுறை, நீதிமுறை, பக்தி வைராக் கியம் போன்ற பல விடயங்களும் கூறப்பெற்றுள்ளன.

இத்திருமுறைகளின் சிறப்பை பற்றிப் நாம் நோக்குமிடத்து தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் பெருமை தருவனவற்றுள் பன்னிரு திரு முறைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. திருமுறைகளைப் பாடியவருள் ஆலவா யிற் கோயில் கொண்டெழுந்தளிய இறைவனும் ஒருவர் என்பதால் திருமுறைகளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தனிப்பெருமை. அத்துடன் திருமுறைகளைப் பாடியயோர் தம்மை இறைவனே பாடுவித்தான் என்றே கூறியுள்ளனர்.

இத்திருமுறைகளின் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என அக்காலத்தில் வகுக்கப்பெற்றிருந்த நால்வகை வருணங்களையும் சேர்ந்தவராவர். எந்தவருணத்தவர், எந் ஆச்சிரமத்தவர், எத்தொழிலினர். எக்கோலத்தவர் என்றாலும் இறைவன் அடியவரது அன்பு, பக்திக்கே முதன்மை கொண்டு ஆட் கொண்டார்.

சமயம் என்பது இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள சம்பந்தமாகும் இச்சம்பந்தம் தோத்திரங்களால் அமைவது, தோத்திரங்களில் தலைசிறந்தவை திருமுறைகள். அர்ச்சனை என்பது பாட்டேயாகும் என்று இறைவனே அருளியுள்ளார். தோத்திரங்கள் வெறும் மொழியோ, மந்திரங்களோ அல்ல, இவை உயிரின் உணர்ச்சிக்கு எழுச்சியைதந்து இறைவன் பால் சேர்க்கவல்லன தோத்திரங்கள் இல்லையேல் சமயமும் இல்லை. திருமுறைகளைப் படிக்குந் தோறும் நெஞ்சு உருகும், அன்பு பெருகும், மனமும் இளகும்.

தோத்திரங்களாய் அமைந்த திருமுறைகள் பல அற்புதங்களைச் செய்தன. திருமுறை ஆசிரியர் சிவசரணம் பதியப்பெற்றவர். ஆதலால் அவர் தம் திருமுறைகளுக்குத் தெய்வத்தன்மை உண்டு ''பேயடையா பிரிவெய்தும்'' என்னும் திருமுறையை பக்தியோடு ஓதியவருக்கு ஞானக் குழந்தை பிறந்தது ''சுண்ணவெண் சந்தனச் சாத்தும்'' எனத் தொடங்கும் திருமுறையை அருளியவரை கொல்லவந்த யானை வணங்கித் தூரப்போனது. ''அத்திரமாவது ஐந்தெழுத்துமே'' என்றதும் சிவனடியாரை வழிமறித்த பாதகர் தலைமேல் இடிவிழுந்தது. எனவே திருமுறைகள் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்தன என்பதிலிருந்து அவற்றின் பெருமைகளை அறிய முடிகின்றது.

தாயுமான சுவாமிகள் இறைவனைப் பார்த்து சுவாமி ''தேவார முதலிகள் பாடியருளிய இனிய தேவாரங்களைக் கேட்டருளிய உம் திருச்செவிகள் மூடனாகிய அடியேன் பாடும் பாடல்களைக் கேட்குமோ?'' என்று கேட்பதன் மூலம் திருமுறைகளின் சிறப்பு வெளிப்படுகின்றதை நாம் நோக்கலாம்.

இத்திருமுறைகள் நல்லொழுக்கத்தைக் கூறுவன. சிவவழிபாட்டையும் அவரை அடையும் நெறிகளையும் கூறுவன! உலக இன்பங்களை வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை அளிக்கும் தன்மை பெற்றன. மக்கள் மனதை இறையின் பத்தில் ஆழச் செய்வன.

இத்திருமுறைகளை ஓதுவதனால் நமது ஆணவம் நீங்கி நல்வாழ்வு கிடைக்கின்றது. ஓதுவார் உள்ளங்களை தூய்மையாக்குகின்றது கணநாதர் என்பார் திருமுறைகளை ஓதியும், பிரதி செய்தும் நற்பயனை அடைந்தார். திருமுறைகள் நம்பினோரைக் காப்பவை. நோய் தீர்ப்பவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞான சம்பந்தர் உலகத்தவரைப் பார்த்து ''உங்கள் பழி நீங்கத் தேவாரத்தை ஓதி உய்யுங்கள், இசை பாடுங்கள். அவற்றை எழுதி நல்லவரா குங்கள்'' என்று அருளியுள்ளார்.

திருநாவுக்கரசர் ''மனிதர்கள் நீங்கள் நிலை பெற்று நல்ல பதவியை அடைதல் வேண்டுமாயின் அன்பு கனிந்த மனத்தோடு கண்களில் நீர்வழிய இறைவன் புகழ் பாடுங்கள்'' என்று அருளியுள்ளார்.

இவர்கள் காட்டிய வழி இன்று இத்திருமுறைகள் ஆலயங்களிலும், இல்லங்களிலும் தினமும் ஓதப்பட்டு வருகின்றன. இறை வழிபாட்டிலும், எமது சமய நிகழ்சிகளிலும் இத்திருமுறைகளை ஓதுவது இன்று மரபாகிவிட்டது. இன்று கோயில்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்ற வரிசைக்கிரமத்தில் இப்பஞ்ச தோத்திரங்கள் ஓதுவது வழக்கமாகிவிட்டது இப்பஞ்சதோத்திரங்களை ஓதினால் பன்னிரு திருமுறைகளையும் ஓதிய பயன் கிடைக்கும். எனவே நாமும் இத்திருமுறை களை தினமும் ஓதி நல்ல பயன் பெறுவோமாக.

## 3. சங்கரரது அத்வைதக் கோட்பாட்டைக் விளக்கிக் கூறுக:

இந்து மதத்தினது தத்துவார்த்தப் பிரிவுகளுள் வேதாந்தம் ஒன்றா கும். இவ்வேதாந்தமானது உப நிடதக் கருத்துக்களை ஒழுங்குபடத் தொகுத் தமைத்த பிரம சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகைப்படு வதாக அமைகிறது. அதாவது பிரம சூத்திரத்திற்கு எழுதப்பட்ட விளக்க உரைகள் வெவ்வேறு கோணத்தில் நின்றும் கூறப்பட்டனவாதலினால் அவ் விளக்கவுரைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த வேதாந்த பிரிவுகளும் வெவ்வேறு நோக்கில் அமைந்தன. இவ்வகையில் சங்கரர் எழுதிய விளக்கவு ரையை அடிப்படையாகக் கொண்டு அத்வைதம், இராமானுஜர் எழுதிய விளக் கவுரையை அடிப்படையாகக் கொண்டு விசிட்டாத்துவைதம், மத்துவாச்சாரி யார் எழுதிய விளக்கவுரையை அடிப்படையாகக் கொண்டு துவைதம் வேதாந் தத்தில் எழுச்சி பெற்றன. எனவே இனி சங்கரருடைய அத்வைத கோட்பாடு பற்றி ஆராய்வோம்.

பிரம சூத்திரத்திற்கு சங்கராச்சாரியார் எழுதிய விளக்கவுரையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அத்வைத கோட்பாட்டை எடுத்து நோக்கும்போது, இங்கு துவைதம் என்பது இரண்டு என பொருள்படுகிறது. 'அ' என்பது அல்ல என பொருள்படுகிறது. எனவே இங்கு அ + துவைதம் = அத்வைதம். எனவே அத்வைதம் என்பது இரண்டல்ல என பொருள்படும் விதத்தில் சங்கரர் வேதாந்தமானது உள்ள பொருள் இரண்டல்ல, ஒன்றே என்கிறார். சங்கரர் உள்ள பொருள் என்பதற்கு நிலையான அழிவற்ற பொருள் இரண்டல்ல என்பதே சங்கரர் வேதாந்தத்தின் அடிப்படைக் கருத் தாகும். இக்கருத்தினை சங்கரர் எவ்வாறு நிறுவுகிறார் என்பதை இனிக் கவ னிப்போம்.



நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு மதத்தினது அடிப்படைத் தத்துவத்தினைப் புரிந்துகொள்ள கடவுள், உயிர், உலகம் என்ற மூன்று பொருள்களைப் பற்றி என்ன சொல்கிறது என்பதை தெரிந்துகொள்வதே சுலபமான வழியாகும். இவ்வகையில் சங்கரர் இம்மூன்று பொருள்களைப் பற்றியும் என்ன சொல்கிறார் எனக் கவனித்தால் அவரது தத்துவத்தை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம். இம்மூன்று பொருள்களினுள்ளும் உலகம் உயிர் என்பனவற்றை மாயைத் தோற்றமாகவும் முழுப் பொருளின் பகுதிகளாகவும் சங்கரர் எடுத்துக்காட்டி பிரமம் மட்டுந்தான் உண்மை என்றும் உள்ள பொருள் இரண்டல்ல என்றும் சங்கரர் விளக்குகின்றார்.

உலகத்தை ஒரு மாயை தோற்றம் என குறிப்பிடும் சங்கரர் அதற்கு தமது ஆசிரியராகிய கௌடபாதரது கருத்தைப் பின்பற்றினார். உலக தோற்றம் பற்றி சங்கரர் முன்வைக்கும் வாதம் விவர்த்த வாதம் ஆகும். விவர்த்த வாதம் ஆனது காரணத்தை உண்மை என்றும் காரியத்தை பொய் எனக் கொள்கின்ற ஒன்றாகும். இங்கு சங்கரர் உலகத் தோற்றத்திற்கு காரணமான பிரம்மத்தை உண்மை என்றும் அதனால் தோற்றுவிக்கப்பட்ட காரியமாகிய உலகத்தை பொய் என்றும் எடுத்துக்கொள்வார். இவ்வாறு உலகம் மாயைத் தோற்றம் எனக் குறிப்பிடும் சங்கரர் அதனை விளக்கு வதற்கு கயிறு பாம்பாக தெரிதல் என்னும் உவமானத்தைப் பயன்படுத்துகிறார். சில வேளைகளில் கண் பார்வைக்கு, தூரத்திலுள்ள கயிறு பாம்புபோல் தோற்றமளிக்கும். இவ்வாறே பிரம்மமும் உலகமாக தோற்றமளிக்கின்றது. எப்படி அங்கு பாம்பு இல்லையோ அவ்வாறே உலகம் என்பதும் இல்லையாகும். இவ்வாறு கயிறு பாம்பாக தெரிதல் என்ற உவமானத்தின் மூலம் உலகம் ஒரு மாயைத் தோற்றம் என்பதை சங்கரர் விளக்கிக் காட்டுகின்றார்.

அடுத்து ஆன்மாவிற்கு உரித்தான கனவு, நனவு, துரிதம் என்ற மூன்று நிலைகளிற்கும் இடையிலான தொடர்பினைக் கொண்டும் உலகம் ஒரு மாயைத் தோற்றம் என சங்கரர் காட்டுகின்றார். கனவு நிலையில் ஆன்மா இருக்கின்ற போது அதனை உண்மை என்றே கொள்கின்றது. நனவு நிலைக்கு வரும்போது தான் கனவு நிலை என்பது புலனாகிறது. இவ்வாறே நனவு நிலையை கடந்த துரிதநிலைக்கு வரும்போது நனவுலகும் பொய் என்பது புலனாகும். எனவே நனவுலகை பொறுத்த வரையில் எப்படி கனவுலகு பொய்யோ அவ்வாறே நனவுலகை கடந்த துரித நிலையில் நனவுலகும் பொய் கனவுலகும் பொய் எனவே இதன்மூலம் உலகம் என்பது மாயைத் தோற்றம் என சங்கரர் விளக்குகின்றார்.

உலகம் ஒரு மாயைத் தோற்றம் எனக் காட்டியது போலவே உயிர்களையும் ஒன்றான பிரமத்தின் பகுதிகளே அன்றி உண்மையில் உள்ளவை அல்ல. ஓர் ஆன்மா மட்டுமே உண்மை. இந்த ஒன்றே பலவாகத் தோன்றுகின்றது. இங்ஙனம் ஓர் ஆன்மா மட்டுமே உண்மையிலுள்ளது என வாதிப்பதால் சங்கரர் வேதாந்தத்திற்கு ஏகான்மவாதம் எனப் பெயர் ஏற்படலாயிற்று. இதனை விளக்குவதற்கு சங்கரர் முன் வைக்கும் வாதங்களுள் ஒன்று பிரதிவிம்பவாதம். இரண்டாவது அவச்சேதவாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிவிம்பவாதம் என்பது ஒரு பொருளிற்கு பல விம்பங்கள் தோன்றுகின்றன. அவை அனைத்தும் உண்மையாக இல்லை. உலகிற்கு ஒரு சந்திரனுண்டு. உலகில் கடல், ஆறு, குளம், குட்டை, கிணறு போன்ற பல நீர் நிலைகள் காணப்படுகின்றன. இவற்றிலெல்லாம் இச்சந்திரனது பல விம்பங்கள் தோன்றுகின்றன. ஒன்றான சந்திரன் நீர் நிலைகளில் பலவான விம்பங்களாக தோன்றுகின்றது. அதாவது நீர் நிலைகள் எத்தனையோ அத்தனை சந்திரன்களைக் காணலாம். அவற்றுள் எதுவும் உண்மைச் சந்திரன் அல்ல. உண்மையாக உள்ளது மேலே வானத்தில் இருப்பது மட்டுமே. எனவே பரமாத்மாவாகிய பிரம்மம் மட்டுமே உள்ள பொருள். ஆன்மாக்கள் பல என்பது பொய் என்கிறார்.

இவர் கூறும் அவச்சேதவாதத்தை பார்க்குமிடத்து உலகம் எங்கும் வியாபித்திருப்பது ஒரே வெளிதான். ஆயினும் இவ்வெளி உலகிலுள்ளே, எத்தனையோ அடைப்புக்களாலும் தடுப்புக்களாலும் தனித்தனி கூறுகளாக பிரிகின்றது. ஓர் அறையை நிரப்பும் வெளி அந்த அறையின் வடிவத்திற்கேற்பவும் இடம் முதலிய பாத்திரங்களை நிரப்பி நிற்கும் வெளி அவற்றின் வடிவங்களுக்கேற்பவும் பிரிந்து தனித்து நிற்கின்றது.

குடத்துக்குள்ளேயுள்ள வெளியும், குடத்திற்குப் புறத்தே உள்ள வெளியும் ஒன்றுதான். ஆனால் தற்காலிகமான தடுப்பினால் அது வெவ்வேறாகின்றது இதைப் போன்றுதான் ஒரு பிரம்மம் பல ஆன்மாக்களாகத் தோன்றுவதும். எங்ஙனம் ஒரு வெளியே, அடைப்புக்களாலும் தடுக்கப்பட்டுப் பல வெளிகளாகின்றதோ, அங்ஙனமே ஓர் ஆன்மாவே பந்திக்கப்பட்டுப் பல ஆன்மாக்களாகக் காணப்படுகின்றது என்கிறார் சங்கரர்.

இதுவரை பிரமமே உலகமாக தோற்றமளிக்கின்றது என்றும் பிரம்மமே உயிர்களாக தோற்றமளிக்கின்றது என்பதையும் அறிந்தோம். ஆனால் பிரம்மம் உயிர்களாவதற்கும் பிரம்மம் உலகமாவதற்கும் வேற்றுமை உண்டு. இதனை ஓர் உவமை மூலம் சங்கரர் விளக்குகின்றார். கயிறு பாம்பாக தெரிதலில் பிரம்மம் உலகமாகத் தோற்றமளிக்கின்றது என்பதில் அங்கு பாம்பு என்பது உண்மையில் இல்லாத ஒன்றாகிறது. ஆனால் பிரமம் ஆன்மாக்களாக தோற்றமளிப்பதை வெள்ளை மலர் ஒன்றை சிவப்பு கண்ணாடியில் பார்ப்பது போன்றது என சங்கரர் குறிப்பிடுகின்றார். இங்கு மலர் என்பது உள்ள பொருளாகிறது ஏன்றும் அதனது குணாதிசயமே மாறுபட்டுக் காணப்படுகிறது என்றும் கூறுகின்றார்.

இவ்வாறு அமையும் சங்கரரது தத்துவத்திற்கு அடிப்படையாக அமைவது மாயாவாதமாகும். மாயையினைக் கொண்டே உலகம், உயிர்கள் என்பன தோற்றங்களென சங்கரர் நிறுவுகின்றார். எனவே மாயை என்பதைப் பற்றி சற்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. மாயை என்பது அநிர்வசனியப் பொருள் என்பார் சங்கரர். இங்கு வசனியம் உன்பது உள்ளது என்றும், நிர்வசனியம் என்பது இல்லாதது என்றும் அ என்பது அல்ல என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் பொருள்படுவதனால் மாயை என்பது உள்ளதும் அல்ல இல்லாததுமல்ல என்பதாகும். மாயையே உலகம் உயிர்கள் முதலானவைகள் உண்டு எனக் காட்டுதலினால் அது உள்ள பொருள் ஆகிறது. ஆன்மா தன்னைத்தான் உணரும்போது மாயை அழிவதனால் அது இல்லாத பொருளாகிறது. இத்தகைய மாயைக்கு உள்ளதை மறைக்கும் இயல்பான ஆவரணம் இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பான விஷேபம் என்ற இரண்டு சக்திகள் உண்டு. இதனது ஆவரண சக்தியினால் உள்ள பொருளான பிரமம் மறைக்கப்பட்டு விசேஷப சக்தியினால் இல்லாத பொருளான உலகம் தோற்றுவிக்கப்படுகின்றது. இவ்வாறு ஆன்மாக்களைப் பொறுத்த வரையிலும் நடைபெறுகின்றது என்கின்றார்.

இத்தகைய மாயை எங்கிருக்கிறது எனும் கேள்வி பிறக்கும்போது சங்கரர் பிரமத்தின் இரு நிலைகள் பற்றி குறிப்பிடுகின்றார். ஒன்று பூரண நிலையான பிரமம். இரண்டாவது (ஈசுவரன்) மாயையுடன் கூடிய குறைபாடான பிரம்மம். இவ்விரு நிலைகளை பிரம்மதிற்குக்காட்டி ஈசுவரனுடன் கூடியதில்தான் 'மாயை' அமைகின்றது என விளக்குகின்றார். இவ்வாறு சங்கர வேதாந்தமானது மாயையை அடிப்படையாகக் கொண்டு உள்ள பொருள் இரண்டல்ல என்ற தத்துவத்தை நிலைநிறுத்துகின்றார்.

வீடுபேறு அடைவதற்கு ஞானமே முக்கிய வழி என்பது சங்கரரின் அத்துவைதக் கொள்கையாகும். அவித்தை அல்லது அஞ்ஞானமே உலகின் துன்பங்களுக்கு மூலகாரணம். அதனை அறிவால் ஞானத்தாலேயே அகற்றலாம். சீவனின் அவித்தை, அஞ்ஞானம் காரணமாக அது தன்னைப் பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகின்றது. பிரம்மமும், சீவனும் பேதமற்றன என்ற ஞானத்தின் மூலமே முழுமை நிலை எய்தலாம் என்கின்றார் சங்கரர்.

சங்கரர் வேதாந்தத்தைக் கவனித்த நாம் அதன் குறைபாட்டை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகும். உலகம் ஒரு தோற்றம் என்பதை விளக்க கையாளும் உவமை கயிறு பாம்பாகத் தோன்றுவது. கயிறு எங்ஙனம் பாம்பாகத் தோன்றுகின்றதோ அது போலவே பிரம்மமும் உலகாகத் தோன்றுகின்றது. இவ்உவமையிலே கயிறு, பாம்பு, காண்பவன் ஆகிய மூன்று அம்சங்கள் இருக்கின்றன. கயிற்றைப் பாம்பாகப் பார்ப்பதற்கு ஒருவனும் உளன். ஆனால் சங்கரர் கூறும் பிரமம் உலகத்தோற்றம் பெறுவது யாருக்காக? என்பது கேள்வி இவரது கருத்துப்படி ஆன்மாக்களும் பிரமமே. எனவே பிரமத்துக்கே உலகாகத் தோன்றுகின்றதாகின்றது.

மேலும் பாம்பு கயிறாகத் தோன்றும் உவமையிலே கயிற்றைப் போலவே பாம்பும் ஓர் உள்பொருள் எனக் கொள்ளவேண்டியுள்ளது. சங்கரர் கயிறு பாம்பு உவமையை விளக்கும்போது பாம்பு அவ்விடத்தில் இல்லாத பொருளானாலும், அது என்றுமே எவ்விடத்தும் இல்லாத பொருளல்ல. ஏற்கனவே பாம்பு என்ற ஒன்று இருந்தபடியால்தான் கயிற்றைக் கண்டதும் அதன் நினைவு வந்தது. ஆகவே, உலகமும் உள் பொருளாய் இருக்கவேண்டும் என்ற விளக்கத்தைப் பெறுகின்றபோது சங்கரரது தத்துவம் பிழையாகின்றது.

எனவே இவரது மாயைக் கோட்பாடு விளக்கப்படுத்தப்பட முடியாத ஒன்றாக காணப்படுவதனால்தான் இராமானுஜரது விசிட்டாத்துவைதம் தோற்றம் பெற்றது என்பதை அறிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஆச்சிரம தர்மக் கோட்பாட்டினை விளக்கி, நடைமுறை வாழ்க்கையில் அதன் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக:

ஆச்சிரமங்கள் மனிதன் ஒவ்வொரு கட்டமாக முழு வளர்ச்சி பெற துணைபுரிபவை. மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை கடைப் பிடிக்கத் தக்க இவ்விதிகளை பூரண சிரத்தையோடு கடைப்பிடித்தால் அவன் முழு வளர்ச்சி பெற்று ஞான மலர்ச்சி பெற்ற நிறை மனிதனாவான்.

முதலாவது பிரம்மச்சரியத்தில் கல்வி புலன் அடக்கத்துடன் கூடிய ஒழுக்கப் பயிற்சி இடம் பெறுகின்றது, இப்பருவத்தில் எந்தப் புலன் நுகர்ச்சியிலும் மாணவன் ஈடுபடலாகாது. அக்கால குருமார்கள் வனங்களில் குடிலமைத்து எளிய வாழ்வு வாழ்ந்த குருகுலங்களிற்கு மாணவன் சென்று கல்வி பயில்வான். இங்கு மாணவன் வேதங்களையும் சாஸ்திரங்களையும் சிரத்தையோடு கற்க வேண்டும். மாணவன் தன் அன்றாட உணவிற்கு பிச்சை ஏற்றல் வேண்டும், செல்வந்தர், ஏழை என்ற பாகுபாடின்றி மாணவர்கள் ஒன்றாய் வசித்தனர். சிஷ்யன் தன் குருவை ஞான பிதாவாக மதித்து அவரிற்கு பக்தி விசுவாசத்துடன் பணிவிடை புரிவான். மாணவன் அதிகாலையில் எழுந்து நீராடி சந்தியா வந்தனம் காயத்திரி ஜெபம் முடித்துவிட்டு அத்யயனம் செய்ய வேண்டும். எளிய ஆகாரம் அளவாக உண்ண வேண்டும். ஏராளமான தேகப் பயிற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

மாணவன் கட்டாந்தரை அல்லது கடினமான பாயில்தான் படுத்துறங்க வேண்டும். தன் குருவிற்கு சேவை புரிவதிலேயே அவன் காலத்தை செலவிடவேண்டும். மதுபானம், நறுமணப் பொருட்கள், தாம்பூலம், இறைச்சி சுவையுள்ள காரமான உணவுப் பொருட்கள், வாசனைப் பொருட்கள் இவனிற்கு விலக்கப்பட்டன. அவன் எந்த ஜீவனிற்கும் எவ்வித தீங்கையும் செய்யலாகாது. காமம், பேராசை,, கோபம் ஆகிய உணர்ச்சிகளிலிருந்து அறவே விடுபட்டவனாய் எல்லாச் சலனங்களிலிருந்தும் தன்னைக் காத்துக்கொள்ளல் வேண்டும். குருகுல வாசம் முடிந்ததும் சிஷ்யன் தன் சக்திக்குட்பட்ட தட்சணையை குருவிற்கு சமர்ப்பிப்பான். பின்பு கிரகஸ்த வாழ்விற்காக வீடு திரும்புவான். அச்சமயம் குரு மாணவனிடம் 'சத்தியமே பேசுக' (சத்தியம் வத) 'உன் கடமையைச் செய்க' 'கடவுளிற்கும் முன்னோர்களிற்கும் உரிய கடமையிலிருந்து தவறாதே' 'அன்னையை தெய்வமாகப் போற்று' (மாத்துரு தேவோ பவ), 'தந்தையை தெய்வமாகப் போற்று' (பித்துரு தேவோ பவ) 'ஆசிரியரை தெய்வமாகப் போற்று' (ஆச்சாரிய தேவோ பவ) 'விருந்தினரைத் தெய்வமாகப் போற்று' (அதிதி தேவோ பவ) போன்ற பல உபதேசங்களுடன் குரு தன் சீடனிற்கு விடை கொடுப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது இடம்பெறுவது கிருகஸ்த ஆச்சிரமம் (இல்லற நிலை) மாணவப் பருவத்தை முடித்துத் திரும்பியவுடன் ஒருவன் திருமணம் புரிந்து இல்லற வாழ்வின் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்கும் தகுதி பெறு வான். நான்கு ஆச்சிரமங்களிலும் மிகவும் முக்கியமானது இதுவே. ஏனைய மூன்று ஆச்சிரமங்களையும் போஷித்துப் பாதுகாப்பதால் இது தனிச் சிறப்பு உடையது. கிருகஸ்த நிலையில் அவன் சிறந்த மனைவியைப் பெற்று வாழ்க்கை நடத்துவான். இங்கு ஒரு கிருகஸ்தன் நேர்மையான வழியில் பொருளீட்ட வேண்டும். ஒழுங்கான முறையில் அதைச் செலவிட வேண்டும். தன் வருமா னத்தில் பத்தில் ஒரு பங்கை தான தர்மங்களில் செலவிடவேண்டும். அவன் பிரம்மயக்ஞம், பித்ரி யக்ஞம், தேவயக்ஞம், பூதயக்ஞம், மனுஷ்ய யக்ஞம் என்ற ஐந்து வேள்விகளை இந்நிலையில் ஆற்றுவான்.

விருந்தோம்பல்தான் கிருகஹஸ்தனது முக்கிய கடமை. திருக்குறளில்:
''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை''
''தென்புலத்தார் தெய்வம் விருந் தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''
என்று குறளில் கிருகஸ்தனது இன்றியமையாத கடமைகளை எடுத்துக்கூறுவது குறிப்பிடத்தக்கது.

கிருகஸ்தன் தன் குடும்பச் சுமையை தன் மக்கள் ஏற்கும் வலிமை பெற்றதும், தனக்குப் பேரப்பிள்ளைகள் பிறந்ததும் தானும் தன் மனைவியும் உலகத்தைத் துறக்கும் வேளை வந்தது என உணர்ந்து படிப்பிலும், தியானத் திலும் ஈடுபடுவான்.

மூன்றாவது நிலை வானப்பிரஸ்தம். வனத்திற்குச் செல்லுதல் இதன் பொருள் இந்நிலையில் எல்லா சமூகக் கட்டுப்பாடுகளிலிருந்தும், வாழ்வின் கடமைகளிலிருந்தும் இப்போது அவன் விடுபட்டவனாக இருப்பதனால் வேத சாஸ்திரங்களை படிக்க அவனுக்கு இப்போது போதுமான நேரம் கிடைக்கும். அவனுடன் அவன் மனைவி வரச் சம்மதித்தால் அவளை அவன் அழைத்துச் செல்லலாம். இல்லையேல் அவள் தன் மக்களுடன் இருந்து கொள்ளலாம்.

வாழ்வின் இறுதி நிலை சன்னியாசம் எனப்படும். அதாவது துறவு வாழ்க்கை. ஒருவன் சன்னியாசி யாகும்போது தனது சகல உடமைகளையும், சாதிப் பெருமை, சமஸ்காரம், சடங்குகள், மதம், தேசப்பற்று யாவற்றையும் துறந்தவனாகின்றான். தனிமையில் தன் நேரத்தை தியானத்தில் கழிப்பான். பிறர்செய்யும் தர்மத்திலேயே அவன் ஜீவனம் நடக்கின்றது. ஆழ்ந்த தியானத்தில் இறைவனைக் கண்டு அதில் திளைப்பான். இந்நிலையில் சன்னியாசி விருப்பு, வெறுப்பு, அவா, அகங்காரம், மோகம், கோபம், கர்வம் என்ற சகல குறை களிலிருந்தும் நீங்கியவனாய் சமத்துவ நிலையில் இருந்து எல்லா உயிர்களிலும் இறைவனைக் காண்பான். இந்நிலையில் எந்த சமூக பந்தங்களும் நடைமுறை களும் அவனைக் கட்டுப்படுத்த இயலாது. அத்தகைய சன்னியாசி ஒரு லட்சிய மனிதன். அவன் முழுமையுள்ளவன், முக்தி பெற்றவன். அவனே பிரம்மம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் நான்கு ஆச்சிரமங்களும் பொருந்தாதனவெனினும் ஒரேடியாக அவற்றை தள்ளிவிட முடியாது. மாணவப் பருவத்தில் கைக் கொள்ளவேண்டிய பிரம்மச்சரியம் இன்று நம் கல்வியும் ஒழுக்கமும் மேம்பட எத்துணை அவசியம் என்று விளக்குகின்றது. அன்று காட்டிற்கு சென்று மாணவர் கள் கல்வி கற்றார்கள் - இன்று அந்நிலையில்லாமல் பாடசாலைகளுக்கு சென்று ஆசிரியர்களிடம் கல்வியைப் பெறுகின்றார்கள்.

அடுத்து கிருகஸ்த நிலையும் அன்று காணப்பட்டது போன்றே இன்றும் காணப்படுகின்றது. வானப் பிரஸ்த நிலை இன்று காணப்படா விட்டாலும். ஆலயம் சென்று கடவுள் வழிபாட்டில் எந்நேரமும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டும், இறைவன் திருநாமத்தை எந்நேரமும் உச்சரித்துக் கொண்டும், இறைத்தொண்டுகளில் ஈடுபடும் சில வயோதிபர்களை நாம் இன்று காணக் கூடியதாகவுள்ளதையும் மறுப்பதற்கில்லை.

சன்னியாசி நிலைகூட இல்லையென்று கூறிவிட முடியாது. ஏனெனில் இன்றும் வாழையடி வாழையாக ஆங்காங்கே சன்னியாசிகள் உலகத்தில் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். காலம் மாறினாலும் கடமைகள் மாறுவதில்லை. அவை வேறு வடிவு எடுக்கின்றனவே தவிர அடியோடு இல்லாமற் போவதில்லை.

எனினும் அன்று இருந்த ஒவ்வொருவருக்குமுரிய வாழ்க்கைக் கட்டமை வுகள், அதன்மூலம் ஆன்மீக ஈடேற்றம் பெறுதலை இன்று நாம் காணமுடிய வில்லை என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. இந்துக்களின் வாழ்வில் 'கோயில்' முக்கிய இடம் பெற்றமைக்கான காரணங்களைத் தெளிவாக்குக:

இந்து மதத்தைப் பொறுத்த வரையில் கோயில் பிரதான இடத்தை வகிக்கின்றன. கோயில் என்பது கோ+இல் எனப் பிரித்து இறைவனது வீடு எனப் பொருள்படுகின்றன. கோயில் ஆலயம் எனவும் கூறுவர். ஆலயம் என்னும் போது (ஆ+லயம்) ஆன்மாக்கள் ஐம்புலனை அடக்கி மனதை வழிப்படுத்தி இறைவனிடத்தே ஒடுங்குவதற்கு ஏதுவான இடமென்று சொல்லப்படுகின்றது. ஆலயத்திற்கு செல்லுதலை ஒவ்வொரு இந்துவும் புனிதமான செயலாகக் கருத வேண்டியவனாகின்றான். எனவேதான் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் 'திருக் கோயிலில்லா திருவிலூரும் ஊரல்ல அடவி காடே' என்றும் நம் முன்னோர்கள் கூறிச் சென்றார்கள். எனவே மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் கோயில் அவசியம் அமைக்கப்படவேண்டும் என்னும் முக்கியத்துவத்தை இது எமக்கு உணர்த்துகின்றது.

சிவாகமங்கள், ஆலய வழிபாட்டில் மனம் ஒருமைப்பட சிவனருள் கிட்டும் என்றும், சிவனருளால் சிவஞானம் உண்டாகும் என்றும், சிவஞானத் தால் பாசம் அகன்று பேரானந்தம் உண்டாகும் என்று கூறுவன.

கடவுட் காட்சி பெற்ற இந்து சமய மெய்யடியார்கள் ஆலயங்கள் தோறும் யாத்திரை செய்து ஆலய வழிபாட்டினை ஆன்ம ஈடேற்றத்திற்கு முக்கியமாக உணர்த்தியுள்ளனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய தேவாரம் பாடிய மூவரும் திருமங்கையாழ்வார் போன்ற ஆழ்வார்களும் தலயாத்திரைக்கு முக்கிய இடம் தந்துள்ளனர்.

பழைய காலத்திலே கோயில்கள் அழியும் பொருட்களான மண்ணி னாலும் மரத்தினாலும் கட்டப்பட்டன என்பதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. கி. பி. 6ம் நூற்றாண்டிற்குபின் நாயன்மார்கள் செய்த அற்புதங்களினால் சைவத்தின் மேன்மைகண்டு முதலில் பல்லவ மன்னர்களே அழியாத பொருட்களைக் கொண்டு கோயில்களை எழுப்பினார்கள். எங்கெங்கு நல்ல பாறைகள் காணப்பட்டனவோ அங்கெல்லாம் பாறைகளை செதுக்கி பல்லவ மன்னர்கள் கோயில் அமைத்தனர். குறிப்பாகமகேந்திர பல்லவன் அப்பணியில் தலைசிறந்தவன். இத்தகைய கோயில் குடவரைக் கோயில் அல்லது குகைக்கோயில் என அழைக்கப்படுகின்றது. நிலையான கோயில் அமைப்புடன் அதன் உட்பிரகாரத்தில் அழகிய ஓவியங்களை வரையும் முறையினையும் அவன் உருவாக்கினான். இதற்கு எடுத்துக்காட்டாக இன்று மாமல்லபுரம் விளங்கு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திர வர்மன் புராணக் கதைகளை பயன்படுத்திச் சிற்பங்களையும் செதுக்குவித்தான். இக் காலச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் (வெளியே தள்ளியவாறு உருவம் அமைக்கப்படும் சிற்பங்கள்) என அழைக்கப்படும்.

சோழர் மன்னர்களும் கற்கோயில் எழுப்பும் பணியில் ஈடுபட்டுத் தாங்கள் விரும்பிய இடங்களில் பெரிய கோயில்களைக் கட்டினார்கள். கோயில் கட்டும் திருப்பணி மிகப்பிரபல்யம் அடைந்தது சோழப் பெருமன்னர் காலத்திலேதான். கருங்கல்லினாலும் செங்கல்லினாலும் கோயில்களை இவர்கள் அமைத்ததோடு மண்டபங்கள், விமானம் ஆகியவற்றை அமைக்கும் முறையினையும் புகுத்தினர்: கோயிற் தூண்களிலும் சுவர்களிலும் சிற்பங்களை செதுக்கியும் ஓவியங்களை வரைந்தும் அழகுபடுத்தினர்: இவ்வாலயங்கள் கல்விச் சாலைகளாகவும், வைத்தியசாலைகளாகவும். வழக்காடு மன்றங்களாகவும் இசை, நடனம் என்பன வளரும் இடங்களாகவும் விளங்கின என்பதற்குப் பல முக்கிய ஆதாரங்கள் உண்டு. எனவே இக்காலத்தில் கோயில்கள் சமய சமூக நிறுவனமாக வளர்ச்சி கண்டதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அவர்களைத் தொடர்ந்து அன்றுஞ் சரி இன்றும் சரி நகரங்கள், கிராமங்கள் ஆலயத்தை சூழ்ந்தே அமைந்துள்ளன. எந்த ஊரை எடுத்துக் கொண்டாலும் அதன் நடுவில் ஓர் ஆலயமும் சூழ்ந்து குடிமனைகளும் இருக்கும்.

எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கும் இறைவன் சிறப்பாக கோயில்களிலேயே எழுந்தருளியுள்ளான். இதற்கு உதாரணமாக சுந்தரமூர்த்தி நாயனாரது தடுத்தாற்கொண்ட வரலாறு தக்க சான்றாக அமைகின்றது. அதாவது இறைவன் சுந்தரரை தடுத்தாற்கொள்ள முதிய வடிவத்தில் வந்தார். திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த மக்கள் அவரிருக்குமிடம் எதுவென்று வினாவினார்கள். அவர் காட்டுகிறேன் என்றுகூறி, அவ்வூர் ஆலயத்தினுட் சென்று மறைந்தார். இந்நிகழ்ச்சி இறைவனது சிறப்பிடமாக ஆலயம் அமைவதைக் காட்டுகின்றது. பசுவினது உடல் முழுவதும் பால் சுரந்தாலும் அதனது மடியின் வழியாகவே அது செகரியப்படுவதுபோல் எங்கும் கலந்திருந்தாலும் இறைவன் ஆலயத்தின் வழியாகவே வெளிப்பட்டு அருள் பாலிக்கின்றான் என இந்துமதம் குறிப்பிடுகின்றது. இதனையே சிவஞான சித்தியார் "திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனங்கே" என்கின்றது.

யோகங்களின் பாற்பட்டவர்கள் "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பாலயம் .." என்றும், "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக..." என்றும், "உடம்பார் அழியின் உயிரார் அழிவர் திறப்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்..." என்றும் உடம்பையே கோயிலாகக் கொண்டு அதற்குள்ளேயே இருக்கும் உயிரினையே இறைவனாகக் கண்டார்கள். இம்மார்க்கங்கள் சிற்றறிவினராகிய எம் போன்றவர்களுக்கு கடினம். எனவேதான் ஆலயங்கள் எமக்கு அவசியமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமய வாழ்வில் முக்கியத்துவம் பெறும் ஆலயத்தை நாம் காணும்தோறும் கடவுள் உணர்ச்சி உண்டாகின்றது. கோயில் கோபுரம் எட்ட இருப்பவர்களுக்கும் கடவுளைப் பற்றி ஞாபகமூட்டுவதற்கே அமைந்திருக்கின்றது.

மேலும் சிதறும் இயல்புடைய சிந்தனையை ஒரு வழிப்படுத்த எமக்கு கோயில் இன்றியமையாத ஓர் இடமாக விளங்குகின்றது. வேத மந்திரங்களும் சான்றோர் பாசுரங்களும் ஒலித்துப் பழகிய ஆலயங்களில் ஓர் ஒப்பற்ற சக்தி நிலவுகின்றது. தொடர்ந்து அங்கு நடைபெறும் பிரதிஷ்டை பூசை ஆகியவற்றால் சிவாச்சாரியார் அங்கு இறைவனை எழுந்தருளுவிக்கின்றார். எல்லோரும் சுகம் அடைய, எல்லோரும் மங்களம் பெறுக'' என்று தினமும் அவர் இறைவனை எமக்காக வேண்டிய ஆணவமாகிய பாசத்தினை விலக்கி நாம் ஞானத்தினைப் பெற வழிகாட்டுகின்றார். அவரின் பரார்த்த பூசை எம்மை இறைவனுக்கு அண்மையில் கொண்டு சேர்க்கின்றது. இம்மை, மறுமைப் பயன்களை நாம் அடைய வழி வகுக்கின்றது.

இதைவிட கோயில்கள் தத்துவம், ஞானம் முதலிய பேருண்மைகளை உணர்த்தும் ஓர் உறைவிடமாக திகழ்கின்றது. இவைகள் ஆன்மாக்களுக்கு பேரறிவுகளையும், உலகத் தோற்ற ஒழுக்க விதிகளையும், பக்தி, வைராக்கியம், ஞானம் முதலியவைகளையும் உதிக்கச் செய்கின்றன.

எனவே கோயில்கள் சமய ஒழுக்கத்தினை வளர்க்கவும், தீய குணங்களை அழிக்கவும், பக்திப் பயிரை செழித்தோங்கவும், ஆன்மாவைத் தூய்மை செய்யவும் அமைந்தவை என்பதை அறிய முடிகின்றது.

இவ்வாறு முக்கியத்துவம் பெறும் ஆலயம், எமது கலை வளர்ச்சி, சமூகப் பண்பாட்டு வளர்ச்சி, இதயப் பண்பு (ஆன்மீக வளர்ச்சி) என்பவற்றைப் பேணி பாதுகாக்கவும் அவை எமக்கு உதவுகின்றன. கலை வளர்ச்சி எனும்போது சிற்பம், ஓவியம், இசை, நடனக் கலைகள், கோலமிடும் கலைகள் போன்ற இன்னோரன்ன கலைகள் ஆலயங்களை மையமாகக் கொண்டே வளர்ச்சியுற்றன. கலைகள் மூலம் இறைவனை அடையும் விதம் பற்றி கூறின. இதன் மூலம் தெய்வீக வரலாற்றுக் கதைகள் பண்பாடு, பாரம்பரியக் கதைகள், புராணக் கதைகள், சமய சமுதாய பண்பாட்டை அறிவதற்கு வித்திட்டன. இன்றும் நம் கலைஞர்கள் ஈட்டியுள்ள சாதனைக்கு ஆலயங்களே நிலைக்களன். பாமர மக்களும் சமய அறிவைப் பெற வாய்ப்புண்டாயிற்று.

கோயில்கள் மூலம் இலக்கிய, இலக்கண அறிவு வளர்க்கப்பட்டது. அது மட்டுமல்ல சகலவித கூட்டு வாழ்வு போன்ற சமுதாய விருத்திக்கும் கோயில்களே நிலைக்களனாக விளங்கி வருகின்றது. ஊரில் எழும் பலவித பிணக்குகளைத் தீர்க்கவும் கோயில்கள் பயன்பட்டன. ஊரிலுள்ள தெய்வ சந்நிதியில் கற்பூரத்தின் மேலே கையை வைத்துச் சத்தியம் செய்தவன் மூலமும் பல வழக்குகள் தீர்க்கப்படுகின்றன. கோயில்களிலே விழாத் தொடங்கி விட்டால் ஊர் முழுவதும் புனிதமாகிவிடும். விழாக்காலம் முடியும்வரை மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம் அனுட்டிப்பதும், சைவ யோகாசனத்தைக் கைக்கொள்ளுவதும், திருமுறை ஓதுவதும், தண்ணீர்ப்பந்தல் அமைப்பதும், கோலம்போடுவதும் வழக்கமாயிருக்கும். எனவே இவ்வாறாகப் பெருகியுள்ள ஆலயங்களின் வாயிலாக சமூக வாழ்வு புனிதமடைகின்றது.

மேலும் ஆலயத்தில் கடமை செய்யும் மக்கள் எந்நேரமும் மனதை வேறு கெட்ட சிந்தனைகளில் அலையவிடாது கடவுள் சிந்தனையாகத் தமது வாழ்வின் குறிக்கோளை சிந்திக்கும் நேரமாக அமைத்து விடுகின்றார்கள். ஆலயத்தில் நடைபெறும் சமய சம்பந்தமான சொற்பொழிவுகள்கூட அவனது சமய சிந்தனை நீண்டு நிலைபெற வழிவகுக்கின்றது.

சைவ நாற்பதங்களை பின்பற்ற முயலுவோருக்கு கோயில் வழிபாடு முதற்படி, தொடக்க நிலைத்தொண்டுகளான சரியை ஆலயத் தொண்டோடு நெருங்கிக் கொண்டன.

அப்பர் ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே! நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்...''

என்று பாடுவது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். கிரியை நெறிக்கும் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாகின்றது.

எனவே இதன் மூலம் கோயில் சமய சமுதாயத்திற்கு ஒரு நிறுவனமாகத் திகழ்ந்து, எமது இந்து சமயத்தின் உயிர் நாடியாக விளங்குகின்றது என்றால் மிகையாகாது. எனவே ஆலயங்களை நாம் பேணிப் பயன்படுத்தினால் எம் வாழ்வு இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தந்து எம்மை வாழ்விக்கும் என்பதில் ஐயம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. சைவ சித்தாந்தம் கூறும் 'ஆணவம்' பற்றி கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக:

இந்து மதத்தின் தத்துவார்த்தப் பிரிவுகளில் சைவசித்தாந்தமும் ஒன்றாகும். உபநிடதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சைவசித்தாந்தம் கடவுள், உயிர், உலகம் என்ற மூன்றினையும் கொண்டு அவற்றிக்கிடையிலான தொடர்புகள் பற்றியும் விளக்கு வனவாக அமைகின்றது. இம்மூன்றையும் முப்பொருட்களாக பதி, பசு, பாசம் என்று சைவசித்தாந்தம் அழைக்கின்றது. இதில் பதி, அறிவிக்காமலே அறியும் பசு, அறிவித்தால் அறியும் அறிவிக்கா விட்டால் அறியாது. பாசம், அறிவித்தாலும் அறியமாட்டாது. பாசமானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும் மலங்களையும் கொண்டது. இதில் ஆணவத்தைப் பற்றி இனி நாம் ஆராய்வோம்.

மும்மலங்களுள் முதலாவதாகிய இம்மலமானது வியாபக உயிரின் அறிவு, இச்சை செயல்களை அணுத் தன்மையாக்குவதால் ஆணவமெனப் படுகின்றது. இதன் சொரூபம் மிக இருண்ட பேரிருள் வடிவம். அதன் செயல் ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தைச் செய்வது. இது ஆணவ பந்தத்தின் சிறப் பிலக்கணம். சகலத்தில் கருவிகளோடு விபரீத உணர்வைச் செய்தல் அதன் பொது இலக்கணம்.

இவ் ஆணவம் பசுத்துவம், மலம், அஞ்சனம், அவித்தை, ஆவிருதி, ஆவரணம், தமசு, மோகம், மூலம், சடம், அஞ்ஞானம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

''நானே பெரியவன்'' , ''நானே சிறந்தவன்'', 'எனது' என்னும் செருக்கை உண்டாக்குவது ஆணவமேயாகும். உயிர்கள் அனுபவிக்கும் துன்பங் களுக்கெல்லாம் இதுவே மூலகாரணமாயுள்ளது எனலாம்.

ஆணவம் ஒன்றாகும். ஆனால் அதன் குணங்கள் எட்டும் இதனையே

1) விகற்பம் — தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்
2) கற்பம் — பிடித்ததைப் பிடித்திருத்தல்
3) குரோதம் — கோபங்கொண்டு நினைத்தல்
4) மோகம் — ஒன்றுக்கு ஆசைப்படுதல்
5) கொலை — உயிர்களைக் கொல்லுதல்
6) அஞர் — சந்ததமும் துக்கப்படுதல்
7) மதம் — அகங்காரம் மேலிடுதல்
8) நகை — சிரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுக் குணங்களால் ஆன ஆணவத்திற்கு அநேக சக்திகள் உண்டு. இதனையே சிவஞான சித்தியார் 'ஒன்றதாய் அனேக சக்தியுடையதாய்'' என விளக்குகிறது. சிவப்பிரகாசம் ''ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளுமெண்ணரிய சத்திய தாயிருளொளிரவிருண்ட மோகமாய்ச் '' என்கின்றது. இவ்வாறு ஆணவமலம் அனேக சக்திகளை உடையதாக இருப்பதன் காரணமாகவே அது அளவில்லாதவனவாகிய ஆன்மாக்களை பந்தித்து நிற்கும் இயல்பினையுடையதாக விளங்குகின்றது.

ஆணவமானது ஆன்மாக்களின் துன்பங்கள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் என்பதனாலும் ஆன்மாவுடன் அநாதியாய்க் கலந்திருப்பதனாலும் சகசமலம் என்றும் மூலமலம் என்றும் அழைக்கப்படுகின்றது ஆன்மாவைக் கேவலப்படுத்துவதனால் கேவலமலம் என்றும், இருளைப்போன்று ஏனைய வற்றை ஆன்மாவிடமிருந்து மறைப்பதனால் இருள் மலம் என்றும் ஆணவம் அழைக்கப்படுகின்றது. சிவஞான சித்தியார் 'மூலமல நெல்லினுக்கு முளையொடு தவிடுமி போல...'' எனக் கூறுகின்றது. அதாவது கன்மம், மாயை, ஆணவம் என்ற மூன்று மலங்களும் நெல்லிற்கு முளையும், தவிடும் உமியும் போல நின்று ஆன்மாக்களுக்கு மயக்கத்தினைக் கொடுத்து அவ்வுயிரின் சொரூபத்தினை மறைத்து நிற்கிறது எனக் கூறுகின்றது.

ஆன்மாவிற்கும் ஆணவ மலத்திற்கும் இடையிலுள்ள தொடர்பினை ஆராயின் செம்பிலே களிம்பு போலவும் நெல்லிலே உமி போலவும் ஆன்மாக்கள் என்று உளதோ அன்றிலிருந்து ஆணவ மலமும் அவற்றோடு தொடர்புடையதாக உள்ளது. இதனை மெய்கண்ட தேவர் ''நெல்லிற்கு உமியும், நிகழ் செம்பினிற்களிம்பும் சொல்லிற் புதிதன்று தொன் மையே'' என்று கூறுகின்றார்.

ஆணவமலம் ஆன்மாக்களோடு அநாதி தொடர் புடைடாதக இருந்து, அவற்றின் அறிவை மறைத்து அறியாமையைக் கொடுத்து இருள்மலமாக காணப்படு வதை உமாபதி சிவாச்சாரியார் தமது திருவருட் பயனில் கூறும் போது.

''இருளானதன்றி யிலதெவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்'' எனவும்

''ஒரு பொருளுங் காட்டா திருளுருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாதிது''

எனவும் கூறுகின்றார். அதாவது ஒளியானது எப்பொருளையும் பகுத்தறியும்படி காட்டும் தன்மையுடையது. ஆனால் இருள் எப்பொருளையும் தன்மயமாக்கி இருளேயாக்கி நிற்கும் இயல்பினையுடையது. இது போலவே ஆன்மாவைப் பற்றிய ஆணவ இருளும் தன்னையும் பிறவற்றையும் பகுத்தறிய முடியாதபடி மறைந்து நிற்கும் என்று கூறப்படுகின்றது. அடுத்த பாடலில் இருளானது பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைக் காட்டா விடினும் தன்னையாவது காட்டும். ஆனால் ஆணவ மலமானது ஆன்மாக்கள் தம்மைத்தாமே அறிய முடியாமலும் இறைவனை அறிய முடியாமலும் தடுத்து நிற்கும் இயல்புடையதாகையால் தன்னையும் காட்டாது பிற பொருளையும் காட்டாது. எனவே ஆணவமலம் இருளைவிடக் கொடியது எனக் கூறுகின்றார்.

ஆணவமலம் ஆன்மாக்களோடு அநாதி தொடர்புடையதாக இருந்தாலும் அது ஆன்மாவின் குணமன்று குற்றமே ஆகும். மேற்கூறப்பட்ட ஆணவ மலமானது வலிமை குன்றப் பெற்றாலே ஆன்மாவிற்கு முத்திகிடைக்கும். பதியானவன் ஆன்மாக்களிடத்தில் உள்ள பெருங்கருணையினால் சொரூப நிலையிலிருந்து தடத்த நிலையில் இறங்கி முத்தி கொடுக்கின்றார். அதாவது தடத்த நிலையில் இறைவன் சக்தியுடன் சேர்ந்து ஐந்தொழில்களை ஆற்றுகின்றார். இந்நிலையில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு (உடம்பு) கரண (அந்தக் கரணங்கள் புவன (உலகம்) போகம் (நுகர்வுப் பொருட்கள்) முதலியவற்றைப் படைக்கின்றான். இவற்றைப் பெற்ற ஆன்மா இவற்றை அனுபவித்து இறந்து, பிறந்து இறந்து — பிறந்து இவ்வாறு மாறி மாறி இறப்புப் பிறப்புக்களை அடைகின்றது. இவ்வாறு இறப்புப் பிறப்புக்கள் மூலம் உலகப் பற்றுக்களை அனுபவித்த ஆன்மா ஒரு நிலையில் களைப்படைந்து விடுகின்றது. இந்நிலையில் ஆன்மாவிற்கு உலகியல் பற்று நீங்கி இறைபற்று மேலோங்குகின்றது. இறை பற்று மேலோங்க ஆன்மாக்களுக்கு இருவினை ஒப்பு ஏற்படும். இருவினை ஒப்பு என்பது நல்வினை தீவினைகளை ஒப்புநோக்கும் நிலை (ஓட்டையும், செம்பொன்னையும் ஒப்ப நோக்கும் ஒரு மனோ நிலை) இருவினை ஒப்பு ஏற்பட மலபரிபாகம் ஏற்படும். அதாவது ஆணவத்தின் வலிமை குன்றும். இதன்பின் சக்தி நிபாதம் ஏற்படும். அதாவது திருவருட் சக்தி ஆன்மா வில் பதியும்.

சைவ சித்தாந்தத்தின்படி இம் முத்தி, துன்பம் துளியும் இல்லாத எதிர்மறைநிலை மட்டுமன்றிப் பேரின்பமே மயமான உடன்பாட்டு நிலையும் ஆகும். இம்முத்தியிலே ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்தபோது அது தன்தனி இயல்பை முற்றாய் இழந்துவிடுவதில்லை. இக்கலப்புக்குத் தாள் + தலை என்ற இரு சொற்களின் புணர்ச்சியை உதாரணம் காட்டுவது மரபு. எனவே முத்தி நிலையில் ஆன்மா சிவத்தன்மை பெறுமே தவிர சிவமாவதில்லை.

இம் முத்தியினை அடைய சைவ சித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளைச் சிறப்பாக கூறுகின்றது.

அத்துடன் குரு, லிங்க சங்கம, வழிபாடு தீட்சை ஆலயவழிபாடு, சிவசின்னங் களை அணிதல், விரதம் அநுட்டித்தல் போன்ற வழிகளையும் எடுத்துக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. இராமானுஜரது விசிட்டாத்துவைதக் கோட்பாடு பற்றி தெளிவாக விளக்குக:

பிரம சூத்திரத்திற்கு இராமானுஜர் எழுதிய விளக்கவுரையை அடிப் படையாகக் கொண்டு எழுந்தது விசிட்டாத்துவைத வேதாந்தமாகும்· சங்கரரது தத்துவத்தில் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவற்றை மறுக்கும் முகமாகவே இராமானுஜர் தனது தத்துவத்தை விளக்குகின்றார். சங்கரர் முன் வைக்கின்ற மாயாவாதத்தில் இம்மாயை எங்கிருக்கிற தென்பது விளக்கப்பட முடியாத ஒரு குறைபாடாகிறதென இராமானுஜர் கூறுகின்றார். மாயையானது பிரம்மத்திலோ அல்லது ஆன்மாவிலோதான் இருக்க வேண்டும் என்ற கருத்து பொருந்தாததாகும். ஏனென்றால் பிரம்மம் ஒரு பூரணமாகவும் மாயை ஒரு அறியாமையாகவும் அமைவதனால் பூரணத்தில் அறியாமை இருப்பதென்பது முடியாதென்றும், ஆகவே மாயை பிரமத்தில் உள்ளதல்ல எனவும் ஆன்மாவினது தோற்றத்திற்கு மாயையே காரணம் என்பதனால் பிந்தியதான ஆன்மாவில் முந்தியான மாயை இருக்க முடியாதென்றும், எனவே மாயை எங்கிருக்கிற தென்பது விளக்கப்பட முடியாத ஒரு குறைபாடாகிறது என இராமானுஜர் விளக்குகின்றார். உள்ள பொருள் என்பதற்கு நிலையாக இருப்பதென்ற தவறான கருத்தை சங்கரர் கொண்டதனாலேயே தேவையற்ற தான இந்த மாயாவாதம் சொல்லப்படவேண்டிய தாயிற்று எனக் கூறி அதை மறுக்கும் இராமானுஜர் சங்கரரிலிருந்து வேறுபட்டவரை விலக்கணத்தை உள்ள பொரு ளுக்கு காட்டுகின்றார்.

நிலையான அழிவற்ற இயங்கக்கூடிய பொருள் எதுவோ அதுவே உள்ள பொருளாகும் என்று இராமானுஜர் சுதந்திரமாக இயங்குதல் என்ற பண்பினை முக்கியப்படுத்தியே உண்மைப் பொருளை விளக்குகின்றார். இவ்வாறு சுதந் திரமாக இயக்கக் கூடிய பொருளே உள்ள பொருள் என்பதனால் கடவுள் உயிர், உலகம் எனும் மூன்றினையும் ''இருக்கின்றவைகள்'' எனக் கொள்ளும் இராமானுஜர் அம்மூன்றினுள் சுதந்திரமாக இயக்கக்கூடியது ஒன்றுதான் எனக் காட்டுவதனால் உள்ள பொருள் இரண்டல்ல என விளக்குகின்றார்.

உயிரானது உடலில் எவ்வாறு தங்கியிருக்கிறதோ அவ்வாறே கடவு ளானவன் உயிர் உலகங்களில் தங்கி நிற்கின்றான் என்றும் உடலை நோக்க உயிரே சுதந்திரமுடையதாகையால் உயிர் உலகங்களை நோக்க இறைவனே சுதந்திரமாகிறான் எனக் காட்டிஉள்ள பொருள் இரண்டல்ல என நிறுவுகின்றார்.

இராமானுஜர் அங்கம், அங்கி என்ற தொடர்பின் அடிப்படையில் உயிர் உலகங்களை அங்கங்களாகக் கொண்டே அங்கியாக இறைவன் அமை கிறான் என்றும் அங்கம் அங்கி என்பவற்றுள் அங்கியே சுதந்திரமாக இயங்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கூடியதாகையால் உள்ள பொருள் ஒன்று என்று காட்டுவார். உயிரும், உலகும் பிரம்மத்திற்கு விசேஷணங்கள். அங்கம் என்பது விசேடணம் என்றும் அங்கி என்பது விசேடியம் என்றும் கொள்ளப்படுவதனால் விசேடண விசேடியங்களை உள்ளடக்கியஇராமானுஜரது அத்வைதம் விசிட்டாத்துவைதம் எனப்படுகின்றது.

இவ்வாறு அங்கம் அங்கித் தொடர்பினால் இறைவனையும் உயிர், உலகங்களையும் இராமானுஜர் குறிப்பிடும்போது அங்கங்களினது குறைபாடு அங்கியைப் பாதிக்காதா? என்ற கேள்வி எழுவதாகின்றது. இவ்வகையில் உடலினது நோய், காயம், இறப்பு முதலான குறைபாடுகள் அதில் தங்கி நிற்கும் உயிரைப் பாதிக்காதது போல உயிர் உலகங்களினது குறைபாடுகளும் இறைவனைப் பாதிப்பதில்லை என்று இராமானுஜர் விளக்குகின்றார்.

மேலும் இறைவன், உயிர் உலகங்களுக்கிடையிலான தொடர்பு எத் தகையதென விளக்குகின்றபோது உலகிலுள்ள பேதங்களை மூன்று வகையாக இராமானுஜர் பிரித்துக் காட்டுவார். ஒரு பொருளுக்கும் இன்னொரு பொரு ளுக்கும் இடையிலான வித்தியாசம் என்ற விஜாதீய பேதம். ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு பொருட்களுக்கிடையிலான வித்தியாசம் என்ற சஜாதீய பேதம். ஒரு பொருளுக்கும் அதன் பகுதிகளுக்குமிடையிலான வித்தியாசம் என்ற சுவகத பேதம். என்பனவே அவ்மூவகைப் பேதங்களாகும். இதனை உதாரணமாக முறையே ஒரு மரத்திற்கும் செடிக்குமான வித்தியாசம், ஒரு மரத்திற்கும் இன்னொரு மரத்திற்குமான வித்தியாசம் ஒரு மரத்திற்கும் அதனது வேர், கிளைஎன்பற்றிற்கான வித்தியாசம் என்பதைக் காட்டலாம். இவற்றுள் மூன் றாவது வகையானதான சுவகத பேதத்தையே இறைவன் உயிர், உலகங்க ளுக்குக் காட்டி அதன் மூலம் ஒரு முழுப் பொருளுக்கும் அதன் பகுதிகளுக்கு மிடையிலான வித்தியாசம் போன்ற பிரிக்கப்பட முடியாத தொடர்பே இவை களுக்கிடையில் உண்டு என்று இராமானுஜர் வேதாந்தம் விளக்குகிறது.

இவ்வாறு தனது அடிப்படைக் கொள்கையை விளக்குகின்ற இராமா னுஜர் தொடர்ந்து அதுபற்றிய கருத்துக்களைச் சொல்கின்றபோது ஆன்மாக் களை மூன்று வகையாகப் பிரித்துக் காட்டுகின்றார்.

(1) என்றும் முத்தி நிலையில் இருக்கின்றனவைகள்
(2) பெத்த நிலையில் இருந்து முத்தி நிலைக்கு வந்தவைகள்.
(3) பெத்த நிலையில் உள்ளவைகள்.

என்று மூன்று வகையான ஆன்மாக்களை இராமானுஜர் காட்டுகின்றார்.

ஆன்மாக்கள் கன்மம், பிறவி எனும் துன்பங்களை அனுபவிக்கின்றன என்பதை இராமானுஜர் ஏற்றுக் கொள்வார். இவ் ஆன்மாக்கள் தமது துன் பங்களிலிருந்து விடுபட்டுச் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் நாராயணது பாதார விந்தங்களில் சென்று சேர்வதே முத்தி ஆகும் எனக் குறிப்பிடும் இராமானுஜர் இம் முத்திக்கு கன்மம், பக்தி, ஞானம் எனும் மூன்றினையும் வழிமுறைகளாகச் சொல்லுவார். இவற்றோடு பிரபத்தி என்ற ஒன்றினையும் இராமானுஜர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கின்றார். இறைவனிடம் அன்பு செலுத்தல் பக்தி என்பதுபோல இறைவனுக்கு தன்னைச் சரணாகதியாகக் கொடுத்து விடுதல் பிரபக்தியாகும். இது உயர்ந்த நிலை என்றும் இதன் மூலம் விரைவில் முத்தியைப் பெறலாம் என்றும் இராமானுஜர் வேதாந்தம் குறிப்பிடுகின்றது.

இவ்வாறமையும் இராமானுஜ வேதாந்தத்தை சங்கரர் வேதாந்தத்துடன் ஒப்பிட்டால் அடிப்படையில் இவ் இரண்டும் ஒன்றுபடுவதைக் காணலாம். உள்ள பொருள் இரண்டல்ல என இரண்டு வேதாந்திகளும் ஏற்றுக்கொண்டாலும் எப்படி இரண்டல்ல என விளக்கு வதில் வேறுபடுகின்றன. அதே வேளை சைவ சித்தாந்தத்துடன் அடிப்படையில் வேறுபடும் இராமானுஜர் வேறுவிடயங் களில் ஒற்றுமைப்படுபவராக அமைகிறார். சைவ சித்தாந்தத்தைப்போல மூன்று பொருட்களையும் இருக்கின்றவை என இவர் ஏற்றுக்கொள்கின்றார். மேலும் இறைவனுடன் ஆன்மா சேர்கின்றது என்ற கருத்திலும் ஆன்மாக்கள் கன்மம் போன்ற துன்பங்களை அனுபவிக்கின்றன என்ற கருத்திலும் சைவ சித்தாந் தத்திற்கும் இராமானுஜருக்கும் ஒற்றுமைப்பாடு காணப்படுகிறது. இவ்வாறு வேதாந்த அடிப்படைகளையும் சித்தாந்த கருத்துக்களையும் கொண்டு இராமா னுஜர் வேதாந்தம் காணப்படுவதனால் வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் இடையே பாலம் அமைத்தவராக இராமானுஜர் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. "இந்துமதம் கூறும் ஆன்மீக விடுதலைக்குரிய சாதனங்களுள் மூவகை யோகங்கள் சிறப்புடையது" விளக்குக:

உலகின் மதங்கள் அனைத்துமே ஆன்மாவுக்குரிய இறுதி இலட்சியமாக ஆன்மீக ஈடேற்றத்தைக் குறிப்பிடுகின்றன. அதாவது ஆன்மாவானது தன்னைப் பீடித்துள்ள வினைகளினின்றும் விடுபட்டு முத்தியினைப் பெற்றுக் கொள்ளுதல் ஆன்மீக ஈடேற்றம் எனப்படுகின்றது. ஆன்மா தன்னை உணர்ந்து கொள்ளுதல் என்றும், அது பேரின்பத்தில் திளைத்தல் என்றும் அது தன்னிலையடைதல் என்றும் பலவாறாக இந்த ஆன்மீக ஈடேற்றம் விபரிக்கப்படுகிறது. இந்த இலட்சியத்தை அடைவதற்கு மதங்கள் பல வழிகளைக் குறிப்பிடுகின்றன. இந்து மதத்திலும் சங்கர வேதாந்தம் ஞானத்தையும், இராமானுஜ வேதாந்தம் கன்மம், பக்தி, ஞானம் என்பவற்றையும் சைவசித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களையும் ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய வழிகளாக குறிப்பிடுகின்றன. இவ்வாறு இந்து மதத்தத்துவங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே சொல்லும் இவ்வழிமுறைகளைவிட இந்து மதம் பொதுவாக ஆன்மீக விடுதலைக்கு குறிப்பிடும் வழிகளையே ஆன்மீக சாதனங்கள் என்கின்றோம்.

இங்கு சாதனங்கள் என்ற இச்சொல் கருவி என்ற பொருளில் கையாளப்படுகின்றது. எனவே ஆன்மீகம் எனப்படும் ஆன்மாவினது விடுதலைக்குரிய கருவிகள் என்ற வகையில் இவ்வழிமுறைகள் அமைகின்றன. இந்து மதத்தின் ஆன்மீக சாதனங்களாககன்மயோகம், பக்தி யோகம், ஞானயோகம் குறிப்பிடப்படுகின்றது. யோகம் என்னும் சொல் முழுமை பெறுவதற்கு வழி என்னும் கருத்தில் பிரயோகிக்கப்படுவதனால் கன்மத்தையும், பக்தியையும், ஞானத்தையும் முழுமைக்குரிய வழிகளாக ஆக்குதல் பற்றி அந்தந்த யோகங்கள் விளக்குகின்றன எனலாம். இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே கவனிப்பின் அவைபற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

கன்மம் என்பது செயலைக் குறிப்பதனால், கன்மயோகம் செயலின் வழியாக முழுமையடைதல் பற்றி கூறுவதாகும். இவ்வாறே பக்தி என்பது, இறைவன் மீது செலுத்தப்படும் அன்பினைக் குறிப்பதனால் பக்தி யோகம் அன்பின் வழியாக முழுமையடைதல் பற்றிக் கூறுகின்றது. ஞானம் உயரறிவு எனப்படுவதனால் அறிவின் மூலம் முழுமையடைதலேயே ஞானயோகம் கூறுவதாகும். இம்மூன்று வழிகளிலும் நின்று அனுபவித்தவர்களது அனுபவங்களைப் பொறுத்து ஒன்று மற்றதைவிட உயர்வானது என்னும் கருத்துக்கள் சொல்லப்படுவதுண்டு. ஆனால் இந்து மதத்தைப் பொறுத்தவரையில் மூன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே தன்மையானவை என்றும், பொருத்தமானதை அவரவர் கடைப்பிடிப்ப தற்கு வசதியாக ஒரே தரத்திலுள்ள வித்தியாசமான மூன்று யோகங்கள் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

**கன்மயோகம் (தன்னலமற்ற சேவை மார்க்கம்)**

கன்மயோகம் செயலின் வழியாக முழுமையடைதலைச் சொல்லும் செயலானது மனித வாழ்வில் பிரதான இடத்தைப் பெறுவதான ஒன்றாகிறது. ஒரு மனிதனது குணாதிசயங்கள் வெளிப்படையாக தெரிவனவல்ல. ஆகவே அவனது குணங்களது வெளிப்பாடாகிய செயல்களைக் கொண்டே அவனது இயல்பு தீர்மானிக்கப்படுகிறது. இத்தன்மையினாலேயே மனித வாழ்வினை நிர்ணயிக்கின்ற ஒன்றாக செயல் கருதப்படுவது வழக்கமாகும். இத்தன்மையில் செயல்களானவை அறத்தினடிப்படையில் அமையவேண்டும் என குறிப்பிடும் மதம் அந்த அறச் செயல்கள் என்ற அடிப்படையைக் கொண்டே பிரித்துக் காட்டுகிறது.

இத்தகைய முக்கியத்துவத்தைக் கொண்ட செயலை ஒழுங்குபடுத்துதல் பற்றிச் சொல்வதே கன்மயோகம் ஆகும். கன்மம் என்பது செயல்களது பலனை யும் குறிப்பதாக இந்துமதத்தில் கொள்ளப்படுவதினால் கன்ம வினைகளுற்கேற்ப ஆன்மாவினது வாழ்க்கை தீர்மானிக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. கன்மங் களுக்குரிய பலனை கட்டாயம் அனுபவித்தேயாக வேண்டியிருப்பதனால் ஆன் மாவானது பலன் கருதி செயல் செய்யும் வரையிலும் கன்மத்திலிருந்து விடுபட முடியாததாகிறது. இதனால் பலனை எதிர்பாராத நிஷ்காமிக கன்மமாக செயலாற்வதே கன்மத்திலிருந்து விடுபட ஒரே வழியாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு கன்மத்தை யோகமாக ஆற்றுவதனால் ஆன்மா முழுமையை அடைய முடியும் என கன்ம யோகம் விளக்குகிறது.

நிஷ்காமிக் கன்மம் என்னுபோது பலனை எதிர்பாராமை என்ற ஒரு சாதாரண விளக்கத்துடன் மட்டும் அது முடிந்து விடுவதில்லை. செயலுக்குரிய பலனை எதிர்பாராதது மட்டுமல்ல அதனைச் செய்வதனால் செய்யாது விடப் படுகின்ற இன்னோரு செயலினது பலன் பற்றியும் கவலைப்படாத நிலை இருக்கவேண்டும். இதேபோல நிஷ்காமிக கன்மத்தை ஆற்றுவதனால் வினைப் பயன்களில் இருந்துவிடுபடலாம் என்ற உணர்வுடன் கூட அச்செயல் செய்யபட லாகாது. ஆகவே சுருக்கமாகச் சொன்னால் தன்னலமற்ற எப் பலனையும் எதிர் பார்க்காத ஒரு செயல் ஆற்றப்பட வேண்டியது கன்ம யோகத்தின் அவசிய மாகும். ''கடமையை கடமையாகவே செய்தல்'' என்ற நிலையில் செயலில் துறவு மனப்பான்மையுடன் தனக்கு விதிக்கப்பட்ட கடமையினை ஆற்றி வரு வதே கன்ம யோகத்திற்குரிய வழியாகும்.

இவ்வாறு கன்மத்தை யோகமாக ஆற்றுதல் இலகுவில் முடியாதது. அதற்கென சில பயிற்சியும் தகுதியும் கன்மயோகத்தில் விதிக்கப்படுகின்றன. பற்றுக்கள் இருக்கும் வரையும் பலனை எதிர்பார்க்கும் பழக்கம் இருக்கும் என்பதனால் ஒரு கன்மயோகி பற்றற்ற நிலையில் நிற்கவேண்டியது அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். மேலும் செயல் செய்யும்போது பயன்களை இறைவனுக்கு அர்ப் பணித்துவிட்டு அவனுக்காகவே செயல்படும் நிலையிலேயே செயலானது செய் யப்பட வேண்டும். அதாவது இதனை நிஷ்காமிக கன்மமாக பிறர் நலன் பேணும் சேவையாக ஆற்றுகிறேன் என்ற உணர்வுகூட கன்மயோகிக்கு இருத்த லாகாது. இவையனைத்திற்கும் மேலாக விருப்பத்திற்குரிய செயல் செய்தல் என்ற நிலை கன்ம யோகிக்கு இருக்கக்கூடாது. அதாவது செய்து கொண்டி ருக்கும் ஒரு செயலை விட்டுவிட்டு இன்னொன்றுக்கு ஓடிவருதல் தகாதது. செய்யப்படும் செயல் எத்தன்மையாதாயினும் அதுவே தனக்கு விதிக்கப்பட்ட தாயின் அதனை மேற்கூறிய வழியில் யோகமாக ஆற்றுதலே ஒரு கன்ம யோகிக்குரிய தன்மை என கன்ம யோகம் விளக்குகின்றது.

இவ்வாறு கன்ம யோகத்தினை ஆற்றுவதன் மூலம் ஆன்மாவானது முழுமையை அடைந்து கொள்ளலாம் என குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய ஒரு கன்மயோகிக்கு எடுத்துக்காட்டாக ஜனகரை குறிப்பிடலாம். மதிலையில் அரசரான இவர் தனது பணிகளை பலன் கருதாத நிஷ்காமிக கன்மமாகவே ஆற்றுபவராவார். ஒரு முறை ஜனகரும் அவரைச் சார்ந்தோரும் தமது குரு வினிடத்து பாடம் கேட்டுக் கொண்டிருந்தபோது அரண்மனை தீப்பற்றி எரி வதாக செய்தி வந்தது. மற்றவர்கள் எல்லோரும் தமது உடமைகளைக் காக்க எழுந்து ஓடியபோது ஜனகர் மட்டும் இருந்த இடத்திலேயே இருந்து பாடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு பலனை எதிர்பாராது தமக்கு விதிக் கப்பட்ட கடமை என்னவோ அதையே செய்து கொண்டிருக்கும் ஒரு நிலையும் செய்கின்ற செயலை விட்டுவிட்டு இன்னொரு செயலுக்கு ஓடிவராத ஒரு நிலை யும் இங்கு விளக்கப்படுகின்றன. இவ்வாறு சரியான ஒரு கன்ம யோகியாக கடமையாற்றி ஜனகர் தமது முழுமையைத் தேடி கொள்கின்றார். ஆகவே கன்ம யோகமானது எதிர்பாராது பற்றற்ற நிலையில் தமக்கு விதிக்கப்பட்ட கடமையை இறைவனுக்காக செயல் செய்யும் அடிப்படையில் கன்மயோகமாக ஆற்றுவதன் மூலம் ஆன்மாவானது முழுமையை அடைவதற்கு வழி சொல்வ தாகிறது.

## பக்தி யோகம்

பக்தி யோகமானது அன்பின் வழியாக முழுமையடைதலைக் குறிப்பி டுவதாகும். பக்தி என்பது இறைவன் மீது அன்பு செலுத்துதல் எனப்படும். நாரதர் பக்தியினை ஆழ்ந்த இறைபற்று என்பார். மணவாளர் என்பவர் புல னறிவுக்குட்பட்ட பொருட்களிலிருந்து பேதைகள் பெறும் இன்பம் இறைவனை நோக்கி திரட்டப்பட்டால் அதுவே பக்தியாகும் என்பார். இந்த வரைவிலக் கணம் பக்தியினது குறிப்பிட்ட ஒரு தன்மை பற்றி விளக்குவதாகிறது.

மனிதன் உலகப் பொருள்களில் அன்பு செலுத்துபவனாகவும், பற்று வைப்பவனாகவும் அமைகின்றான். பொதுவாக மனிதனுக்கு பழக்கப்பட்ட அவன் அனுபவிக்கின்ற உலகப் பொருள்கள் அனைத்தும் நிலையற்றதாகவே அமைகின்றன. நிலையற்ற பொருள்கள் மீது செலுத்தப்படும் அன்பு ஆரம்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் இன்பத்தை தருவதனாலும் முடிவில் துன்பத்தையே தருகின்றது. நிலையற்றவை என்பதனால் அவை அழியும்போது அவற்றின்மீது வைத்த அன்பும் துன்பத்திற்குக் காரணமாகின்றது. ஆகவே நிலையான பொருள் மீது அன்பு வைத்தலே நிலைத்ததான இன்பத்திற்குரிய வழியாகின்றது. மனிதனைப் பொறுத்தவரையில் அவனுக்கு தெரிந்த ஒரே ஒரு நிலையான பொருள் இறைவன் மட்டுமே. ஆகவே இறைவன் மீது அன்பு செலுத்துதல் நிலைத்த இன்பத்திற்கு வழிகாட்டுவதாகும். இவ்வகையில் இறைவன்மீது அன்பு செலுத்துதலாகிய பக்தி நிலைத்த இன்பமான முத்திக்கு வழிவகுப்பதாகும். இவ்வகையில் அன்பினை ஒழுங்குபடுத்துவதனால் முழுமையைப் பெற்றுக்கொள்ளலாம் என பக்தியோகம் குறிப்பிடுகிறது.

எனவே பக்தியோகம் அன்பு வைத்தல் என்ற நிலைப்பாட்டினை இறைவன் மீது செலுத்தப்படும் அன்பாக ஒழுங்குபடுத்துவதன் மூலம் முழுமையைப் பெற்றுக்கொள்ள வழி சொல்வதாகிறது. இந்தப் பக்தியானது ஆசாரப்பக்தி, உண்மையான பக்தி என இருவகைப்படும் என்று கூறுகின்றது. ஆசாரப் பக்தி என்பது சடங்குகள் கிரியைகளுடன் கூடிய பக்தியாகும். உண்மையான பக்தி என்பது உள்ளன்போடு இறைவன் மீது செலுத்தப்படுவதாகும். எனவே ஆசாரப் பக்தி சடங்குகள் கிரியைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாயும் அமைகின்றது இவற்றிக்கு எடுத்துக்காட்டாக முறையே சிவகோசாரியாரது பக்தியையும் கண்ணப்பரது பக்தியையும் குறிப்பிடலாம். இவற்றுள் உண்மையான பக்தி உயர்ந்தது என்றும் ஆசாரப்பக்தி அதைவிடச் சற்றுக் குறைவானது என்றும் கூறப்படுகின்றது. இவை தவிர பிரபக்தி என்ற முதலாம் பக்தியின் வகைகளில் ஒன்றாக சொல்லப்படுகின்றது. தன்னை இறைவனிடத்தில் சரணாகதியாகக் கொடுத்து விடுதலே பிரபக்தியாகும் தனது வல்லமையில் நம்பிக்கையிழந்து இறைவனிடம் நம்பிக்கை வைத்து தன்னை அவனுக்கு சரணாகதியாக கொடுத்தலாகிய பிரபக்தி உயர்வான ஒரு நிலைப்பாடென்றும் விரைவில் முத்தியைத் தருவதென்றும் சொல்லப்படுகின்றது. இத்தகைய பக்திகளுள் ஏதேனும் ஒன்றைக் கடைப்பிடித்து அன்பு செலுத்துதலை ஒழுங்குபடுத்திக்கொண்டு ஆன்மா முழுமையைப் பெறலாம் என பக்தியோகம் விளக்குகிறது.

இத்தகைய பக்தியினைக் கைக்கொள்ளும் போது பல்வேறு வகையான பக்திப் பாவங்கள் குறிப்பிடப்படுகின்றன. மனிதன் அன்பு செலுத்துவதில் பல்வேறு உறவு நிலைகளைக் கைக்கொள்கின்றான். தாய், தந்தையரிடமிருந்து ஒரு வகை அன்பும் நண்பனிடம், குழந்தையிடம் காதலியிடத்து ஒரு வகை அன்பு செலுத்தப்படுகின்றன. இவ்வாறு அன்பு வைப்பதில் வெவ்வேறு உறவு நிலைகள் மனிதனிடத்துக் காணப்படுவது போல் இறைவன்மீது அன்பு செலுத்துவதன் மத்தியிலும் வெவ்வேறு நிலைகளில் இறைவன் பாவனை செய்யப்படுகின்றான். இந்த நிலைகளையே பக்திப்பாவங்கள் என பக்தியோகம் குறிப்பிடுகிறது. இத்தகைய 19 பக்திப் பாவங்களை சாத்திரங்கள் கூறுகின்றன. இவற்றுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாஸ்ய பாவம்:**

தாச மார்க்கத்திற்கு சமமானது: திருமாலை ஆண்டவனாகவும் தன்னை அடியானாகவும் பாவனை செய்வதே இவ்வழிபாட்டுப் பாவனையாகும். தொண்டரடிப் பொடியாழ்வார் இந்நெறி நின்று திருமாலை வழிபட்டார்.

**வாத்ஸல்ய பாவம்:**

சற்புத்திர மார்க்கத்திற்கு சமமானது எனினும் இதில் ஒரு வேறுபாடு உண்டு, சைவசமயத்தில் இறைவன் தந்தையாகவும், அடியவர் மகனாகவும் பாவனை செய்வது மட்டுமே இடம்பெறும். ஆனால் வைணவத்திலோ அடியவன் தாயாகவும் தந்தையாகவும் பாவனை செய்து வழிபடல் உண்டு. தாயாக பாவனை செய்தவர் பெரியாழ்வார். தந்தையாக பாவனை செய்தவர் குலசேகரராழ்வார்.

**சக்ய பாவம்:**

இது சக மார்க்கத்திற்கு சமமானது. நண்பனாக பாவனை செய்து வழிபடல் அர்ச்சுனன். ஸ்ரீகிருஷ்ணன் தொடர்பு சக்ய பாவத்துக்கு எடுத்துக் காட்டு.

**மதுர பாவம்:**

நாயக நாயகி பாவ வழிபாடு சக மார்க்கம் போன்றது. ஆண்டாள் திருமங்கையாழ்வார் முதலாகப் பல திருவடியார்கள் இவ்வழிபாட்டில் ஈடுபட்டோர்களாவர். இவற்றுள் காதலன்-காதலி நிலையான மதுரபாவம் மிகச் சிறந்ததென பாராட்டப்படுகின்றது.

காதலன் காதலியாக இறைவனைக் காணும் மதுர பாவம் பற்றி டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிடும் போது புலன் இன்பங்கள் அற்றதான உயர்ந்த அன்பே இந்நிலையில் கொள்ளப்படுகிறது என்றும் மனிதனுக்குத் தெரிந்த மிக உயர்ந்த அன்பு வைக்கும் நிலை இதுவே என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பக்திப் பாவங்களுள் ஒன்றினைக் கைக்கொண்டு இறைவன் மீது உள்ளம் உருகி நின்று ஈடுபட்டு அந்த அன்பின் வழியாக முழுமையினை தேடிக்கொள்வதாகிறது. கற்புடைய மனைவி கணவனையே காண விழைவது போல் நான் விட்டலைக் காண விழைகின்றேன் என கபீர் தாசர் பாடுவது பக்தி யோகியின் மனநிலையை புலப்படுத்துவதாகும். எனவே அன்பினை ஒழுங்குபடுத்திக் கொண்டு இவ்வாறு அமைத்தலினால் முழுமையை தேடிக் கொள்ளலாம் என பக்தியோகம் விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அறிவு வழியாக முழுமையடைதலாகும். ஆன்மாவானது அனுபவிக்கும் துன்பங்களனைத்திற்கும் மூலகாரணம் அறியாமை எனப்படுகிறது. இந்துமதத் தத்துவங்களில் இது மாயை என்றும் பாசம் என்றும் அவித்தை என்றும் பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்பட்டாலும் அறியாமையே அந்த அடிப் படையாக அமைகிறது எனலாம். எனவே முழுமைக்கு வழி இந்த அறியா மைக்கு நேரெதிரான அறிவேயாகும் என்ற வகையில் ஞானயோகம் அறிவினை முழுமைக்குரிய வழியாக குறிப்பிடுகிறது.

அறிவு எனும்போது மனிதனது சாதாரண அறிவு இங்கு கருதப்படு வதில்லை. அதாவது அறிவு என்பதற்கும் ஞானம் என்பதற்கும் வேறுபாடு உண்டென்பது கவனிக்கத்தக்கது. அதாவது சாதாரண அறிவு ஞானம் எனப் படுவதில்லை. ஞானம் எனும்போது அறிவதற்கரியதான பிரமத்தை அறிகின்ற அறிவு எனப்படுகின்றது. இத்தகைய ஞானமாக அறிவினை ஒழுங்கு படுத்திக் கொள்வதன் மூலம் ஆன்மா முழுமையைத் தேடிக் கொள்ளலாம் என்பதையே ஞானயோகம் விளக்குகிறது. இவ்வாறு அறிவினை ஞானமாக ஒழுங்குபடுத்து வதற்கு குறிப்பிட்ட சில பயிற்சி முறைகள் குறிப்பிடப்படுகின்றன. அவ் வகையில் ஞானயோகம் இரண்டு நிலைகளைக் கொண்டதாக அமைகிறது. இவ்விரண்டு நிலைகள் பற்றியும் தெரிந்துகொண்டால் ஞானயோகம் பற்றி விரிவாக விளங்கிக்கொள்ளலாம்.

ஞான யோகத்தின் முதலாவது நிலை அறநிலை எனப்படுகின்றது. இதனை தயாராகும் நிலை எனக்குறிப்பிடலாம். அதாவது ஞானம் பெற்றுக் கொள்வதற்கு ஆன்மா தன்னைத் தயார்படுத்தும் நிலையே இதுவாகும் இந் நிலையில் ஆன்மா முதலில் பற்றுக்களை விட்டுவிட பழகவேண்டும். பற்றுக்கள் இருக்கும் வரையிலும் ஆசையும் துன்பமும் பிறவியும் இருக்குமாதலால் அறியாமை செயற்படுவதாகும். ஆகவே பற்றுக்களினின்றும் விடுபடல் அவசியமாகின்றது. மேலும் புலனடக்கம் ஆன்மாவிற்கு தேவை எனப்படுகிறது. புலன்கள் தத்தம் வழியில் செல்வதனால் ஆன்மா அவற்றின் நுகர்ச்சியைப் பெற்று உலக இன் பங்களில் மயங்கி அறியாமையில் திளைப்பதோடு அறிவுபெற முடியாததாகவும் அமையும். ஆகவே புலன்கள் தம் வழிச் செல்லாது கருதப்படும் புலனடக்கம் அவசியமாகிறது. மேலும் ஆன்மாவிற்கு முழுமையில் அதாவது விடுதலையில் ஆர்வம் இருக்கவேண்டும் எனவும் சொல்லப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக நம்பிக்கை மிகத்தேவை என வலியுறுத்தப்படுகின்றது. இவ்வகையில் தயாராகிக்கொண்ட ஆன்மா அடுத்த கட்டத்திற்கு பிரவேசிக்கிறது.

இந்த இரண்டாவது கட்டம் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்ற மூன்று படிமுறைகளைக் கொண்டதாகும். சிரவணம் கேட்டல், மனனம்- சிந்தித்தல் என்றும் கூறலாம். தயாரான ஆன்மா தக்க ஒரு குருவானவரை யடைந்து அறிவியல் நூல்களையும் அறிவினையும் கற்றுக்கொள்ளுதலே சிரவண மாகும். இங்கு தக்க குருவானவர் என்பவர் அறிவியல் நூல்களில் புலமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர் மட்டுமன்றி ஞானயோகத்தில் நின்று அனுபவம் பெற்றவராகவும் அமைய வேண்டியவராவர். சிரவணத்திற் கற்றவற்றை மீண்டும் சிந்தித்தல் மனனமாகும். அவற்றைத் திரும்பத்திரும்ப சிந்தித்து அவற்றில் எழும் சந்தேகங்களைத் தம் அறிவுப் பயிற்சியினால் தீர்த்துக்கொண்ட ஒரு உண்மை இந்நிலையில் ஏற்படும். எனவே மனனம் என்பது புதிதாக எதையும் கற்றுக்கொள்வதன்றி கற்றவற்றிலிருந்து ஒரு உண்மையைத் தெளிதலாகும். தெளிந்த உண்மையால் ஆன்மா நிலைத்து நிற்க புறச் சூழ்நிலைகள் தடையாக அமையலாம். இதனை தவிர்ப்பதற்கு நிதித்யாசனம் வழியாக சொல்லப்படுகிறது. நிதித்யாசனம் என்பது தெளிந்த உண்மையில் ஆழ்ந்து போதலாகும். இந்நிதித்தியாசனத்தில் ஆன்மாவிற்கு ஞானம் பிறக்க அந்ஞானத்தினால் முழுமையடைகிறது. இத்தகைய ஞான யோகத்தை மிகச் சிறந்தது என இந்துமத அறிஞர் விளக்குவார். தமக்கு விருப்பமானவர் ஞானியே என்றும், ஞானியும் நானும் ஒன்று என்றும் கண்ணன் பகவத் கீதையில் குறிப்பிடுகிறார். தீயானது பொருட்களை எல்லாம் சாம்பலாக்குவது போல் ஞானமானது வினைகளைச் சுட்டெரிக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. இத்தகைய அறிவினை ஒழுங்குபடுத்தும் ஞானத்தினால் ஆன்மா முழுமையடைதலை ஞானயோகம் விளக்குகின்றது. இவ்வாறு செயல் மார்க்கம், அன்பு மார்க்கம். அறிவு மார்க்கம் எனும் ஆன்மீக சாதனங்கள் ஆன்மாவின் முழுமைக்கு இந்து மதத்தால் கூறப்படுவனவாகின்றன.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. திருக்கோயிலில் இடம்பெறும் மூவகைக் கிரியை முறைகளையும் விளக்குக:

இந்து சமயத்தைப் பொறுத்தவரை அதன் கட்டுக் கோப்பை நிலைப் படுத்தி வைக்கும் சட்ட அமைப்புப் போன்று இருப்பவை கிரியைகளே. சிந் தனையளவில் சமயத்தை விட்டுவிடாது நமது நாளாந்த வாழ்வுடன் இணையும் நெறி முறையாக, உணர்வுரீதியாக இணைந்து வளர்வதற்கு உதவுபவை கிரியைகளாகும். கிரியைகள் என்னும்போது தமது சொந்த நன்மை கருதிச் செய்பவை ஆன்மார்த்தக் கிரியைகள் என்றும் எல்லா உயிர்களதும் நன்மை கருதிச் செய்பவை பரார்த்தக் கிரியை எனவும் இரண்டு வகைக் கிரியைகள் உண்டு. பரார்த்தக் கிரியைகள் யாவும் ஆலயங்களில் நிகழ்வனவே.

இப்பரார்த்தக் கிரியைகள் மூன்று வகையின. இவை நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிய கிரியை என்பனவாம். திருக்கோயில்களில் நிகழும் கிரியைகளை பூசை எனவும் மக்கள் பெரிதும் அழைப்பர்.

நித்திய கிரியையை பற்றி நாம் நோக்குமிடத்து கோயில் அர்ச்சகர் தமது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து வெண்பட்டு, உத்தரீயம், விபூதி, உருத்திராக்கம் முதலியவற்றை அணிந்து கோவிலை அடைந்து முதலில் திருநந்தி தேவரையும் துவார பாலகர்களையும் பிரார்த்தித்து அனுமதி பெற்று சகளீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம் முதலியவற்றைச் செய்து பூஜைக்குத் தயாராக தம்மை ஆக்கியபின் வைரவரின் ஆலயம் சென்று வணங்கி முதல் நாளிரவு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த திறப்பினை அங்குச முத்திரையால் எடுத்துவந்து வாசலில் நின்று திருப்பள்ளி எழுச்சி முதலியன பாடித்துவாரபூசை நிகழ்த்திச் சிவசக்தி மந்திரத்தை உச்சரித்தபடி கதவைத்திறப்பார்.

பின் உள்ளே சென்று முதல் நாள் அர்ச்சித்த பூக்கள், மாலைகளை களைந்து பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம் ஆகியவற்றைக் கொடுப்பார். அதன் பின் முதலில் விநாயகருக்கும் பின் மூலஸ்தான மூர்த்திக்கும் பின் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அதன் பின் நந்தி. பலிபீடம் ஆகியவற்றிற்கும் இறுதியில் சண்டேஸ்வரருக்கும் பூசை நடைபெறும்.

பூசையின் முதல் அங்கம் அபிடேகம். பரிசுத்தமான நீர் இதற்கெனச் சேகரிக்கப்பட்டு அதனை மந்திரங்களினாலே புனிதமாக்கி அபிடேகம் செய்வர். அபிடே கத்திற்குரிய திரவியங்களாகப் பால், தயிர், நெய், தேன், பஞ்ச கவ்யம், பஞ்சாமிர்தம் முதலியனவும் பயன்படுத்தப்படும். அபிடேகம் நடக்கும் போது வேதகோஷம் இடம்பெறும். அபிடேகத்தின் பின்னர் சுவாமியை அலங்கரித்து நைவேத்தியம் படைத்து, தூபதீபம் காட்டப்படும். அதன் பின் திரைச்சீலை விலகுகின்றது. திருவருள் என்னும் சக்தியின் துணைநாடி வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவோருக்கு இறை அருள் கிடைக்கின்றது. தீபாராதனை நடைபெறும் போது சுவாமி தரிசனம் செய்வதைப் பெரும் பேறாகப் பெரியோர் கருதுவர். இது நிகழ்வதன் நோக்கம் ஆன்மா ஞான விளக்கை நண்ணு வதற்கேயாம்.

இதன் பின் ஒவ்வொரு மூர்த்திக்கும் பூசை செய்து அர்ச்சனை நடைபெறும். இறைவனுடைய குண இயல்புகளையும், திருவுருவச் சிறப்புக்களையும், அருட் செயல்களையும் சித்தரிக்கும் சிறப்புப் பெயர்களை ஒவ்வொன்றாக உச்சரித்துக்கொண்டே பத்திர - புஷ்பங்களை இறைவன் திருவடியில் சாத்துதல் அர்ச்சனை எனப்படும். நித்திய பூசையில் 16, 25, 50, 100 என்னும் தொகையுடைய நாமாவளி (பெயர் வரிசை) களில் ஒன்றை ஓதியும் அர்ச்சனை செய்யப்படும்.

நித்திய பூசையில் வாழ்த்து இடம்பெறும். பூசையில் எவையேனும் குறைகள் நேர்ந்திருந்தால் அவை எல்லாம் நிறைவுகள் ஆக வேண்டுமென்றும், ஊரவரும், உலகத்தவரும் இறைவனருளால் நல்வாழ்வு வாழ வேண்டுமென்றும் அர்ச்சகர் வாழ்த்துவார்.

இறுதியில் பூசை நிறைவுபெற்று விபூதி, தீர்த்தம், பூ, சந்தனம், குங்குமம், பிரசாதம் முதலியன வழங்கப்படும். ஆகம விதிப்படி ஆலயங்களில் நடைபெறும் நித்திய பூசை நியதி இதுவாகும்.

இந்நித்திய பூசை ஆலயங்களின் வசதிக்கேற்ப ஒரு வேளை முதல் பன்னிரு வேளைகள் வரை நிகழும் திருச்செந்தூர் முதலிய தமிழகக் கோயில்களில் பன்னிரு வேளைகள் பூசை நிகழ்கின்றது எங்கள் நாட்டில் வசதி படைத்த கோயில்களில் ஆறுகாலப் பூசையும், வசதி குறைந்த கோயில்களில் மூன்று காலமும் நடைபெறுகின்றது. ஆறுகாலப் பூசையில் உஷக் காலப் பூசை சூரியன் உதிக்க மூன்றேமுக்கால் நாழிகையின் முன்னரும், காலைச் சந்திப் பூசை சூரியன் உதித்த பின் ஏழரை நாழிகைக்குள்ளும், உச்சிக்காலப் பூசை நடுப்பகலிலும், சாயங்காலப் பூசை சாயரட்சைப் பூசை எனவும் வழங்கப்படும். இரண்டாங்காலப் பூசை - சாயங்காலப் பூசையிலிருந்து மூன்றேமுக்கால் நாழிகையில் நிகழும். ஆறாவதாகிய அர்த்தயாமப் பூசை இரண்டாங்காலப் பூசையில் இருந்து மூன்றேமுக்கால் நாழிகை வரை உள்ள காலப் பகுதியில் நிகழ்வு பெறும் என்பர்.

நைமித்தியக் கிரியைகள் பற்றி பார்க்குமிடத்து நைமித்திய கிரியையெனினும் விசேஷ கிரியையெனினும் ஒன்றே. இவ்வகைக் கிரியைகள் குறிப்பிட்ட விசேஷ தினங்களில் மட்டும் நிகழ்வன. வருடமொரு முறையும் பல வருடங்களிற்கொரு முறையும் நிகழும் நைமித்தியக் கிரியைகளுமுண்டு.

தினந்தோறும் நிகழும் கிரியைகளே, வாரம் ஒரு முறை விரிவாக நிகழும் சந்தர்ப்பங்களும் நேரிடலாம். சுக்கிரவாரம் எனப்படும் வெள்ளிக்கிழமை தோறும் இவ்வாறு சுவாமி தரிசனம் செய்ய அடியவர்கள் பெருங் கூட்டமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்கு செல்வது பெருவழக்காகும். இவ்வாறே குரு வடிவினனான முருகனையோ, தட்சணாமூர்த்தியையோ வழிபட வியாழக்கிழமை தோறும் மக்கள் அவ்வவ் கோயிலுக்கு செல்வார்கள். சோமவாரம், சிவனை விசேஷமாக வழிபடுவதற்குரியதான வாரம் தோறும் வரும் திருநாள்.

இரு வாரங்களுக்கு ஒரு முறை வருவது பிரதோஷம் முதலான விசேஷ நாட்களாகும். இத்தினங்களில் விரதம் அனுஷ்டிக்கும் சைவ மக்கள், அன்று நிகழும் விசேஷ பூசைகளைத் தரிசிப்பதற்காகப் பெருந்தொகையினராய் கோவில்களிற் கூடுவர். கிருத்திகை, சதுர்த்தி, சஷ்டி, மாதப்பிறப்பு முதலிய விசேட தினங்கள் மாதமொருமுறை வருவன. சங்கிராந்தி முதலிய தினங்கள் சில மாதங்களிற்கு ஒரு முறை நிகழ்வன. மாதப் பிறப்பிலும், கிரகணம் நிகழும் தினங்களிலும் விசேஷ தீர்த்தோற்சவம் முதலியன நிகழும். நடேசுர பிஷேகங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆறுமுறை நிகழ்வன. ஆடிப்பூரம், ஆவணிச் சதுர்த்தி, ஆவணி மூலம், நவராத்திரி, விஜயதசமி, கந்தசஷ்டி, திருக் கார்த்திகை கிருத்திகா தீபம், கார்த்திகைச் சோமவாரம், மார்கழித்திருவாதிரை, தைச்சங் கிராந்தி, மாசிமகம் முதலியனவும், பிரமோற்சவமும் வருடமொரு முறை நிகழும் நைமித்திக நிகழ்ச்சிகளாகும். மகாமகம் பன்னிரண்டு வருஷங்களுக் கொருமுறை நிகழ்வது. அர்த்தோதயம், மகோதயம் முதலியனவும் கும்பாபி ஷேகமும் பல வருஷங்களுக்கு ஒரு முறை வருவன. இதுவும் நைமித்திய கிரியைக்குள்ளேயே அடங்குகின்றது.

நைமித்திய கிரியைகளில் இடம்பெறும் விசேட பூசைகள் நடைபெறு மிடத்து அவ்வவற்றிற்குரிய மரபு முறைப்படி விசேட அபிஷேகம், அலங்காரம்: ஆராதனை, விசேட அர்ச்சினை உற்சவம் விரிவாக நடைபெறும். ஆண்டுக் கொருமுறை நிகழ்வதாகிய உற்சவத்தில் (மகோற்சவம்) முக்கிய நிகழ்ச்சிகளாக கொடியேற்றுத்திருவிழா, வேட்டைத் திருவிழா, தேர்த்திரு விழா, தீர்த்தத் திருவிழா என்பன இடம்பெறும். இத்திரு விழாக்களின்போது சுவாமி வீதி உலா வருவதும் முக்கிய நிகழ்வாகும். இவ்வேளை சுவாமி தரிசனம் செய்தல் விசேடமாகக் கருதப்படும்.

உற்சவ தினங்களில் விசேட தீபங்களும் இடம் பெறும். அதாவது அடுக்குத்தீபம். நக்ஷத்திர தீபம், விருஷ தீபம், பிருஷம்மிருக தீபம், கும்ப தீபம், கற்பூர தீபம், பஞ்சாராத்தி என்பனவும் இடம்பெறும். தீபாராதனையை அடுத்து நிகழும் உபசார பூசையில் கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் என்கின்ற உபகரணங்கள் உபயோகப்படுத்துகின்றன.

இதை அடுத்து முந்நூறு, ஆயிரத்தெட்டு, இலட்சம், கோடி என்னும் தொகையுடைய நாமங்கள் ஓதியும் அர்ச்சனை செய்யப்படும். நித்திய பூசையிலே ஏற்படும் குற்றங்குறைகளை நீக்குவதற்காகவே நைமித்திய கிரியைகள் நிகழ்த் தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமியக் கிரியைகளை நோக்குமிடத்து, நிஷ்காமியமாக வழிபாடு அமைவதே சிறப்பு. பலனெதையும் எதிர்பாராது கடமையுணர்ச்சியுடன் செய்யப்படும் வழிபாடு நிஷ்காமிய வழிபாடு ஆகும். பலனை எதிர் பார்த்து ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நிகழ்த்துவது மானிடரான எமது இயல்பு. உயர் நிலை எய்திய ஒரு சிலர் மட்டுமே செய்பவற்றைப் பலன் கருதாது செய்பவர்கள். எனவே பலன் அவாவிக்கிரியைகள் நிகழ்த்தும் பெரும்பாலோர்க்கு உரியவாறும் கிரியைகளை ஆகமங்கள் விதித்துள்ளன. இது கிரியை விளக்கங்களினிறுதியில் அவை தரும் பலன்களை ஆகமங்கள் கூறுவதிலிருந்து நாம் உணர முடிகின்றது.

கிணறு தோண்டுதல், குளம் வெட்டுதல், தேவாலயங்களை கட்டுவித்தல், அன்னதானம் செய்தல், தோட்டங்களை நடுவித்தல் முதலிய நற் செயல்கள் பெரும் பலனை அளிக்கும் என நூல்கள் கூறுகின்றன.

நித்தியக் கிரியைகளும், நைமித்தியக் கிரியைகளும் இவ்வாறு பலனை எதிர்பார்த்துச் செய்யின் காமியக் கிரியைகளாகும். குறிக்கோளைக் கொண்டு நித்தியார்ச்சனை செய்வித்தல் காமியத்தின் பாற்படும் நித்தியக் கிரியையாகும். விசேட தினங்களில் இவ்வாறு நிகழ்த்தும் அர்ச்சனையும் காமியத்தின் பாற்படும் நைமித்திகமாகும். இவ்வாறு நூல்கள் வகுத்துக் கூறாவிடத்தும் இவ் உண்மையினை நாம் ஊகித்தறிய முடிகின்றது. அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, உற்சவம் ஆகிய கிரியைகளாகவும் அமையலாம். இவற்றுள் ஸ்நபனாபிஷேகம், அஷ்டோத்தரசதகலசாபிஷேம், சஹஸ்ரகலாசம்பிஷேகம் முதலிய அபிஷேகங்களும், விசேஷ திருவிழாக்களும் குறிப்பிடத்தக்கன.

குறிக்கோளொன்றினை மனதிற்கொண்டு, அது நிறைவேறும் வரை காத்திருந்து, அது நிறைவேறியதும் முன்னரே சங்கற்பித்துக் கொண்டவாறு நாம் கருதிய அபிஷேகம் திருவிழா முதலியவற்றை செய்விக்கும் வழக்கம் நம் நாட்டில் பெரிதும் பயின்று வருகிறது.

கிரியைகள் பலனை நோக்காகக்கொண்டு செய்யுமிடத்தும், நாம் அவனருளாலே அவன் தாள் வணங்கும் தன்மையினர் என்பதை நன்குணர்ந்து, கிரியைகளை நிகழ்த்தி முடிக்கும் பொழுது, நாம் பெறவிருக்கும் பலன்களனைத்தையும் சிவார்பணமாக அவனிடம் சமர்ப்பித்தல் எமக்குப் பெரும் மனச் சாந்தியினையும் பேருய்வையுமடைப்பிக்கும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. அறுவகைச் சமய வழிபாட்டு நெறிகளுள் "சாக்தம்" சிறப்பிடத்தை வகிக்கின்றது. ஆராய்க:

வேதத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த சமயங்கள் வைதிக சமயம் என அழைக்கப்படுகின்றன. இவை ஆறு வகையின. சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பனவே அவை. இவற்றுள் சக்தியை முழுமுதலாகக் கொண்ட சமயம் சாக்தம். இச் சமயத்தைச் சார்ந்தவர்கள் 'சாக்தர்கள்' என்று அழைக்கப்படுகின்றார்கள். சாக்தம் என்பது சாக்தேயம் எனவும் வாமம் எனவும் கூறப்படுவதுண்டு. இந்தியாவிலே வங்காளத்திலும் அசாமிலும் இன்றும் சாக்தர்கள் வாழுகின்றனர். எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளை தாயாக வழிபடும் வழிபாடு தொன்றுதொட்டு இன்று வரை காணப்படும் வழிபாட்டு நெறியாக விளங்குகின்றது.

தாயாக விளங்கும் அன்னை பராசக்தி, மாகாளி, சாமுண்டீஸ்வரி, உமை, பார்வதி, மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, நீலாயதாட்சி, கருமாரி, முத்துமாரி, மாரியம்மன், பகவதி, வைஷ்ணவி, பைரவி, மகாலட்சுமி, அஷ்டலட்சுமி, மகிசாசுரமர்த்தினி என்ற பல்வேறு எண்ணில்லாப் பெயர்களுடன் மக்களால் வழிபடப்படுகின்றாள்.

இவ்வாறாகப் போற்றப்படும் அவளுடைய வடிவங்கள் பொதுவாக முத்திறத்தன (1) பாரம் – இதை அறிந்தவர் எவருமிலர் என்று விஷ்ணுயாமளம் கூறுகிறது. (2) ஸூக்ஷ்மம் - மந்திரவடிவம். (3) ஸ்தூலம் - பக்தர்கள் வசதிக்கும் விருப்பத்திற்கும் வழக்கத்திற்கும் என சித்தரிக்கப்படுகிறாள்.

சக்தி வழிபாடானது சிந்துவெளிக் காலம் தொடக்கம் வழிபடப் பட்டுள்ளது என்பதை அக்கால முத்திரைகளிலிருந்து நாம் அறிகின்றோம். சாந்தமானதும், அகோரமானதுமான தோற்றம் கொண்ட பெண் உருவங்கள் முத்திரைகளில் காணப்படுகின்றன. இவை உலகத்தோற்றத்திற்கு சக்தியே காரணம் என்பதை உணர்த்துகின்றன.

வேத காலத்திலும் சக்தி வழிபாடு காணப்பட்டது. இக்காலத்தில் உஷை, ராத்திரி போன்ற பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டுள்ளன. அத்துடன் ஆறுகளைப் பெண்ணாகக் கருதி வழிபடும் வழக்கமும் இருந்திருக்கின்றது. கன்னியாகுமரி தெய்வம் இக்காலத்தில் பெருமை பெற்றிருக்கின்றது, அதன் மகிமையை தைச்திரியாரண்யமும் குறிப்பிடப்படுகின்றது. வேதகால இறுதிப் பகுதியான உபநிடதங்களுள் சுவேதாஸ்வர உபநிடதம் 'த்வம் ஸ்த்ரீ த்வம் புமானஸி' என்கின்றது. அதாவது சக்தியே எல்லா வெளியீடுகளாகவும் விளங்குகிறாள் என்கிறது.



126883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன இதிகாச காலத்தில் சக்தி வழிபாடு மிகப் பிரசித்தி பெற்ற தாகின்றது. சிவபுராணத்தில் உமை, தன்னைப் பரப்பிரம்மமாகவும், பேரொ ளியாகவும், பிரணவமாகவும், பரந்த இவ்வுலகமாகவும், காரணகாரியமாகவும் எல்லாமாய் இருப்பதாகக் கூறுகின்றாள்.

மார்க்கண்டேய புராணம் அன்னை பராசக்தியின் பெருமையையும், அவளது பல்வேறு வடிவில் அருளையும் பின்வருமாறு சொல்கிறது, "பரா சக்தி உருவமற்ற அருவமாக "மாகாளி" என்ற வடிவில் உலகத்தை சிருஷ் டிக்கிறாள். இலக்குமியின் திரு உருவமாக இருந்து உலகிற்குச் செல்வத்தையும், வளத்தையும் கொடுக்கிறாள். அறிவையும், அறிவு வழிப்பட்ட கல்வியையும் சரஸ்வதி (கலைமகள்) வடிவத்திலிருந்து சாதிக்கிறாள். இந்த உலகிலே அதருமம் நிறைந்த நிலையில் "மகாமாரி" என்ற ஆவேச வடிவம் கொண்டு உலகத்தை அழிக்க முற்படுகின்றாள். என்று சக்தியின் பல வடிவங்களையும், மகிடாசுரனை அழித்தமை பற்றியும் கூறுகின்றது.

மேலும் சிவனின்றேல் சக்தியில்லை, சக்தியின்றேல் சிவமில்லை என்ற கருத்திற்கு ஏற்ப புராணங்கள் சித்திரிக்கின்றன. இதற்காக வகுக்கப்பட்ட உருவமே சிவனின் அர்த்தநாரீஸ்வர வடிவம்.

இதிகாசத்தில் வீரத்திற்குரிய தெய்வமாக சக்தி வழிபட்டுள்ளாள்.

மத்திய காலத்தில் சாக்தம் முதன்மை நிலையை அடைந்திருந்தது. குப்தர் காலத்தில் பெண் தெய்வங்களுக்குச் சிறப்பான கோயில்கள் எழுப்பப் பட்டன. இக்காலத்தில் காளிதாசர் சக்தி பற்றிப் பல பாடல்களைப் பாடி யுள்ளார்.

தென்னிந்திய வரலாற்றை நாம் எடுத்து நோக்கும் போது சங்க காலத் தில் பாலை நிலத் தெய்வமாக கொற்றவை எனும் பெயருடன் வழிபடப்பட் டுள்ளாள் "பெரு மோட்டுக் காடுகிழாள்" அதாவது எல்லோரையும் பெற் றவள் என்றும். அகநானூறில் "ஓங்கு புகழ் கானமர் செல்வி.." என்றும், திருமுருகாற்றுப்படை "வெற்றிவேல் போர் கொற்றவை" என்றும், நெடு நல்வாடையில் போருக்கு தலைவனை செல்லவிடுத்த தோழிமார் வெற்றியுடன் மீளவேண்டும் என கொற்றவையை போற்றியுள்ளனர் என்றும் சங்க இலக்கியங் கள் மூலம் அறிகின்றோம். இவ்வாறாக சக்தி கொற்றவை என்ற பெயரால் போற்றப்பட்டு, வழிபடப்பட்டு வந்துள்ளாள்.

சங்கமருவிய காலத்திலும் சக்தி வழிபாடு குறிப்பிடப்படுகின்றது. இக் கால இலக்கியமான மணிமேகலையில் "சக்கரவாளக் கோட்டம் புகழ் பெற் றிருந்த காடமர் செல்வி" என்பதில் இங்கு சக்திக்கு கோயில் இருந்ததாக கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் கொற்றவைக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்ததாக தெரிய வருகின்றது. சங்கமருவிய கால இறுதிப்பகுதியில் காரைக் காலம்மையார் சிவனைப் பாடுமிடத்து சக்தி பற்றியும் பாடியுள்ளது குறிப்பி டத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவர் காலத்தில் காடுகிழாளுக்கு கோயிலும், முற்றமும் அமைத்து வழிபடும் வழக்கம் இருந்துள்ளது. 'திருச்சக்தி முற்றத்து சிவக்கொழுந்தை' என நாவுக்கரசர் பாடியுள்ளார். நாயன்மார்களும் தமது தேவாரங்களிலே சக்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். திருஞான சம்பந்தர் ''பிடியதன் உருஉமை'' என்னும் பாடலில் உமை ஒரு பெண் யானையின் வடிவம் கொண்டார் என்றும் ''உற்றுமை சேர்வது மெய்யினையே...'' என்பது உமாதேவி சேர்ந்திருப்பது உனது (சிவனின்) திருமேனியே எனவும் ''மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை...'' என்றும். நாவுக்கரசர் ''மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி...'' என்று சிவனையும், உமையையும் உருவகம் செய்து பாடும் பாடலும் ''அப்பன் நீ அம்மை நீ'' என்ற பாடலும், சுந்தரர் ''வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப், பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்...'' என்றும், மணிவாசகர் ''அயல் மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக் கலந்(து) ஆண்டலுமே...'' என்றும், அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'' என்றும் பாடும் பாடல்களிருந்து பல்லவர் காலத்தில் சக்தி வழிபாடு மிகச் சிறப்புற்று விளங்கியது என்பதை அறிய முடிகின்றது.

ஆதிசங்கரர் (கி. பி. 8ம் நூற்றாண்டு) தாம் இயற்றிய சௌந்தர்ய லகரியில் பராசக்தி படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல் அருளல் முதலிய ஐந்து தொழில்களையும் செய்வதாகக் குறிப்பிடுகின்றார்.

மேலும் இவர் ''ஒவ்வொரு மனிதரும் கீழ்த்தரமான காம இன்பத்தைப் பேரின்ப நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்றால் பெண்மையிலே தெய்வீகத்தைக் காணவேண்டும். ஒவ்வொரு சக்தி உபாசகரும் தன்னையே பெண்ணாகக் கருதிக்கொண்டால் கீழ்த்தரமான இச்சையைப் புனிதமான ஆன்மீக வேட்கையாக மாற்றலாம் என்பது சாக்தர்களின் கொள்கையாக இருக்கவேண்டும்'' என்கிறார்.

சோழர் காலத்தில் சக்தி கோயில்கள் பெருமளவில் அமைக்கப்பட்டன. சோழர் இராஜராஜேஸ்வரியையும் பாண்டியர் மீனாட்சியையும் வணங்கினர் என சான்றுகள் கூறுகின்றன.

நாயக்கர் தமது அரசை மீனாட்சி தந்த அரசாகவே கருதினர். இக்காலத்தில் குமரகுருபரர் சகலகலாவல்லி மாலையில் சக்தியைப் போற்றுகின்றார். அபிராமிபட்டர் ''தனம் தரும், கல்விதருமொரு நாளுந் தளர்வறியா'' என்று சக்தியைப் போற்றிப் பாடுகின்றார்.

மேலும் முக்கண்ணையுடைய அம்பிகையை துதிப்பவருக்கு எந்தவிதமான தீமையும் அண்டவே அண்டாது என்று அடித்துச் சொல்கின்றார் அபிராமி பட்டர்.

ஆத்தாளை, எங்கள் அபிராமி வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை, ஐங்கணை பாசாங்குசமும் கரும்புமங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்குமில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அபிராமிபட்டர் பாடும் இப்பாடல் இன்றும் தினசரி வழிபாடாக காணப்படுகின்றது. பாரதி கூட "அம்பிகையை சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்று பாடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக சிறப்புப்பெற்ற எல்லாம் வல்ல அம்பிகையை உபாசிக்கும் வழிகள் பல உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்த வழிகள் மூன்று உள்ளன. வேத சிவாகமங்கள் காட்டும் வழிகள் இரண்டு. தந்திர சாஸ்திரங்கள் கூறுவது இன்னொன்று. வைதிக மரபில் வெளிப்படும் அம்பிகை, அக்கினி குண்டலத்தில் தோன்றியவளாக கருதப்படுகின்றாள். தேவர்கள் காரியங்களை சாதிப்பதற்காகவே அவள் இவ்வாறு தோன்றுகின்றாள். இவ்வாறு அக்கினியில் விசேட வடிவாகிய அவள் மந்திரத்தால் எரியோம்பி அருள்வேண்டி பேறுகள் யாவும் கிடைக்கப் பெறுகின்றன.

ஆகம மரபிற்கமைய செய்யப்பட்டிருக்கும் திருவுருவில் அர்ச்சிப்பவர் நீராட்டி புத்தாடை புனைவித்து அழகுக்கு அணிகலம் சூடி 64 உபச்சாரம் சமர்ப்பித்து மனங்களில் தோன்றி திருவருள் பாலிக்கும்படி அர்ச்சிக்கப்படுகின்றாள். இவ்வரிய திருவடிகளை அடியார்கள் அவரவர் தகுதிற்கேற்ப பாவனை முதலியவைகளால் வழிபடுகின்றனர்.

தாந்திரீக வழிபாட்டு நெறியில் அம்பிகையை ஸ்ரீசக்கரம் என்று யந்திரத்தில் எழுந்தருளிவித்து பரிவாரங்கள் தனித்தனி ஆவரணங்களாக பல கோணங்களில் அம்பிகையை நோக்கிய வண்ணம் அமர்ந்திருப்பதாக பாவனை செய்து வழிபடுவது ஆகும். 44 வரிசைகளை பாவனையாக பூசித்தல் ஸ்ரீ சக்கர பூசையின் முதலம்சமாகும். ஸ்ரீ சக்கரத்தில் பூசை செய்யுமுன்பாக மந்திர தந்திரங்களால் ஆக்கிக் கொள்வர். தெய்வாப்சம் நிறைந்த தெய்விக சரீரத்தில் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை தெய்வங்களை தனித்தனி இடத்தை கொடுத்துவர உடம்பு முழுவதும் ஸ்ரீ சக்கரமாகிவிடும். ஸ்ரீ சக்கர பூசையின் சிகரம் உள்ளக் கமலமாகும். அங்கு மானசீகமாக, வழிபாட்டு உபாசகன் சக்தியின் ஆற்றல்களை பெறுகின்றான். இவ்வாறாக சக்தி வழிபாட்டு முறை இடம்பெறுகின்றது.

சாக்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் தம்மைப் பெண்ணாகவே கருதுகின்றனர். சாக்தத்தில் குண்டலினியோகம் தனி இடம் பெறுகின்றது. இந்த யோக நெறியை திருமூலரின் திருமந்திரத்திலும், தந்திர சாத்திரங்களிலும் காணலாம்.

தீவிர சாக்கர்களுக்கு யோகப் பயிற்சி முக்கியம். அதற்கு குண்டலினி சக்தியை எழுப்புதல் அவசியம். இந்த மூலாதார சக்தி ஒவ்வொரு மனிதனிடமும் "மறைவான" நிலையில் அமைந்துள்ளது. இந்த குண்டலினி சக்தி உடலில் பொருந்தியுள்ள இடத்தை பெரு முயற்சி செய்து கண்டுபிடித்து "இயக்கப்" பெறச் செய்யும் பொழுதுதான் மனிதன் அசாதரண சாதனைகளை செய்ய முடியும் என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சக்தி மனித உடலில் குடிகொண்டிருக்கும் இடம் முதுகெலும்பின் முனையாகும். மூலாதாரம் என்று இதற்கு பெயர் 'குத' துவாரத்திற்குச் சற்று மேலே 'பாம்பு' வடிவில் இது உறங்கிக்கொண்டிருக்கிறது. எந்த யோகாசாதகனும் 'பிராணாயாமம்' போன்ற மூச்சுப் பயிற்சி மூலம் இச்சக்தியை 'துயில்' நீக்கி எழுப்ப முடியும். இந்தப் பயிற்சிகளால் தாம் ஒருமைப்பட்ட மனம் கிட்டும். அப்படிக் கிட்டிய மனக் கண்ணின் மூலம், தான் வழிபடும் தெய்வத்தின் துல்லிய 'ஒளித்' திரு உருவத்தை மிகவும் தெளிவாக ஒரு யோகி தரிசிக்க முடியும். இவ்வாறு மூலாதாரத்திலிருந்து எழுப்பப்பட்ட குண்டலிசக்தி இறுதியில் 'அனல்' வடிவம் பெறும். யோகம் அல்லது உபாசிக்கப்பட்ட இதன் மந்திரத்தை நாம் தொடர்ந்து பழகி வந்தால், சக்தியின் அனல் வடிவில் பல்வேறு வகை இன்பத்தை பெறமுடியும்.

சக்திக்கென்று பல விரதங்கள் இன்றும் அனுட்டிக்கப்படுகின்றன. சக்தியை வீரம் தரும் துர்க்கை என்றும், செல்வம் தரும் இலக்குமி என்றும், ஞானம் தரும் சரஸ்வதி என்றும் மூன்று சக்திகளாக மும்மூன்று இரவுகள் போற்றுவதே நவராத்திரி விழாவாகும். பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடப்படும். இது மகா நோன்பு (மானம்பூ) காலமாகும். இத்தினம் வன்னி மரத்தை அல்லது வாழை மரத்தை நாட்டி, மகிடாசுரன் என்னும் அசுரனைத் தேவி சங்கரித்த பாவனையில் அம்மரத்தை வெட்டித் திருவிழாச் செய்வர், மகிட அசுரன் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் இன்னல் செய்தான். அவனைத் தேவி கொல்லுதலே மகிடாசுர சங்காரம் எனப்படும்.

இத்திருவிழா கூறும் தத்துவம் ஆன்மாக்களைப் பீடித்து வருத்தும் ஆணவமலம், அறியாமை, மிருகத்தன்மை முதலியவற்றை மகிடாசுரன் என உருவகப்படுத்தியுள்ளனர். ஒன்பது நாளும் தேவியை வழிபட்டுப் பெற்ற சக்தியினால் அவனை வெல்லுதல் மகிடாசுரன் சங்காரமாகும். அப்பொழுது ஆன்ம ஞானம் கைக்கூடும் என்பது தாற்பரியம்.

வீடுகளிலும், பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும், இன்றும் வெகு விமரிசையாக நவராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது. விஜயதசமியன்று புதிதாக கலைகள் பயிலத் தொடங்குதல், ஏடு தொடங்குதல் என்பன இடம் பெறும்.

சிவனும், சக்தியும் ஒன்றிணைந்திருப்பது போல ஆன்மாக்கள் பரம் பொருளுடன் ஐக்கியமடைதல் வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட கேதார கௌரிவிரதம் இன்றும் அனுட்டிக்கப்படுகின்றது. இவ்வாறாக அடியார்கள் சக்திக்கு விரதமிருந்து வழிபட்டு அருள் பெறுகின்றனர்.

இந்தியாவில் மதுரை மீனாட்சியம்மன், காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி முதலியன முக்கிய அம்மன் ஆலயங்களாகத் திகழ்கின்றன. சாக்தர்கள் மதுரையில் அம்பிகை இருக்குமிடம் 'துவார சாக்தம்' எனபோற்றுகின்றனர். இங்கு அம்பிகையை ஒளியாகக் காணுகின்றனர். அம்பிகைக்கு மிகவும் சிறந்த தலமாக ஸ்ரீசைலம் காணப்படுகின்றது.



நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலும் சக்தி வழிபாடு சிறப்புற்று காணப்படுகின்றது. நயினை நாகபூஷணி அம்மன், மாத்தளை முத்துமாரியம்மன், முன்னேஸ்வர காளி கோயில் என்பன சிறப்புப் பெற்ற சக்தி தலங்களாக விளங்குகின்றன. இங்கு சக்திக்கு கிரமமாக பூசைகளும் விழாக்களும் நடைபெறுகின்றன. இங்கு மட்டு மல்ல தென் கிழக்காசிய நாடுகளிலும் சக்தி வழிபாடு பரவி சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது.

இன்று சக்தி வழிபாடானது அனைத்து வழிபாட்டு நெறிகளுடனும் சங்கமித்து விட்டன. இந்துக்களிடையே பிரசித்தி பெற்று வழிபட்டுவரும் சக்தி பௌத்தர்களாலும் ''பத்தினித் தெய்யோ'' என்று போற்றி வழிபடப்படு கின்றாள்.

---

# 11. இந்துசமய தத்துவ நூல்களில் கன்மம் மறுபிறப்புக் கோட்பாடு சித்திரிக்கப்பட்டி ருக்குமாற்றினை தகுந்த உதாரணங்க ளுடன் தொகுத்துக்கூறி தற்காலத்தில் அதன் பொருத்தப்பாட்டினை விளக்குக.

இந்துமதக் கோட்பாடுகளுள் கன்மம் மறுபிறப்புக் கோட்பாடும் ஒன்றாகும். கன்மம், மறுபிறப்புப் பற்றிய கருத்துக்கள் வேதகாலம் தொடங் கியே நிலவி வருகின்றது. கன்மம் என்பது ஒரு வினை அல்லது செயலாகும். சமய உலகில் செயலுக்கு ஒரு நோக்கம் உண்டு என்பதையும் அதற்கு பலன் உண்டு என்பதையும் பொருளாகக் கொண்டதே கன்மக் கோட்பாடாகும். மறுபிறப்பு என்பது உலக வாழ்விலிருந்து விடுபட்ட ஆன்மாவிற்கு ஏற்படும் மற்றுமோர் பிறப்பாகும். இது கன்மக் கோட்பாட்டின் அடித்தளத்திலிருந்தே கட்டி யெழுப்பப்பட்டதாகும். செய்யும் செயலின் பலனை உயிர் அனுபவிப் பதற்கு மீண்டும் பிறக்கவேண்டும். பிறவி எடுத்த உயிர் மீண்டும் செயல் புரிகின்றது. இவ்வாறு கன்மமும், மறுபிறப்பும் ஒன்றுக்கொன்று காரணகாரியத் தொடர்பில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத காலத்தில் கன்மம், மறுபிறப்புக் கோட்பாடு பற்றி நோக்கு மிடத்து, இங்கு ஒழுக்கம்மிக்க வருணனுடைய பாடல்கள் கன்மம் பற்றிய கருத்துக்களை எடுத்துக்கூறுகின்றன. வருணன் ரிதக் கடவுளாக வருணிக்கப்படு கின்றான், நதிகள் ஒழுங்காகப் பாய்வதற்கும், பருவகாலம் வருவதற்கும், பிரபஞ்ச ஒழுங்குக்கும், அதன் கட்டுப்பாடான வரையறைக்கும் வருணன் தலைவனாவான். இவன் சூரியனைக் கண்ணாகக் கொண்டு பாவம் செய் தவர்களை தண்டிப்பதாகவும், பாவ மன்னிப்பு கோருபவர்களை ஏற்றுக் கொள்வதாகவும் அவன் பாடல்கள் சுட்டுகின்றன, இது செய்யும் செயலுக்கு பயனுண்டு என்பதைக் காட்டுகின்றது. ரிதம், ஒழுங்கு, நியதி என்ற கருத்துக்கள் ஒரு செய்கை இடைவிடாது தொடர்ந்து நடைபெறுவதைக் காட்டுகின்றது. வேதகாலத்தில் கூறப்பட்ட இந்த 'ரிதம்' என்ற அண்ட இயக்க விதியே கன்மக் கோட்பாட்டின் முன்னோடி எனலாம்.

மேலும், ஒருவர் இறந்ததும் அவருடைய ஆன்மா அவர் செய்த வினைக்கேற்ப மோட்சத்திற்கோ அல்லது நரகத்திற்கோ செல்லும் என்ற கருத்து வேதங்களில் காணப்படுகின்றது. யம சூக்கத்தில் 'இஷ்டா' பூர்த்தங் களோடு செல்வாயாக'' என வருகின்றது. அதாவது ''நல்வினை செய்து கொண்டு போவாயாக'' எனப் பொருள்படுகின்றது. எனவே செய்த வினைக் கேற்ப பலன் கிடைக்கும் என்பதை இது காட்டுகின்றது. ஆனால் ஆன்மா விற்கு மறுபிறப்புண்டென்ற கருத்து வேதத்தின் முற்பகுதியில் காணப்படவில்லை முற்பகுதியில் இவை காணப்படவில்லையாயினும் வே த த் தி ன் இறுதிப் பகுதியாகிய (பிற்பகுதியில்) உபநிடதங்களில் இவை பற்றிய கருத்துக்கள் தெட்டத்தெளிவாகக் காணப்படுகின்றன.

வேதகாலத்தை அடுத்துள்ள பிராமண காலத்தில் வேள்விகள், யாகங் களோடு இணைத்து கன்மக் கோட்பாடு சொல்லப்படுகின்றன. உதாரணமாக 1000 வேள்விகள் செய்தால் ஒருவன் இந்திர பதவியை அடையலாம் என பிராமணங்கள் கூறுகின்றன. எனவே இதன் மூலம் செய்யும் செயலுக்குபலன் உண்டு என்பது கண்கூடு.

வேத, பிராமண காலங்களில் கன்மம், மறுபிறப்புக் கோட்பாடுமிகக் குருகலாகக் காணப்பட, உபநிடத காலத்தில் இக்கோட்பாடுகள் தெட்டத் தெளிவாக விளக்கப்படுத்தப்படுகின்றன. பிருகதாரண்ய உபநிடதம் ''எவ்வாறு ஒரு வண்ணத்துப்பூச்சி புல்லின் ஒரு நுனியிலிருந்து மறுநுனிக்கு மாறி மாறி செல்கின்றதோ அவ்வாறே ஆன்மாவும் ஒரு உடலைவிட்டு இன்னொரு உடலை எடுக்கின்றது'' என்றும் ''பழைய உடைகளைக் களைந்துவிட்டு புதிய உடை களைத் தரிப்பது போல உயிரானது பழைய உடலைக் களைந்துவிட்டு புதிய உடலை எடுக்கின்றது'' என்றும் ''தட்டான் ஒருவன் ஒரு தங்கக் கட்டியிலிருந்து பல பல வடிவமான உருவங்களை செய்வது போன்று ஆன்மாவும் தான் செய்த வினைக்கேற்ப பிறவி எடுக்கின்றது'' என்றும், ''கடோப நிடதம் முதலாவது அத்தியாயம் ஆறாவது சுலோகம்'' ''பயிர் வளர்ந்து முதிர்வது போல அழியும் இயல்புடைய மனிதனும் வளர்ந்து முதிர்கின்றான். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் மீண்டும் தளிர்ப்பதுபோல அவனும் மீண்டு எழுவான்'' என்றும், முண்டோக உபநிடதம் ''ஆசைகளை ஜெயிக்காத எவன் எந்த ஆசைகளைப் பற்றி நிற்கின்றானோ அவன் இறந்தபின் அந்தந்த ஆசைகளுக்குத் தக்க இடங்களில் அந்தந்த ஆசைகளுடன் பிறக்கிறான் என்றும் கூறுவதிலிருந்து கன்மம், மறுபிறப்புக் கோட்பாடு இக்காலத்தில் மிகவும் தெளிவாக விளங்கப் படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

அடுத்து இதிகாசங்களை எடுத்து நோக்கினால் அங்கே கருமக் கோட்பாடு பற்றிய தெளிவான கருத்துக்களை நாம் காணலாம். இராமாயணத்தில் சனகன் கர்ம வீரனாகக் கருதப்படுகின்றான். அவன் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டே சீவன் முத்தர்போல் காணப்படுகின்றான். பயன் கருதாத செயல்களையே அவன் செய்தான்.

உபநிடதக் கருத்தை ஆதரித்துக் கூறும் பகவத் கீதையும் மறுபிறப்பை ஆதரித்துப் பேசுகின்றது. ''பழைய துணிகளைக் களைந்துவிட்டு புதிய துணிகளைப் போட்டுக்கொள்வதுபோல பழைய உடலங்களை நீத்து ஆன்மா புதிய உடல்களில் குடிபுகுந்து விடுகின்றது'' என்றும், ''நான், நீ, இந்த அரசர்கள் ஆகிய எவரும் முன்பு இல்லாமல் இருந்ததில்லை. இந்த உடல்கள் அழிந்து விடுகின்ற காரணத்தால் நாம் இல்லாமலும் போய்விடுவதில்லை'' என்று கூறுவதிலிருந்து ஆன்மா பிறவி எடுப்பது என்பதை உணர முடிகின்றது.

அடுத்து சங்க இலக்கியங்களும் கன்மம் மறுபிறப்புப்பற்றி கூறுகின்றன. புறநானூறு ''இம்மைச் செய்தமை மறுமைக்காம்'' என்கிறது.

திருக்குறளிலும் கன்ம மறுபிறப்புக் கோட்பாடு பற்றி 'ஊழ்' என்னும் அதிகாரத்தில்.

''ஊழிற் பெருவலியாவுள - மற்று ஒன்று
சூழினும் தான் முந்துறும்'' என எடுத்தாளப்படுகிறது.

சங்கமருவியகால இலக்கியமான மணிமேகலையில் ''பற்றின் வருவது முன்னது பின்னது'' என ஓரிடத்தில் வருகின்றது. இதுவும் கன்ம மறுபிறப்புக் கோட்பாட்டையே விளக்கி நிற்கின்றது. இக்காலப்பகுதியின் இறுதியில் காரைக் காலம்மையார் ''பிறவாதிருக்க வரம் வேண்டும்'' என இறைவனை வேண்டுவது குறிப்பிடத்தக்கது.

பல்லவர் காலப் பகுதியில் நாயன்மார் பாடல்களிலும் இக்கோட்பாடுகள் பற்றிக் கூறப்படுவதை நாம் காணலாம். மணிவாசகர் திருவாசகத்தில்,

''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல் விருகமாகிப் பறவையாய் பாம்பாய் கல்லாய்

மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்...''இவ்வாறு பல பிறவிகள் பற்றிக் கூறிகொண்டே செல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு அடுத்த காலப்பகுதியில் இடம்பெறும் திருவருட்பயனில்

''பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை'' என்பதில் உயிர்கள் பிறந்தநாள். இனிப் பிறக்கப்போகும் நாட்களை சொல்லமுடியாது என்கிறது. அருணகிரிநாதர் ''இறவாமல் பிறவாமல்....'' எனப்பாடுவதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே பிற்பட்டகால இந்துமத நூல்களில் கன்மம், மறுபிறப்புப் பற்றிய கோட்பாடுகள் விளங்கப்படுத்தப்படுகின்றது. ''வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான்'' என்கின்றது இந்துமதம்'' இப்போது நாம் எப்படி இருக்கின்றோம்; என்ன சூழ்நிலையில் நாம் வைக்கப்பட்டுள்ளோம் என்பது நாம் எப்படி இருந்தோம் என்ன செய்தோம் என்பதைப் பொறுத்ததாகும். அதே போன்று இனி நாம் எப்படி இருப்போம். என்ன சூழ்நிலைக்கு ஆளாவோம் என்பதும் இன்று நாம் எப்படி உள்ளோம் என்ன சூழ்நிலையில் இருக்கின்றோம் என்பதைப் பொறுத்தே அமையும்.

இந்துமத சிந்தனையாளர்கள் மூவகை கன்மத்தை பற்றிக் கூறுகின்றார்கள். அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பனவாகும். உயிரானது முற்பிறப்புக்களில் செய்த வினைத் தொகுதியின் ஒரு பகுதியை மட்டுமே இப்பிறப்பில் அனுபவிக்கின்றது. அவ்வாறு அனுபவிக்கப்படும் வினைப்பகுதிக்குப் பிராரத்தம் என்பது பெயர். அனுபவிக்கப்படாமற் பின்வரும் பிறப்புக்களில் அனுபவிப்பதன் பொருட்டு எஞ்சியிருக்கும் பழவினைக்குச் சஞ்சிதம் என்பது பெயர். பிராரத்த வினையை இப்பிறப்பில் அனுபவிக்கும் போது புதிதாகச் சேரும் வினைக்கு ஆகாமியம் என்பது பெயர். இம்மூவகை கன்மங்களையும் உதாரணம் ஒன்றின் மூலம் விளக்கலாம். அதாவது வேடன் ஒருவன் ஒரு புறாவை நோக்கி குறிபார்த்து எய்யப் போவதாக கற்பனை செய்வோம், ஏற்கனவே ஒரு அம்பை எய்து விட்டான். இன்னும் ஒன்று எய்துவதற்கு தயாராக உள்ளது. சஞ்சித கன்மம் வேடனின் தோளில் இருக்கும் அம்பாரத் துணியிலுள்ள அம்புகளுக்கு ஒப்பிடலாம். அவன் எய்துவிட்ட அம்பு பிராரத்தம். வில்லிலிருந்து விடுபடத்துடிக்கும் அம்பு ஆகாமியமாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதைவிட ராதாகிருஷ்ணன் கூறும் உதாரணமும் குறிப்பிடத்தக்கது. வாழ்க்கை என்னும் சீட்டாட்டத்தில் சில சீட்டுக்கள் நம்மிடத்தே கொடுக்கப்பட்டுள்ளன. நாம் அவற்றை எடுக்கவில்லை. அவை பழைய கன்மத்தின்படி நமக்குக் கிடைத்துள்ளது, அதில் நாம் வெல்கின்றோம். தோற்கின்றோம். ஆனால் அவற்றை வைத்துக்கொண்டு நாம் புத்தியுடன் விளையாடி வெற்றியடைவது எமது பொறுப்பு. எனவே எதிர்காலத்தை நல்லதாக்குவதில் எமக்கு சுதந்திரம் உண்டு என்பதை விளக்குகின்றார்.

இவ்வாறாக பல பிறவிகளை ஆன்மா எடுத்து உழலும்போது வினைகள் ஒழிய ஆன்மா பிரமத்தில் அடங்கிவிடும். இதுவே ஆன்மாக்களது முத்தி நிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால நிலையில் கன்மம் மறுபிறப்பின் பொருத்தபாடு பற்றி நோக்கும்போது அது தெட்டத் தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளது.

இன்று எத்தனையோ பேர் குருடர்களாக, செவிடர்களாக, ஊனமுற்றவர்களாக, தொழுநோய் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். எத்தனையோ பேர் செல்வம் இருந்தும் அனுபவிக்க முடியாமலும் நோயினால் உண்ண முடியாமலும் இருக்கின்றனர். சிலர் அறிவு குறைந்தவர்களாகவும், எத்தனை தடவை புகட்டினாலும் அறிவற்றும் இருக்க சிலர் ஒரு தடவையுடனும் எல்லாவற்றையும் ஊகிக்கும் திறமையுடன் காணப்படுகின்றனர்.

மேலும் ஒருவன் இரக்க நெஞ்சமும் ஈகைக் குணமும் உடையவனாகவும் இருக்க,இன்னொருவன் வஞ்சகமும் கையிறுக்கமும் உடையவனாக இருக்கின்றான் சிலர் பாலும் நீரும் அருந்த சிலர் மது, போதைப் பொருட்களை அருந்தி உடலுக்கு ஏற்காமல் அறிவுமழுங்கி வாழ்ந்து மடிகின்றனர்.

இன்று சிலர் நல்லவர்களாக இருந்து நல்லவற்றையே செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கு வாழ்க்கையில் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன, விபத்துக்கள் நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்தால் அவை நாம் செய்த கன்மவினையே என்று விளங்குகின்றது. வாழ்க்கையில் நடந்து விடும் அசம்பாவிதங்களை எண்ணித் துயரப்பட்டுக் கொண்டிருந்தால் மீதி வாழ்க்கையும் துயர மாகத்தான் இருக்கும். எனவே இன்று அதற்கு 'விதி' என்று நினைத்து ஆறுதலைப் பெற்றுக்கொண்டு இனி வரும் பிறப்பிலாவது நாம் நல்ல மாதிரிப் பிறப்பதற்கு இப்பிறப்பிலே நாம் நல்லன செய்யவேண்டும்.

இன்று நாம் கன்மம், மறுபிறப்பை ஏற்றுக்கொண்டால் தான் சீரிய வாழ்க்கை வாழ முடியும். இக்கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாதவன் நிட்சயம் சீரிய வாழ்க்கை நடாத்தமாட்டான். ஒன்றைச் செய்தால் அதனால் ஏற்படும் விளைவு தனக்கு வரும் என அறிந்து கொள்ளவேண்டும். யோசிக்காமலும் சிந்திக்காமலும் செய்யும் செயல்கள் துன்பத்தில் கொண்டு போய்விடும். எனவே நாம் யோசித்து செயற்பட வேண்டும். நல்லன செய்து நல்ல பிறவியைப் பெறுவதற்கு நாம் மனம், வாக்கு, காயத்தினால் புண்ணியங்களை சேர்த்துக் கொள்ளலாம். அதாவது மனத்தின் நினைவாலுண்டாகும் புண்ணியங்களான அருளுடமை, பொறை, பிறர் பொருள் விரும்பாமை, செய்நன்றி மறவாமை, நடுநிலை நிற்றல், வஞ்சகமின்மை, அபிமானம் பேணல், அழுக்காறின்மை, அவா வறுக்கை, பிறர் துயர் கண்டிரங்கல், சிவத்தியானம் முதலியனமன நினைவாலுண்டாகும் புண்ணியங்கள்.

வாக்கினாலுண்டாகும் புண்ணியங்களான புறங்கூறாமை, உண்மை பேசுதல், தருமம் போதித்தல், இனியன சொல்லுதல், வேதாகமங்களையோதல், புராணபடலம், தமிழ்மறை யோதல் முதலியன வாக்கினாலுண்டாகும் புண்ணியங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்தினாற் செய்யப்படும் புண்ணியங்களான அரிய தவங்களை செய்தல், பூசை ஓமங்கள் செய்தல், பகுத்துண்ணல், நந்தனவனம் சோலைகள் உண்டாக்குதல், பிறர்மனை விழையாமை, குளந்தோண்டல், ஆதுலர்சாலை, வித்தியாசாலை திருக்கோயில் திருமடம் கட்டுவித்தல், சிவாலய சேவை, குரு சேவை, அடியார் சேவை முதலியன செய்தல் காயத்தினாற் செய்யப்படும் புண்ணியங்களாம்.

எனவே இப்புண்ணியங்களைச் செய்து நல்ல பிறவிப்பயனை அடைந்து ஆன்மாவின் இலட்சியமான முத்திப் பேற்றை அடைவோமாக.

---

# 12. இந்துக்களின் ஆலய அமைப்பையும் அவை சுட்டும் தத்துவப் பொருளையும் விளக்கிக் கூறுக.

சிவபெருமான் உயிருக்கு உயிராய் ஆன்மாக்களுள்ளும் எழுந்தருளியிருப்பர். இதனால் உயிர் குடியிருக்கும் உடலும் அவருக்கு கோயிலாகும். அவ் உடலாகிய கோயிலின் புறச் சின்னமாகவே ஊரின் கண் கோயில்கள் அமைந்திருக்கின்றன.

ஆகம முறைப்படி அமைந்த கோயில்களிற்கட்டட அமைப்பு, கிரியைகள் என்பன அவ்விதி முறைக்கு உட்பட்டே இருப்பதைக் காணலாம். ஆகம முறையில் அமைந்த கோயிலுக்கும் மனித உடம்பிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அதாவது அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்பார்கள். அண்டம் உலகமாகும். பிண்டம் மனித உடல், இதனைத் திருமூலர்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்......'' என்ற பாடலின் மூலமாக ஆலயத்திற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பை திருமந்திரத்தில் வெளிப்படுத்துகிறார். இதனையே திருநாவுக்கரசரும் ''காயமே கோயிலாக'' என்ற திருப்பாசுரத்தில் விளக்குகிறார். ஞானிகள் உடலையே ஆலயமாகக் கொண்டு உயிரிலே இறைவனைக் காண்பர்.

பாதம் முதல் சிரம் வரையுள்ள உடலின் பகுதிகளைக் கொண்டவனாகவே கோபுரங்களும் கருப்பக்கிருகம் வரையுள்ள மண்டபங்களும் அங்குள்ள சின்னங்களும் காட்சியளிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் எனப்படும் திருக்கோயில்கள் எமது உடம்பைப் போலவே அமைக்கப்பட்டுள்ளன. புறத்தே காணப்படும் ஆலயங்கள் கருப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என ஆறு மண்டபங்களால் அமைந்துள்ளன. இந்த ஆறு மண்டபங்களும் எமது உடலின் கண் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம். அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் என்று கூறுவர் (மூலாதாரம்:மூலம், சுவாதிட்டானம் - தொப்பூழ் மணிபூரகம் - மேல் வயிறு, அனாகதம் - நெஞ்சு, விசுத்தம் - மிடறு, ஆக்ஞை- புருவ நடு) இனி திருக்கோயிலில் உள்ள முதலாம் ஆவரணத்தாற் கண்ணுக்குப் புலப்படும் தூல தேகமாகிய அன்னமய கோசமும் இரண்டாம் ஆவரணத்தால் பிராண வாயுவும் கன்மேந்திரியமும் கூடி நிற்பதாகிய பிராணமய கோசமும் மூன்றாம் ஆவரணத்தால் மனமும் கன்மேந்திரியமும் கூடி நிற்பதாகிய மனோமய கோசமும், நான்கவதாகிய விஞ்ஞான மய கோசமும், ஐந்தாம் ஆவரணத்தாற் பிராண வாயுவும் சுழுத்தியும் கட்டி நிற்பதாகிய ஆனந்தமய கோசமும் அறியப்படும் எனக் கூறுவார்கள்.

கோயிலைச் சுற்றி மதில் கட்டி, ஒரு புறம் ஒரு பெரிய வாயில் அமைத்து அங்கு ஒரு கோபுரமும் அமைக்கின்றனர். அக்கோபுரத்திற்கு தூல லிங்கம் என்று பெயர். தொலைவில் வரும்பொழுதே கோயிலின் கோபுரமாகிய தூலலிங்கம் எமக்குத் தோன்றும், கோபுரத்தை காணும்போதெல்லாம் எமக்கு தெய்வநினைவு உண்டாகும் என்ற நோக்கத்துடன் இதனை அமைத்துள்ளார்கள் இக்கோபுரத்தை இராசகோபுரம் என்றும் கூறுவார்கள்.

மேலும் ஆலயத்தின் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகின்றது அடுக்கடுக்காய் அமைந்த தளங்கள் பல்வேறுபட்ட உலகங்களையும், உலக வாழ்க்கையின் பலவித அனுபவங்களையும் குறிப்பன. இராச கோபுரத்தில் உலகில் உள்ள எல்லாப் பொருள்களின் உருவங்களையும் காணலாம். இறை வனின் வீரச் செயல்களையும், திருவிளையாடல்களையும் காட்டுகின்ற உருவங் களும், இறைவனைத் தொழுகின்ற திருமால் முதலிய தேவர்களின் உருவங்களும் பிறவும் அதன் கண் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக்காணும் பொழுதெல்லாம் இறைவனின் முழுமுதற் தன்மையை உணர்ந்து. அவரின்மேல் அன்பு செலுத்த வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும்.

இதன் வாயில்கள் மூன்றாக இருப்பின் நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளைக் குறிக்கும். ஐந்தானால் ஐம்பொறிகளையும் ஏழாக அமையின் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்ற இரண்டையும் குறிக்கும் என்க. வாயில்கள் பல இருப்பினும் தரைமட்ட வாயிலாகவே உட்புக முடியும். அது போல் கடவுளை மனம் ஒன்றினாலேயே உள்ள படிதரிசிக்க முடியும்.

ஆலயங்களிலுள்ள கண்டாமணி எனப்படும் அசையா மணியும் இவ்வாறே தொலைவிலுள்ளவர்களுக்கும். பலவேறு கடமைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உரிய வேளைகளில் இதை நினைவூட்டிக் கோயிலின் இருப்பிடத்தைக் காட்டி நிற்பதோடு மங்கல ஓசையை வெளிப்படுத்துவதாகவும் இருக்கிறது. இறைவன் ஓசை வடிவினன் என்பதையும் இது புகட்டுகின்றது. மணியோசைக்குத் தேவர்களை அழைக்கும் சக்தியும், தீய சக்திகளை அகற்றும் சக்தியும் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுரத்தைக் கடந்து உள்ள சென்றால் நாம் காண்பது பலிபீடம், இதனை பத்திரலிங்கம் எனவும் பாசத்தை நீக்கும் சிவசக்தி எனவும் கூறுவர். இது நந்திக்குப் பின்னே உள்ளது. இதனை வணங்கும் போது நமது ஆணவத்தைப் பலியிட்டு அருள் வழி நிற்றல் வேண்டும்.

பலிபீடத்தைச் சார்ந்திருப்பது கொடிமரம், பதியையும், கொடிச்சீலை யோடு அதில் எழுதிய இடபம் பசு (ஆன்மா)வையும், சீலையைப் பற்றி நிற்கும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். கொடியேற்று விழா உயிர் பாசப்பற்றை நீக்கி அருள் வழிபட்டு, இறைவனுடைய திருவடிப் பேற்றைப் பெறுதலாகிய ஏற்றத்தை உறுமென்னும் உண்மையினை விளக்கி நிற்றலாகும்.

அடுத்து நந்தி (இடப தேவர்) இது பக்குவமடைந்த ஆன்மாவைக் குறிக்கும். இது பலிப்பீடத்தைப் பாராது (மூலதானத்தைப் பார்த்தபடி) சிவலிங்கப் பெருமானை இது நோக்கியிருக்கும். இந்நிலை ஆன்மா தன்னுடன் அநாதியே பொருந்தியுள்ள பாசப்பற்றை நீக்கி அதில் பாராமுகமுடையதாய்ச் சிவத்திலே பற்று வைத்து, சரியை முதலிய நாற்பாதங்களில் நின்று சிவத்தோடு அத்து விதமாய்க் கலந்து பேரின்பப் பேற்றை அடைய வேண்டுமென்பதைக் குறிக்கும்.

அடுத்ததாக கருப்பக் கிருகம் இங்கே சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருப்பார். இது திரையினால் மறைக்கப் பெற்று இருளாயிருக்கும். அருச்சகர் திரையை நீக்கித் தீபாரதனையால் ஒளியுண்டாக்கி இறைவனைத் தரிசிக்கச் செய்வார். இங்ஙனம் நிகழ்வது அறியாமையாகிய இருளை நீக்கி அவனருளாகிய ஞான ஒளியினால் அவனைத் தரிசிக்கலாம் என்பதை உணர்த்துகின்றது. ஆங்கு கருப்பக் கிருகம் மனத்திற்கும், தீப ஒளி ஞானத்திற்கும் ஒப்பாதல் ஆகும்.

திருவீதிகள் இரண்டு முதல் ஐந்து வரை அமைந்திருக்கும். வீதிகள் பஞ்ச கோசங்களைக் குறிக்கும். ஐந்தாம் வீதி அன்மைய கோசத்தையும், மூன்றாம் வீதி மனோமய கோசத்தையும் இரண்டாம் வீதி விஞ்ஞான மய கோசத்தையும், முதலாம் வீதி ஆனந்தமய கோசத்தையும் குறிப்பனவாகும்.

அருபியாகிய இறைவன் ஆன்மாக்கள் தம்மைத் தியானித்து முக்தி யின்பம் பெறும் பொருட்டு மூர்த்தியாகவும் பல மூர்த்தங்களைக் கொண்டும் திகழ்கின்றார். சிவலிங்கம், சபாபதி, உமாமகேசர் என்பன மூர்த்தி சொரூபங்களாகும். இவை மகேசுவர வடிவங்கள் எனப்படும். உமாதேவியார், விநாயகர் சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் முதலிய வடிவங்கள் மூர்த்தங்கள் எனப்படும்.

(விநாயகர் ஆலயமாயின் பலிப்பீடத்தை அடுத்து அவரது வாகனமாகிய 'எலி'யே அமைந்திருக்கும். கர்ப்பக் கிரகத்தில் (மூலனத்தில்) விநாயகரே அமர்ந்திருப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. திருக்கோயிலில் "வழிபாடு" செய்யும் முறையை விளக்குக:

"திருக்கோயில் இல்லாத திருவில் ஊர்" என்றார் அப்பர். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றார் உலகநாதர். மக்கள் தம் வினை நீங்கி பிறவா நிலை எய்தத் திருக்கோயில் வழிபாட்டினை மேற் கொள்ளல் நன்று. இதனாலன்றோ "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார் ஒளவை மூதாட்டியார். எனவே மனித வாழ்வில் கோயிலும், கோயில் வழிபாடும் தலையாய இடம் பெற்றுள்ளது.

திருக்கோயிலுக்கு செல்லுமுன் ஸ்நானஞ் செய்து தோய்ந்துலர்ந்த ஆடையினைத் தரித்து விபூதி அணிந்து கொள்ளவேண்டும். தீட்சை பெற்ற வராயின் சந்தியா வந்தனம் பண்ணுதல் வேண்டும். பின்னர் அர்ச்சனைப் பொருளாகிய பழம், பாக்கு வெற்றிலை, தேங்காய், கற்பூரம், மலர் முதலி யவற்றில் இயன்றவற்றை எடுத்துத் தட்டில் வைத்து, அரைக்கு மேல் ஏந்திய வண்ணம் கொண்டு செல்லல் வேண்டும். செல்லுங்கால், வீண்வார்த்தை பேசாமல் சிவ சிந்தனையோடு செல்லுதல் வேண்டும்.

கோயிலைச் சமீபித்தவுடன் அங்குள்ள நீர்நிலையில் கைகால்களைச் சுத்தம் செய்து அர்ச்சனைப் பொருட்களையும் கழுவி எடுத்தல் வேண்டும். பின்னர் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி திருநந்தி தேவரிடம் அனுமதி வேண்டி உள்ளே போதல் வேண்டும். அங்கு முதலில் பலிப்பீடத்தையும் துவசுத் தம்பத்தையும் (கொடிமரத்தையும்) இடபதேவரையும் கும்பிட்டு, பலிப்பீடத் திற்கு இப்பால் நின்று வணங்கல் வேண்டும். அபிடேக சமயம், நிவேதன சம யம் அல்லாத சமயத்தில் வீழ்ந்து வணங்கலாம். ஆண்கள் அட்டாங்கமாகவும் பெண்கள் பஞ்சாங்கமாகவும் 3, 5, 7, 9, 12 என்ற முறையில் நமஸ்கரித்தல் வேண்டும். கொடிமரத்திற்கு வெளியிலும், தட்சணாமூர்த்தியின் சந்நிதியிலுமே அட்டாங்க நமஸ்காரம் செய்யலாம். திரயாங்க (இரு கைகளையும் சிரசின்மீது வைத்து வணங்குதல்) இருபாலாருக்கும் உரியதாகும். ஒருமுறை இருமுறை நமஸ்கரித்தல் பாவம். 3, 5, 7, 9, 12 என்ற எண்ணிக்கையில் செய்தல்வேண்டும்.

மேற்குறித்த முறைகளை அனுசரித்து நமஸ்காரம் பண்ணிய பின் இரண்டு கைகளையும் மார்பிலாயினும் சிரசின் மேலாயினும் குவித்து ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சரித்துக் கொண்டு அல்லது தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளை நெஞ்சங்கசிந்துருகி பாடிக் கொண்டு கால்களை மெல்ல மெல்ல வைத்து 3, 5, 9, 15, 21, என்ற முறையில் வீதிவலம்வருதல் வேண்டும். அதன் பின் மீண்டும் சந்நிதானத்தை அடைந்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் துவாரபாலகரை வணங்குதல் வேண்டும். பின்பு திருநந்தி தேவரை வணங்கிப் ''பகவானே உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானை தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அனுமதி தந்தருளும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போய் முதலில் விக்னேஸ்வரரைத்தரிசனஞ் செய்தல் வேண்டும். பின் சிவலிங்கப் பெருமான். உமாதேவியார் சந்நிதிகளை அடைந்து அர்ச்சனை செய்து விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு அதன்பின் முறையே சபாபதி, தட்சணாமூர்த்தி, சோமஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலானோரையும் சமய குரவர் நால்வரையும் தரிசனஞ் செய்தல் வேண்டும். தரிசனத்தின்போது திருமுறைகளை மனங்கசிந்துருக ஓதுதல் வேண்டும். தரிசனத்தின் போது திருமுறைகளை மனங்கசிந்துருக ஓதுதல் வேண்டற்பாலதாகும்.

சுவாமி சந்நிதானங்களைத் தரிசித்த பின் சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டு, தோத்திரம் செய்து, மூன்று முறை கைகொட்டிச் சிவதரிசன பலத்தைத் தருமாறு பிரார்த்தித்து வலப்பக்கமாகவந்து சிவசந்நதி அடைதல் வேண்டும். சண்டேசுவரரை தரிசிக்கும்போது கைகளைத் திறந்து மெல்ல (ஓசையின்றி)த் தட்ட வேண்டும் பலர் அறியாமையால் தாம் உடுத்தியிருக்கும் துணியிலிருந்து நூலை எடுத்து சண்டேசுவரரின் திருஉருவில் போடுவர் இது பெரும் பாவச்செயல். எந்த உருவத்தையும் நாம் தொடுதல் ஆகாது. சண்டேசுவரரைச் செவிட்டுச் சாமி என்பதும், பலமாகக் கைதட்டி கும்பிட வேண்டும் என்பது தவறான கருத்துக்களாகும். பின் இடப தேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப் பெருமானை தரிசித்து பலிப்பீடத்திற்கு இப்பால் மும்முறை நமஸ்கரித்தல் வேண்டும். கடவுள் வழிபாடு செய்யும் போது தனிக் கோயிலாக இருந்தால் விநாயகருக்கு ஒரு சுற்றும், ஏனைய மூர்த்திகளுக்கு மூன்று முறையும் சுற்றவேண்டும். சிவனுக்கு 3, 5, 7, 9, 15, 21 தடவை என்னும் எண்ணிக்கையிலும் சூரியனை இரண்டு தரமும் பார்வதி, விஷ்ணுவை நான்கு தரமும் வலம் வருதல் முறையாகும். பின்னர் எழுந்து அமைதியான ஓரிடத்திலிருந்து பஞ்சாட்சரத்தை இயன்ற வரை செபித்து, எழுந்து வீட்டிற்கு செல்லுதல் வேண்டும்.

திருக்கோயிலுக்கு நித்தியமும் செல்லாம். அங்ஙனம் செல்ல இயலாதோர் சோமவாரம், மங்களவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணமை அமாவாசை, திருவாதிரை, திருக்கார்த்திகை, மாசப் பிறப்பு, கிரகணகாலங்கள் சிவராத்திரி. நவராத்திரி, விநாயக சதுர்த்தி. விநாயக சஷ்டி, கந்த சஷ்டி முதலிய புண்ணிய காலங்களாயினும் சென்று சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும்.

திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்களையும் இவ்விடத்தில் எடுத்துச் சொல்வது பொருத்தமுடைத்து, ஸ்நானம் செய்யாமலும், தோய்த்துலராத வஸ்திரம் தரித்தல், கால் கழுவாமல் கோயிலுக்குள் செல்லுதல் தவறாகும். கோயிலுள்ளே உத்தரீயமிடுதல், தலையில் தொப்பி, தலைப்பாகை அணிதல் ஆகியன தவிர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வேண்டாத நிலையில் வாகனம் ஏறிப்போதல், ஆசனத்திருத்தல் வீண்வார்த்தை பேசுதல், கேளிக்கைகளில் ஈடுபடுதல், விக்கிரகத்தைத் தொடுதல் தூபி, துவசத்தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம் என்னும் இவற்றின் நிழலை மிதித்தல், சுவாமிக்கும் பலிபீடத்திற்கும் குறுக்கேபோதல், நமஸ்கரித்தல் ஒரு தரம், இரு தரம் நமஸ்கரித்தல், அகாலத்தில் தரிசித்தல், சுவாமிக்கு கால் நீட்டி நமஸ்கரித்தல், திரையிட்டபின் வணங்குதல், திருவிளக்கு அணைந்த போது வணங்குதல், மருட்பாக்களை ஓதுதல், வெற்றிலை பாக்கு உண்ணுதல், எச்சிலுமிழ்தல், மலசலம் கழித்தல், நித்திரை செய்தல், மூக்கு நீர் சிந்துதல், மயிர் கோதி முடித்தல், சிரித்தல் முதலியவை தவிர்க்கப்படவேண்டும்,

இதைவிட கோயிலில் வழங்கப்படும் விபூதி, பிரசாதம் ஆகியவற்றை நிலத்தில் சிந்துவது கூடாது. மீதியாகவிருக்கும் திருநீற்றை உள்ளங்கையில் வைத்து ஊதிவிடுதல் மிகவும் தவறாகும். எஞ்சிய விபூதியைப் பத்திரப்படுத்தி வீட்டுக்கு கொண்டு செல்வதே முறை. தீர்த்தம் பருகும்போது கையை எச்சிற் படுத்தாது அண்ணாந்து பருகுதல் வேண்டும்.

பூஜை, தீப ஆராதனை, ஆசீர்வாதம் ஆகியவை முடிந்தபின் ஓதப்படும் திருமுறைகள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் என்ற வரிசையில் சரியான பண்ணுடனும், பிழை களின்றியும், சரியான உச்சரிப்புடனும் பாடப்படவேண்டும்,

இவ்வாறான விதிமுறைகளை நாம் நன்கு கடைப்பிடித்து நம் எதிர் காலச் சந்ததிகளையும் அதன்படி ஒழுகச் செய்து, நமது கோயிலின் புனிதத் தையும், தெய்வீகத்தையும், நற்பேறையும் பெற்றுக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. "ஓர் இந்துவின் ஆன்மீக வாழ்க்கை முழுமைபெற அறத்தை முதன்மையாக கொண்ட புருடார்த்தங்கள் வழிவகுக் கின்றது" ஆராய்க:

இந்துமதம் தோற்றுவித்த கோட்பாடுகளுள் புருடார்த்தக் கோட்பாடும் ஒன்றாகும். இந்துக்கள் தம் உயர் இலட்சியங்களை அடைந்து கொள்வதற்கு பல வழிவகைகளை இந்து நூல்கள் எடுத்துக் கூறுகின்றது. இவையனைத்தும் உலகியல் வாழ்விலிருந்து விடுபட்டு மோட்சபாதைக்கு இட்டுச் செல்வதற்கான வழிவகைகளையே எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு ஆன்ம ஈடேற் றத்திற்காக கூறப்படும் பொருள்களில் நான்கு புருடார்த்தங்களும் ஒன்று இவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். இவற்றை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனவும் குறிக்கலாம். அறம், பொருள், இன்பத்தை அறத் தின் வழி முறையாக அனுட்டிக்கும்போது நான்காவதாகிய வீடு தானாகவே கிடைக்கப்பெறும் என இந்துமதம் குறிப்பிடுகின்றது.

புருடார்த்தங்கள் கூறும் நான்கு பொருள்களிலும் தலையாயது அறம். இது தர்மம், கடமை, ஒழுங்கு என்னும் பல்வேறுபட்ட பதங்களிலும் சொல் லப்படுகின்றது. மேலும் அறம் என்பதற்கு அன்பு, தியாகம், அகிம்சை, ஜீவ காருணியம், கொடை எனவும் பலவாறு பொருள் கொள்ளும்போது இச்செயல் கள் அனைத்துமே அறத்தை வெளிக்காட்டுவதாக அமைகின்றது.

மனுதர்ம சாஸ்திரம் போன்ற ஸ்மிருதி நூல்களில் அறமாவது "விதித் தன செய்தலும் விலக்கின ஒழித்தலுமாம்" என விளக்கம் கொடுக்கின்றது. எனவே சமூகம் அங்கீகரித்துள்ள நற்பண்புகளைப் பேணுதலும், சமூகத்திலி ருந்து விலக்கப்பட்ட தீய பண்புகளை நிராகரித்தலுமே அறமாகும்.

அறம் என்று கூறும்போது இந்துமதம் இல்லறம், துறவறம் ஆகிய இரண்டு அறங்கள் பற்றி கூறினாலும் அறம் என்று சிறப்பித்து கூறப்படுவது இல்லறமே ஆகும். திருவள்ளுவர்.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று"

எனக் கூறியுள்ளார். இல்வாழ்க்கை நிலையிலேயே இந்து ஒருவன் அனுட்டிக்க வேண்டிய சகலவிதமான அறங்களையும் பின்பற்ற முடியும். இல்வாழ்க்கை நிலையில் ஆற்றவேண்டிய பஞ்ச யக்ஞங்களும் அறத்தின் பாற்பட்டதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம யக்ஞம் (வேத அத்யயனம், வேதத்தைப் போதித்தல்) தேவ யக்ஞம் ஒருவர் உண்ணும் சகல உணவுப் பொருள்களையும் இஷ்ட தெய்வத்திற்கு கொடுத்து உண்ணல்) பித்ரி யக்ஞம் (மாதா பிதாவிற்குரிய கடப்பாட்டினைத் தீர்த்தற் பொருட்டு செய்வது) பூத யக்ஞம் (பசு, நாய், பறவைகள், மீன்கள் ஆகிய உயிர்களுக்கு ஒருபிடி உணவாயினும் கொடுத்தல்) மனுஷ்ய யக்ஞம் (பசித்திருப்போருக்கும், ஏழைகட்கும் அன்னதானம் செய்தல், இன்னும் மனித குலத்திற்கு செய்யும் பல உபகாரங்கள்) இந்த ஐந்து வேள்விகளையும் அன்றாடம் இயற்றிவந்தால் ஒருவரிடம் அன்பு, இரக்கம், கனிவு ஆகிய அறப் பண்புகள் பெருகும் என இந்துமதம் வலியுறுத்துகின்றது.

இந்த இல்லற தர்மத்தை செவ்வனே நிறைவேற்றி முடிக்காதவர்கள் எவ்வுலகத்திலிருந்தாலும் சரி அவர்கள் கர்ம தோஷத்தினால் சதா துன்பப் பட்டுக்கொண்டே இருப்பார்கள். இல்லற தர்மத்தின் பெருமையையும், மகிமை யும் எடுத்துக்காட்டுவதற்காவே நமது தெய்வங்களும், அவதார புருஷர்களாகிய இராமரும், கிருஷ்ணரும், மற்றையோரும் இல்லறவாசிகளாகவே திகழ்ந்தனர்.

பொதுவாக சாதாரண வாழ்க்கையில் அறம் செய்து வாழ்தல் முக் கியமாகும். இதையே ஔவையார் "அறம் செய்ய விரும்பு" என்று கூறுகின் றார். வள்ளுவப் பெருந்தகை அறக்கோட்பாட்டையே வகுத்துள்ளார். அதா வது ஒருவரின் சொல், செயல் எல்லாம் உள்ளத்தில் எழும் சிந்தனை வழிப் பட்டே அமைவன. ஆதலின் உள்ளம் தூய்மையாய் இருத்தல் அறம் என்கின் றார். இதையே,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற"

என்கின்றார். இதன்படி உள்ளம் சுத்தமாக இருக்குமானால் அதுவே பெரிய தர்மமாகும்; இந்நிலையில் அவன் வீணாக பக்தியும், பூசையும் செய்து மனதை சுத்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை. தர்மத்தோடு ஒப்பிடுகையில் அவை யெல்லாம் வீண் ஆடம்பர ஆரவாரங்களாகக் கருதப்படும்.

மேலும் "அழுக்கா(று) அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்ற(து) அறம்" என்பதில் பொறாமை, பேராசை, கோபம், கடுஞ் சொல் என்னும் நான்கு குற்றங்களையும் விலக்கி வாழுதலே அறம் என்கின் றார்.

ஒருவன் வாழ்க்கையை தர்ம மார்க்கத்தில் செலுத்துகின்றபோது அதனால் பெறுகின்ற இன்பமே நிலையான உண்மையான இன்பமாகும். ஏனைய அதர்ம முறையில் அடைகின்ற இன்பம், ஆரம்பத்தில் இன்பமாக இருக்கும். ஆனால் முடிவில் வெட்கத்தையும், துன்பத்தையும் தரும். நாம் இறக்கும் வரையும், இறந்த பின்பும் அழியாமல் எம்மோடு வருபவை நாம் செய்த அறம்தான். எனவேதான் "தர்மம் தலை காக்கும்" என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாகிய பொருள் பற்றி நோக்குமிடத்து உலகத்திலேயே மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பொருட்செல்வம் இன்றியமையாதது. பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் மனித வாழ்க்கைக்குப் பொருள் வேண்டியிருக்கின்றது. இனிய நல்வாழ்வு வாழ்வதற்கும் காரணமாய் இருப்பது பொருள் "பொருளில் லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பது திருவள்ளுவர் பொய்யா மொழி. இல்லாரை, எல்லோரும் எள்ளி நகையாடுவது, செல்வரை, எல்லோரும் சிறப்புச் செய்வது உலகத்திலே கண்கூடாகக் காணப்படும் உண்மை நிகழ்ச்சி. பொருளுடையவர், தாம் செய்வதற்கு எண்ணிய செயல்கள் தங்குதடையின்றி இனிது முடிகின்றன. பொருள் இல்லாதவர், செய்து முடிக்க எண்ணிய செயல்கள் கைகூடாமற் போகின்றன. அகவே "செய்க பொருளை" எனவும் "பொருளை ஈட்டுக" எனவும் ஆணையிடுகின்றார் வள்ளுவர்,

"செய்க பொருளை" என்று கூறிவிட்டபடியால் எப்படியாவது, எந்த வழியிலாவது பொருளைத் தேடலாம் என்று கருதக்கூடாது. பொருளை நல்ல வழியில் சேர்க்கவேண்டும். கள்ளத்தனம், இருட்டுப்புரட்டு, மோசநாசம் முதலிய தீய வழிகளால் தேடிய பணம் நன்மை பயக்காது. ஆகவே, "அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்" என்கின்றார். அதாவது நல்ல வழியில் அறநெறியில் ஈட்டுக பொருளை என்கின்றார்.

"மேலும் ஈட்டிய பொருளை அறம் செய்யவேண்டும், அதாவது ஏழை மக்களுக்கும், இல்லாதவர்களுக்கும் பொருளைக் கொடுத்து உதவ வேண்டும்.

"தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றும்,

"அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்றும் இதனை மேன்மேலும் வற்புறுத்துகின்றார்.

கௌடில்யரும் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றில் 'பொருள்' மிக அவசியம் என்கின்றார். நேர்மையான, சீரான வாழ்விற்குப் பொருளே அடிப்படை என்றும் அறத்திற்கும், இன்பத்திற்கும் அடிப்படை பொருள் என்றும் கூறுகின்றார்.

எனவே நல்வழியில் பொருளை ஈட்டி அதன்மூலம் தானும் வாழ்ந்து, தன் சுற்றமும் சூழ துய்த்து இனிய வாழ்வு வாழ்ந்து மற்றவர் வாழ்க்கைக்கும் உதவ வேண்டும் என்பதே இவர்களது கருத்தாகும்.

அடுத்ததாக இடம்பெறுவது இன்பம். அறத்தைச் செய்து, அறத்தின் வழி பொருளீட்டி. அறத்தின் வழி இன்பம் பெறுவதே சிறந்த வழி. இவ் இன்பத்தில் சிற்றின்பம், பேரின்பம் என இரண்டு வகை உண்டு. சிற்றின்பத்தை முறையாக அனுபவிப்பவனுக்கு பேரின்பந்தானே வந்தமைகின்றது. சிற்றின்பத்தில் வரும் இன்பம் என்பது ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒன்றுபட்டு வரும் இன்பம். உடம்பும் உள்ளமும் நுகரும் அது சிற்றின்பம் என்பர். வீட்டின்பம் தான் பேரின்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்டு கேட்டு உற்று மோந்து
உண்டு உழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெரிவு அறிய
அளவில்லாச் சிற்றின்பம்" என்பார் நம்மாழ்வார். காட்சிக் கருவியாக இருக்கும் கண்; கேள்விகளுக்குக் கருவியாக இருக்கும் செவி; பரிசத்திற்குக் கருவியாக இருக்கும் சரீர இந்திரியம், நாற்றத்தை அறிதற்குக் கருவியாக இருக்கும் மூக்கு; சுவையை அனுபவிப்பதற்குக் கருவியாக இருக்கும் நாக்கு; உழக்காலே அளக்குமாறு போன்று அளவிற்குட்பட்ட பொருள்களை அறியத் தக்கவைகளான இந்திரியங்களாலே அனுபவிக்கப்பட்ட இன்பம் சிற்றின்பம் என்கிறார் ஆழ்வார். இவ்வுலக இன்பத்தைப் பற்றத்தான் தெரிந்தது ஐங் கருவிகளின் இன்பம். இவ்வாறான இன்பத்தை பெண்ணோடு கூடி வாழும் போது கிடைக்கின்றது. காமம் என்னும் இந்த இன்பம் இல்வாழ்வானும், மனைவியும் கூடி வாழ்ந்து கருமங்காத்து, தமது ஆன்ம ஈடேற்றத்திற்கும், பிதிர்கருமத்திற்குமான புதல்வரைப் பெற்று வாழ்வதற்கே ஆகும். எனவே இல்வாழ்க்கை, இறுதி இலட்சியமாகிய வீடு பேற்றுக்கு ஒரு சாதனமாக அமைந்ததேயன்றி, அதுவே சாசுவதமானதன்று; அதனால் எய்தப் பெறும் இன்பமும் நிரந்தரமானதன்று. இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் போதே இந்த உண்மையை உணர்ந்து உலகியல் பற்றை இறை பற்றாக்கும்போது பேரின்பம்தானே வந்தமைகின்றது.

பேரின்பமே 'வீடு' எனக் கூறப்படுகின்றது. 'வீடு' என்பதற்கு விடுபடுவது என்பது பொருள் கொண்டு, பிறவியினின்றும் விடுபட்டு இறைவனுடைய உலகத்தை அடைய எண்ணும் இலட்சியம் இது என்பர்.

"ஈதல் அறம் தீவினை விட்டீட்டல்
பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்
தொருமித் (து) - ஆதரவு
பட்டதே இன்பம் பரனை
நினைந் (து) இம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு—என்று பாடியுள்ளார் ஔவையார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் அறம், நியாய வழியில் சம்பாதிப்பது பொருள். காதலனும், காதலியும் கருத்தொருமித்து, ஈருடல் ஓருயிராய்ப் போகம் துய்த்தல் இன்பம். இம்மூன்றும் நிலையில்லாதவை என்று உணர்ந்து இவற்றின் மீதுள்ள பற்று நீக்கித் துன்பங்களைந்து பேரின்பநிலை எய்துவதே வீடு ஆகும் என்பது இப்பாட்டின் கருத்து. இதையே.

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்பற்றுக பற்று விடற்கு" என்கின்றது குறள். அதாவது பரனைப் பற்றாக நினைத்து அறம், பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் பற்றாக நினைந்த நினைவினின்றும் நீங்கித் துன்பம் நீங்கி, இன்பப்பேறு எய்துவதே வீடு என்று தெளிவுபடுத்துகின்றது. வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை இப்படியென விபரிக்கக் கூடிய ஒன்றல்ல. வீட்டு நிலையை அடைந்த ஒருவர் வீட்டின் தன்மையை உணர்வதில்லை. ஏனென்றால் அது அனுபவரீதியாகப் பெற்றுக் கொண்டதாகும். இதனாலேயே ''கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்'' என்ற வாக்கியம் உருவாகியது. எனவே வீட்டு நிலையே ஆன்மாவின் இறுதி இலட்சியமாகும்.

இவ்வாறாக அறம், பொருள், இன்பத்தை இல்வாழ்க்கையில் முறைப்படி கடைப்பிடித்து வழுவாது வாழ்பவர்கள் ஆன்மீக விடுதலை (வீடுபேறு) அடைந்து தேவருள் ஒருவராக மதிக்கப்படுவர். இதனாற்றான்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என வள்ளுவர் கூற்று எடுத்துக்காட்டுகின்றது.

---

# 15. விநாயக வழிபாடு (காணபத்தியம்) இந்தியாவில் தோன்றி வளர்ந்த வரலாற்றை எடுத்துக்கூறுக:

எல்லாம் வல்ல பரம்பொருளை வழிபடும் மார்க்கங்கள் ஆறு. அவற்றை அறுவகைச் சமயங்கள் என்பர். வடமொழியில் இவை 'ஷண் மதங்கள்' என அழைக்கப்படுகின்றன. இறைவனை நாம் எந்தெந்த தோற்றங்களில் வழிபடுகின்றோமோ அந்தந்தத் தோற்றங்களில் அவன் ஒளிர்பவன். இந்த உண்மையின் அடிப்படையில் மலர்ந்தவை தாம் ஷண் மதங்கள். இந்த ஆறு சமயங்களும் அனுசரிக்கும் முறைகளை ஒன்று திரட்டி ஆதிசங்கரர் பகுத்த அமைப்புத்தான் இவை. சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பனவே அவ் ஆறு சமயங்களும் ஆகும். இவற்றுள் கணபதியை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியம். கணபதியை வழிபடுவோர் காணபத்தியர். எனினும் இன்று கணபதி வழிபாடு காணபத்தியருக்கு மட்டுமே உரியதன்று. இவ் வழிபாடு ஏனைய வழிபாட்டு முறைகளுடன் சங்கமித்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதியின் உருவ அமைப்பில் எல்லா தெய்வங்களும் இணைந்திருக்கிறார்கள் என்பர். கணேசரது நாபி-பிரம்ம ரூபம்; முகம்-விஷ்ணு ரூபம்; கண்-சிவ ரூபம்; இடப்பாகம் சக்திரூபம்; வலப்பாகம்-சூர்யரூபம். ஆகவே இது தெய்வங்களின் கூட்டு அமைப்பு எனலாம்.

எல்லா ஜீவராசிகளும் கணபதியின் உடலின் அடக்கம். கணபதி ஜகத் ரட்சகர். முகம் மிருக முகம் போன்றது: உடல் தேவ உடலைப் போன்றது: கால்கள் பூத கணங்களைப் போன்றவை: ஒற்றைக் கொம்பு ஆண் யானை. ஒடிந்த கொம்பு பெண் யானையைப் போன்றது. தேவ உடல் பெற்றிருப்பதால் உயர்திணையாகவும், மிருக முகம் பெற்றிருப்பதால் அஃறிணையாகவும் கணபதி தோற்றம் தருகிறார். 'தத்துவமசி' என்ற மகா வாக்கியத்தின் வடிவமே மகாகணபதி.

கணபதியின் தோற்றமே தத்துவக் கருத்துக்களைப் புகட்டுகின்றது. பானை வயிறு, உலகை அடக்கியுள்ளமையையும், இவரது யானைமுகம் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தையும், மோதகம் இன்ப வடிவானவன் என்பதையும், பெரிய செவி. அன்பர்கள் கூறுவதைக் கேட்கும் ஆவல் உடையவர் என்பதையும், ஒற்றைக் கொம்பு, தியாகத்தையும் எடுத்து விளக்கும்.

மேலும் இவரது வடிவமானது ஐந்தொழில்களை குறிப்பதாயும் உள்ளது. எழுத்தாணி பிடித்த கரம்-படைத்தலையும்; மோதகம் ஏந்திய கை-காத்தலையும் அங்குசம் ஏந்திய கை-அழித்தலையும்; பாசம் கொண்டிருக்கும் கரம்-மறைத்தலையும்; அமுத கலசம் ஏந்திய துதிக்கை-அருளலையும் நமக்கு விளக்குகின்றது.

இவ்வாறு பல தத்துவங்களை உணர்த்தி நிற்கும் கணபதி இருந்த நிலையிலும், நின்ற நிலையிலும், நடனமாடிய நிலையிலும் பலவாறான வடிவங்களுடன் திகழ்கின்றார்.

விநாயகருக்கு விக்கினேஸ்வரர், லம்போதரர், கணபதி, பிள்ளையார், சித்தி புத்தி கணபதி, வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர் ஆனைமுகன் ஐங்கரன், நர்த்தன கணபதி எனபல பெயருண்டு. விக்கினேஸ்வரர்-விக்கினங்களை இல்லாமல் செய்பவர் லம்போதரர் பெரிய வயிற்றையுடையவர். கணபதி கணங்களுக்கு தலைவர், பிள்ளையார் - பிள்ளைகளுக்குரிய கடவுள், சித்தி புத்தி விநாயகர் - சித்தி புத்தி என்ற இருமனைவியர் உடையவர் (புத்தி என்பது அறிவையும், சித்தி என்பது பலனையும் குறிக்கும் என்பர்) வலம்புரி விநாயகர்-தும்பிக்கை வலம் புறம் திரும்பியிருக்கும், இடம்புரி விநாயகர் - தும்பிக்கை இடதுபுறம் திரும்பியிருக்கும். ஆனைமுகன்-ஆனை முகத்தையுடையவன். விநாயகர் - தனக்குமேல் வேறு தலைவன் இல்லை. ஐங்கரன்-ஐந்து கரத்தை உடையவர். நர்த்தன கணபதி - நடனமாடிய நிலையில் உள்ளவர், இவ்வாறாக கணபதிக்கு பல பெயர்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி விநாயகர் வழிபாட்டின் தொன்மையினையும் வளர்ச்சியையும் எடுத்து நோக்குவோம். விநாயக வழிபாட்டின் தொன்மையை நாம் சிந்து வெளியிலிருந்தே அறியலாம். இங்கு சிவன் சக்தி வழிபாடு இருந்தபடியால் விநாயக வழிபாடும் இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

விநாயகர் பற்றி மிகப்பழைய குறிப்புக்கள் இருக்கு வேத இலக்கியங்களிலே காணக்கிடக்கின்றது. "கணனாம் த்வாம் கணபதிகும் அவாமஹே" என்றும், யசுர் வேதத்திலுள்ள சதருத்திரியம் (45.41) வாஜசனேய சம்ஹிதை (22.30) ஆகியவற்றிலும் கணபதி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றின் ஒன்று 'கணபதிக்கு வணக்கம்' என்று காணப்படுகின்றது.

ஐதரேய பிராஹ்மணத்திலே விநாயகர் விக்கினங்களை ஏற்படுத்துபவராகவும், அவர்களை சாந்தப்படுத்துபவராகவும் கூறப்படுகின்றார்.

கணபதி உபநிடதத்திலே "ஓம் கணபதியே வணக்கம். நீயே காணும் உண்மை. நீயே படைப்பவனும், காப்பவனும், அழிப்பவனுமாய் இருக்கின்றாய். நீயே எல்லாமாய் உள்ள பிரமம் உன்னிடத்திலிருந்தே பிரபஞ்சம் தோன்றுகிறது. உன்னிடமே ஒடுங்குகின்றது. நீயே பிரமன். விஷ்ணு, ருத்திரன்' எனக்கூறுகிறது.

தைத்திரிய ஆரணியத்தில் கணபதியைப் பற்றிய தவறில்லாத குறிப்பு ஒன்று காணப்படுகின்றது. அதில் 'தந்தின்' என்ற பெயர் காணப்படுகின்றது.

"தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி தன்னோ தந்தி பிரசோதயாத்" —என கணேசனை வழிபடும் காயத்திரி மந்திரம் கணபதி பற்றி எடுத்துரைக்கின்றன.

இவ்வாறு சிந்துவெளி, வேதகாலங்களில் விநாயகர் பற்றிய மூலத்தை கண்ணுற்ற நாம் புராண இதிகாச காலத்தில் இவரது தோற்றம், பிறப்பு, வழிபாடு எவ்வாறு இருந்தது என்பதை உற்றுநோக்கும் போது ஏனைய காலங்களைவிட இக்காலத்திலேயே மிகப் பிரசித்தி பெற்றதாக காணப்படுவதை அறிகின்றோம்.

விநாயகப் பெருமானின் தோற்றம் (பிறப்பு) பற்றி பல புராண வரலாறுகள் உண்டு. அவற்றுள் சிவபுராணம் உலக மாதாவாகிய உமாதேவி தாமும் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொஞ்சிக் குலாவ வேண்டும் என எண்ணினார். உடனே மண்ணினால் உருச் சமைத்தார். அதற்கு உயிர் கொடுத்து தன்மடியில் வைத்து இன்புறுவதைக் கவனித்த சிவபெருமான் அவ்வண்ணமே திருநோக்கம் செய்து புதல்வப் பேற்றைக் கொண்டாட சகல தேவர்களையும் அழைப்பித்தார். அத்தருணம் சனியனும் வந்திருந்தான். அவன் பார்வை அந்தக் குழந்தையின் மேல் விழுந்தது. அதனால் அவன் தலை அறுபட்டுப் போய்விட்டது. அன்னை வருந்தியதைக் கண்ட சிவன் பூதகணங்களைப் பார்த்து வடக்கே சென்று முதல் காணும் விலங்கின் தலையைக் கொண்டு வாருங்கள்



நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூற, அவர்களும் அவ்வாறே ஒரு யானைத் தலையைக் கொண்டு வர சிவன் அதனைப் பொருத்தி குழந்தைக உயிர்ப்பித்தார் என்றும், காஞ்சிப் புராணம் திருக்கைலாயத்தில் சிவனும், உமையும் ''மந்திரசாலா'' என்னும் பூஞ்சோலைச் சித்திர மண்டபத்திற்குச் சென்றனர். அங்கே ஒரு பிரணவம் எழுதப்பட்டிருந்தது. இருவரும் அதனையே உற்றுநோக்கினர். பிரணவமாக அது பிரிந்து இறைவன் எழுத்தாகிய 'அகரம் களிறாவும்' அம்மை எழுத்தாகிய 'உகரம் பிடியாகவும்' ஆயிற்று. அவை இரண்டும்கூடி விநாயகர் தோன்றினார் என புராணங்கள் விநாயகரது பிறப்புப் பற்றி எடுத்துக் கூறுகின்றது.

புராண காலத்தில், சிவன் முக்கிய தெய்வமாக வழிபடப்படுகின்றார். சிவன் முப்புரங்களை எரிக்கச் சென்றவேளை சிவனது தேர்ச்சில்லு முறிவடைந்து விட்டது. காரணம் விநாயகரை வழிபடாமல் சென்றமையேயாகும். இதிலிருந்து சிவனே விநாயகரை வழிபடும் அளவிற்கு விநாயகர் வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை அறியலாம்.

மேலும் வியாசர் மகாபாரதத்தை இயற்றிய காலத்தில்(இதிகாசகாலம்) வியாசர் சொல்ல விநாயகர், எழுதினார். எனவே இக்காலத்தில் விநாயகர் வழிபாடு இருந்தமை தெட்டத்தெளிவாகின்றது.

குப்தர் காலத்தில் விநாயகர் கோவில்கள், உருவச்சிலைகள் காணப் பட்டன.

இனி தென்னிந்திய வரலாற்றை நோக்குமிடத்து சங்க காலத்தில் நேரடியாக கணபதி வழிபாடு காணப்படா விட்டாலும் முருக வழிபாடு இருந்ததனால் விநாயகர் வழிபாடும் இருந்திருக்கலாம் எனக்கொள்ள இடம் முண்டு.

சங்கமருவிய காலத்தில் எழுந்த மணிமேகலையில் ''கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை'' என்று குறிப்பிடப்படுகின்றது. இதிலடங்கியுள்ள வரலாறு விநாயகர்காக வடிவங் கொண்டு கமண்டலத்தை கவிழ்த்ததைக் கூறுகின்றது.

பல்லவ காலப் பகுதியில் உருவ வழிபாட்டு முறை காணப்படுகின்றது. வடநாட்டிலிருந்து அகத்தியர் செய்த விநாயகர் சிலை சிறுத் தொண்டரால் முதன் முதலாக இக்காலத்தில் கொண்டு வரப்பட்டு கணபதீசுவரம் என்ற இடத்தில் ஸ்தாபிதம் செய்து வழிபடப்பட்டது என்பதை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. சம்பந்தர் காலத்தில் சீர்காழிப் பதிகமாகிய 'காடதணி' கழுமலப்பதிகமாகிய பந்தத்தால் இராமன் தீச்சரப்பதிக மாகிய ''கங்கொளிர்'' வலிவலப்பதிகமாகிய ''பிடியதனுரு'' போன்ற தேவாரங்களில் விநாயகர் பற்றி விசாலமாக பேசப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் விநாயக வழிபாடு மிகவும் சிறப்புற்று விளங்கியது. விநாயகர் ஆலயங்கள் கட்டப்பட்டன, இக்காலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாரை வேண்டி அருள் பெற்றமை விநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு சிறப்புப் பெறும் விநாயகர் பற்றி ஔவையார், நம்பியாண்டார் நம்பி, நக்கீரர், கபிலதேவர், அதிராவடிகள் போன்றோர் விநாயகரைப் பற்றி தனி நூல்கள் எழுதியிருக்கின்றார்கள்.

தற்காலத்தில் விநாயகர் வழிபாடு பற்றி எடுத்து நோக்கும்போது இன்று எந்த தெய்வத்தை வழிபடுவதாக இருந்தாலும், எந்தக்காரியத்தை தொடங்குவதாக இருந்தாலும் முதலில் கணபதியைத்தான் வழிபடுகின்றோம். இது இவருக்குள்ள சிறப்பு.

நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தில் ஆவாகனம் ஆகும் மூர்த்தம் விநாயகர்தாம், பசுச்சாணத்திலும், அரைத்த மஞ்சளிலும், அறுகம் புல்லிலும், வெல்லத்திலும், கல்லிலும் அன்பர்களுக்காக ஆவாகனமாக ஆகி அருள் தருகின்றார்.

மக்களின் எளிமையான வழிபாடுகளுக்கேற்றவாறு ஆலயங்களிலும், ஆற்றங்கரையிலும், முச்சந்திகளிலும், அரசமரத்தடியிலும் அமர்ந்து அருள் பொழிகின்றார் முழுமுதற் கடவுள் கணபதி

'ஓம்' என்னும் பிரணவத்திற்கு பின்னரே எல்லா மந்திரங்களும் வந்து சக்தி பெறுகின்றன அந்த ஓங்கார வடிவத்திற்கு உருவாக அமைந்தமையே கணபதி, 'உ' பிள்ளையார் சுழியாக விளங்குகிறது தொடங்கிய கருமம் செவ்வனே நிறைவுபெற எதை எழுதத் தொடங்கும் போதும் முதலில் பிள்ளையார் சுழி எழுதுவதும் இன்றும் அனுட்டிக்கப்படும் மரபாக விளங்குகின்றது.

மேலும், வித்தியாரம்பம் செய்யும்போது முதலில் 'ஓம்' கணபதி துணை என்பதும், திருமணம் செய்வதில் மிகக் குறைந்த செலவில் செய்வதாக இருந்தாலும் பிள்ளையார் பூசை பண்ணுவதும், வீட்டிற்கு அடிக்கல் நாட்டுதல், கதவுக்கு நிலை நிறுத்தல், கூரைக்கு வளை வைத்தல், வயலில் நாளுக்கு ஏர்பூட்டுதல் முதலிய எக்கருமமாக இருந்தாலும் முதலில் பிள்ளையார் பூசை செய்து வழிபடத் தொடங்குதல் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

விநாயகர் பிறந்து கணபதியாக்கப்பெற்ற சதுர்த்தி நாளை விரதமாக இன்றும் மக்கள் அனுட்டிக்கின்றனர் நமது உடலின் ஞானேந்திரியம் ஐந்து; கர்மேந்திரியம் ஐந்து; அதன் செயற்பாட்டு முறை ஐந்து; மனம் ஒன்றையும் சேர்த்து கணபதியை வழிபாடு செய்ய வேண்டும். இதை நினைவுபடுத்த இச்சதுர்த்தி விரதத்தில் இன்றும் கணபதி பூசையில் பத்திரம் 21, புஷ்பம் 21, அறுகம்புல் 21, அதிரசம் 21, மோதகம் 21, பழம் 21 இந்த எண்ணிக்கையில் வைத்து வழிபாடாற்றுகின்றனர்.

மேலும் வருடந்தோறும் வரும் கார்த்திகை மாதத்து திருக் கார்த்திகையை அடுத்து வரும் கிருஷ்ணபட்ச பிரதமை முதல் மார்கழி மாதத்து சுக்கில பட்சத்து சஷ்டி ஈறாக வரும் இருபத்தொரு நாள் அனுட்டிக்கும் விநாயக சஷ்டி விரதமும் மிகப் பிரபல்யம் பெற்று மக்களால் வழிபடப்படும் விரதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வைணவர்கள் விநாயகரை விஷ்வச்சேனர் என்றும், சேனைமுதலி என்றும், தும்பிக்கை ஆழ்வார் என்றும் போற்றி வணங்குகிறார்கள். ஜைனர்கள் 'அருக நாயகர்' என்று போற்றுகிறார்கள். புத்தர்கள் 'புத்த நாயகர்' என்று துதிக்கிறார்கள். மற்றமதஸ்தர்கள் கணபதியை முன்னவனாக வைத்து வழிபடுகின்றார்கள்.

இந்தியாவில் தோன்றிய விநாயக வழிபாடானது இலங்கையிலும் வளர்ச்சியடைந்துள்ளதை இங்கு காணும் நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார், நீர்வேலி அரசகேசரி பிள்ளையார், சுழிபுரம் காக்கைப் பிள்ளையார், மட்டக்களப்பு மாமாங்கம் பிள்ளையார், முறிகண்டிப் பிள்ளையார், பருத்தித்துறை தில்லையம்பலப் பிள்ளையார் முதலிய பல கோயில்கள் சான்று பகர்கின்றது.

வெளி நாடுகளிலும் விநாயக வழிபாடு பரவி மிகப் பிரபல்யமான வழிபாட்டு முறையாக இருந்து வருகின்றது. ஜப்பானில் மூன்று முகங்களோடும், சீனாவில் நான்கு முகங்களோடும், நேபாளத்தில் ஐந்து முகங்களோடும் விநாயகர் வழிபடப்படுகின்றார்: பர்மா தேசத்தில் கணபதியை ''மகாபிணி'' என்றும். மங்கோலிய மக்கள் ''தோக்கார்'' என்றும், திபெத் தேசத்து மக்கள் 'ட்ஸா கஸ்புடார்' என்றும், கம்போடியாவில் ''பிரஹகணேஸ்'' என்றும், சீனாவில் ''குவான் ஸியிக்'' என்றும், யப்பானில் 'வினாயக்ஷா' என்றும் நேபாளத்தில் 'எதிர்முக கணேசன்' என்றும் அழைத்து வழிபடப்படுகின்றார்.

எனவே தொகுத்து நோக்கும்போது விநாயக வழிபாடு மிகப்பழைய காலம் தொடக்கம் இன்று வரையும் இந்து மதத்தில் சிறப்பும், முக்கியத்துவமும் பெற்று இருப்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. இந்து மதத்தில் ஒழுக்கக் கோட்பாடு (அறம்) பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க:

இந்துமதக் கோட்பாடுகளும் ஒழுக்கக் (அறம்) கோட்பாடும் ஒன்று. அறம், தர்மம், ஒழுக்கம் என்பது ஒரே கருத்தினையே விளக்கி நிற்கின்றன. ஒழுக்கம் என்பது மனிதருக்கு நலம் பயப்பது. உலகைக்காப்பது. ஜீவகோடிகளைக் காப்பது. இது தெய்வத்திடம் பிறந்தது, நம்மை தெய்வத்திடம் சேர்ப்பிப்பது. எனவே ஒருவரை தெய்வமாக்குவது. மரணத்தின் பின் நம்மைத் தொடர்ந்து வருவதும் உயிரினும் மேலாக மதிக்கப்படுவதும் இதுவே. எனவே தான் வள்ளுவப்பெருந்தகையும்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் எனக்'' கூறுகின்றார். இவ் ஒழுக்கக் கோட்பாடானது இந்து மதத்தில் மட்டுமே முழுப்பரிமாணத்தோடு விவரிக்கப்படுகின்றது.

வேதத்தில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்களை நோக்கினால் இங்கு 'ரிதம்' என்ற கருத்தில் பேசப்படுகின்றது. இந்த ரிதத்தைக் காப்பவனாக இருக்கு வேதம் 'ரிதசய கோபா' என்ற பெயரில் வருணனே அதற்குரிய தெய்வம் எனச் சுட்டுகின்றது. நதிகள் ஒழுக்காகப் பாய்வதற்கும், பருவகாலம் வருவதற்கும் அதன் கட்டுப்பாடான வரையறைக்கும் (பிரபஞ்ச ஒழுங்கு) வருணனே தலைவனாவான். இவன் சூரியனைக் கண்ணாகக் கொண்டு பாவம் செய்பவர்களைத் தண்டிப்பதாகவும். பாவமன்னிப்பு கோருபவர்களை ஏற்றுக் கொள்வதாகவும் அவனது பாடல்கள் விளங்குகின்றன.

'உயர்ந்த சிந்தனைகள் எல்லாத் திசைகளிலிருந்தும் நம்மிடையே வரட்டும்' என்கின்றது யசுர் வேதம் (25 - 15).

உபநிடதங்களில் இவ் அறக் கருத்துகளை நோக்கும்போது பலவாறாக பேசப்படுகின்றன. தைத்திரிய உபநிடதத்தில் சத்தியம் வத (உண்மை பேசு) தர்மம் சர (அறம் செய்) மாத்துரு தேவோ பவ (தந்தையைத் தெய்வமாகப் போற்று) ஆச்சாரிய தேவோ பவ (ஆசிரியனைத் தெய்வமாகப் போற்று) என்பன போன்ற அறக் கருத்துக்களை குருகுலவாசம் முடிந்து இறுதி அறிவுரை கூறி வீட்டிற்கு அனுப்பும்போது குருவானவரால் கூறப்பட்டது.

மேலும் செல்வத்தைப் புறக்கணிக்ககூடாது. வீட்டிற்கு வந்த விருந்தினரை தெய்வமாகக் கருத வேண்டும். நமக்காக மட்டும் உணவை உண்டாக்கினால் போதாது. நாட்டிற்கும் பயன்படுமாறு உணவை ஏராளமாக உண்டாக்க வேண்டும். என்பனவும் உபநிடதங்களில் கூறப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண இதிகாசங்களை எடுத்துநோக்கும் போது இங்கு அறக் கருத்துக்கள் அதிகமாக எடுத்தாளப்படுகின்றது. புராணங்களில் ஒன்றான ''அரிச்சந்திர புராணத்தில்'' உண்மை பேசு எனும் கருத்து அரிச்சந்திரன் என்னும் பாத்திரப்படைப்பின் மூலம் காட்டப்படுகின்றது.

இதிகாசத்தில் காணப்படும் இராமாயணம், பாரதம் ஆகிய நூல்களிலே ஒரு மனிதன் தன்னிலும் பெரியவர்களோடு எவ்வாறு பழக வேண்டும்? சமமானவர்களோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும்? தன்னைவிட குறைந்தவர்களை எங்ஙனம் நடத்த வேண்டும்? ஓர் அரசன் தன் நாட்டை எங்ஙனம் ஆள வேண்டும்? ஓர் சமுதாயம் அமைதியாக சச்சரவின்றி எப்படி வாழவேண்டும்? என்பன போன்றவிடயங்களைக் கூறுகின்றன, இவற்றிலே ''பெரியோரை மதித்து நடக்கும்'' பண்பில் இராமாயணத்தில் இராமனும், பாரதத்தில் வீமனும் காட்டப்படுகின்றார்கள். அதாவது இராமருக்கு முடிசூட்டும் போது கைகேயி இராமரிடம் ''மகனே உனது தம்பி நாடாளவும், நீ பதினான்கு ஆண்டுகள் காடாளவும் வேண்டும்'' எனக்கூறுகின்றாள். இதைக்கேட்ட இராமன்உடனே இன்முகத்துடன் தாயின் சொல்லைத் தட்டாமல் காட்டிற்கு செல்கின்றான். பாரதத்தில், துச்சாதனன் திரௌபதையின் துகில் உரிந்து அவளை அவமானப்படுத்தும்போதும் வீமன்கோபத்துடன் எழுகின்றான். இதைக் கண்ணுற்ற தருமன், தம்பியின் கோபத்தை தணிக்கின்றார். இதன் மூலம் இருவரிடையேயும் 'பெரியோரை மதித்து நடக்கும், அறப் பண்பு வெளிக் காட்டப்படுவதுடன், தருமரின் பொறுமையும், தாம் பொறுத்திருந்தவாறே மற்றவரையும் பொறுத்திருக்கப் பழக்கிய பொறுமையே தர்மம் என்ற அறப் பண்பும் வெளிக்காட்டப்படுகின்றது.

அடுத்து 'விருந்தோம்பும், பண்பும் சமுதாய அறக் கருத்துக்களில் ஒன்றாக காட்டப்படுகின்றது. பாரதத்திலே, பாண்டவர்கள் வனவாசம் செய்தபோது காட்டிலே வரும் முனிவர்களை திரௌபதை உபசரித்தமையும், இராமாயணத்தில் அசோகவனத்திலிருக்கும் போது சீதை ''தன் கணவன் வரும் முனிவர்களை எவ்வாறு உபசரிப்பாரோ?''எனஏங்குவதும் அதனை புலப்படுத்திக் காட்டுகின்றது.

சமூகத்தில் ஒருவனது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறம் பற்றியும், ஏகபத்தினி விரதம் பற்றியும் இதிகாசங்கள் கூறுகின்றன. இராமாயணத்தில் இராமர் சீதையைத் தவிர எந்தப் பெண்ணையும் மனதால்கூட நினைக்கவில்லை. ஆனால் இராவணன் சிவனது பக்தனாக இருந்தும் மாற்றான் மனைவியைவிரும்பிய காரணத்தால் அவன் அழிகின்றான்.

மேலும் பெண்களின் 'கற்பு'ம் அறக் கருத்தாக கூறப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் சீதையின் வாழ்வு அமைகின்றது. அவள் கற்பை நிரூபிக்க தீக்குளிக்கின்றாள். பாரதத்தில் திரௌபதை பாண்டவர்கள் ஐவரையும் பாகுபாடின்றி ஆன்மீக ரீதியில் தன் கடமைகளை செய்கின்றாள். இதனால் சீதையும். திரௌபதையும் கற்புக்கரசிகளாக போற்றப் படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட சர்வதேச சகோதரத்துவமாகிய அறக்கருத்து எடுத்துக் காட்டப்படுகின்றது. அதாவது பரதன் இராமனின் பாதுகைகளை வைத்து அரசு செய்வதும், இராமன் சக்கரவத்தியின் குமாரனாகவிருந்தும் குடிமக்களுடன் தோழமை பூண்டு ஒழுகுவதும், வாலியைக் கொன்ற இராமன் அந்த அரசை அயோத்தியுடன் இணைக்காமல் சுக்கிரீவனுக்கு கொடுப்பதும் இராவணனைக் கொன்ற பின் இலங்கையரசை தன்னுடையதாக்காமல் விபீடனுக்கு கொடுப்பதும் ஓடமோட்டிய குகனை தோழனாக ஏற்றதும் 'சர்வதேச சகோதரத்துவம்' எனும் அறக் கருத்தை எடுத்துக் காட்டுகின்றது.

அடுத்து கர்ணன் மூலம் 'நன்றி மறவாதிருக்கும்' அறப்பண்பு வெளிக் காட்டப்படுகின்றது. பாரதத்தில் துரியோதனன் தன்னை மதித்து பாதுகாத்த தன் நிமிர்த்தம் 'செஞ்சோற்றுக் கடன்' தீர்க்கும் பண்புடையவனாய் இருப்பதுடன் தன்னிடம் யார்? எந்த நேரத்தில்? எப்பொருளை கேட்டாலும் கொடுக்கும் கொடைவள்ளலாகவும் காணப்படுகின்றான்.

அடுத்து கீதையில் கிருஷ்ணர் ''தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும் போது நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும் நான் யுகந்தோறும் அவதரிப்பேன்'' என்று கூறுகின்றார்.

மேலும் ஆன்மீக வாழ்க்கை முழுமைபெற அறமே (ஒழுக்கமே) காரமாக அமைவதை கீதை, கூறும் உபதேசங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்குரிய அரச தர்மத்தை விளக்கிக் காட்டும் போது ''அரசனது உயிரிலும் பெரிதானது அறம். போர் புரிவதால் அறம் வளர்க்கப்படுகின்றது. போரிலிருந்து விலகுவதால் மறம் மேலோங்குகிறது என்றும் ''கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'' என்றும் கூறுவதுடன் ஒருவன் ''நடுவுநிலைமை உடையவனாக, மனவலிமை உடையவனாக, பஞ்சயஞ்ஞங்களை செய்பவனாக, அகங்காரம் மமகாரம் இல்லாதவனாக. அன்பு, பொறுமை, சத்தியம், நேர்மை, கொலை செய்யாமை முதலிய நற்பண்புகளை உடையவனே எனக்கு பிரியமானவன்'' எனக் கூறுவதன் மூலம் ஒழுக்கக் கருத்துக்களை எடுத்து விளக்குவதுடன் போதனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிக்க வழிகாட்டுகின்றது.

இதைவிட வாழ்க்கைக்கேற்ற அறங்களை எடுத்துக்கூறும் நூலாக தர்ம சாஸ்திரம் விளங்குகின்றது. இதுவேதா கிலோ தர்மமூலம்'' என்கின்றது அதாவது சகல தர்மங்களுக்கும் மூலம் 'வேதம்' எனக் கூறி மனிதனையும் சமூகத்தையும் அறத்தின் வழி இட்டுச் செல்கின்றது.

தர்மத்தின் லட்சணம் எது என மனு விவரிக்கின்கின்றார்.

த்ருதி : க்ஷமா, தமா அஸ்தேய
ஷௌசாந்திரிய நிக்ரஹா!
த் வித்யா, சத்ய அக்ரோதோ
தஷங் தர்மலக்ஷணம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை, மன்னிப்பு, மன உறுதி, புலனடக்கம், கள்ளாமை, தூய்மை ஞானம், அறிவு, உண்மை, சினமின்மை ஆகிய பத்துப்பண்புகளே தர்மலட்சணங்களாகும் என்பதுவே இதன் பொருள்.

மேலும் இது கூறும் உயர்ந்த ஒழுக்கங்களை இயமங்கள், நியமங்கள் என்ற இரு பிரிவிற்குள் அடங்குகின்றது. மேலே சொல்லப்பட்ட பொதுவான குணங்களை இயமங்கள் என்றும், நியமங்களாவன வர்ணாச்சிரம தர்மத்திற்கு அமைவாக கைக்கொள்ள வேண்டிய கட்டாய வழக்கங்களாம் எனக் கூறுகின் கின்றது.

இல்லற வாழ்வில் முழுமைபெற ஒழுக்கமே (தர்மமே) காரணமாக அமைகின்றன என்பதை இந்து மதம் கூறும் வர்ணாச்சிரம் தர்மக் கோட்பாடு விளங்குகின்றது. வர்ணாச்சிரம் தர்மத்தில் வரும் இல்லறப்பருவம் இதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அதாவது உலகியலோடு ஒட்டி வாழும்போது இல்லறத்தானுக்கு பல கடமைகள் உண்டு. இக்கடமைகள் அனைத்தையும் அவன் தவறாது செய்யவேண்டும். இதனையே வள்ளுவர்

''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்.

நல்லாற்றின் நின்ற துணை'' என்று கூறுவதுடன் இல்லறத்தான் காட்டிற்குச் செல்லாது இல்லறத்தோடு கூடி வாழ்வதெல்லாம் வீட்டிற்கு வரும் விருந்தினரைப் பேணி உபசரிப்பதற்கே. இதனையே வள்ளுவர்.

''இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு''

என்றும் கூறுவதிலிருந்து இல்லறத்தான் ஒருவன் இல்லறத்தை நல்லறமாக நடத்துவதற்கு ஒழுக்கமே (அறமே) சிறந்ததெனக் கூறலாம்.

அடுத்து மக்களின் வாழ்க்கைக்குரிய குறிக்கோளாகிய நான்கு புருடார்த்தங்களிலும் அறம் (ஒழுக்கம்) முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இந்த வகையில் அறம் பற்றிய கருத்தினை சிறுவயதிலேயே ''அறம் செய விரும்பு'' என்ற ஒளவையாரின் அமுத வாக்கைக் கேட்டிருக்கின்றோம்.

19 ஆம் நூற்றாண்டில் தோன்றியமகான்கள் ஒழுக்கக் கருத்துக்களையே மிக முக்கியப்படுத்திக் கூறுகின்றனர். உதாரணமாக மகாத்மா காந்தி இராம கிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோரது வாழ்க்கையும் அவர்கள் கூறிய உபதேசங்களும் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

இன்று கூட உலகில் பல பிரச்சனைகள் தலைதூக்கி நிற்கும் வேளையில் இவ் ஒழுக்கக் கருத்துக்களே பலவாறாக மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகின் றதைக் காண்கின்றோம். எந்த ஒரு விழாவிலும் பாடசாலைகளிலும், ஆலயங் களிலும், வேறு பல நிறுவனங்களிலும் இதுவே எடுத்துரைக்கப்பட்டு போதிக் கப்படுகின்றன, மனிதன் இவ் ஒழுக்கப்பண்புகளை மேம்படுத்திக் கொள்ள ''தியானம்'' போன்ற வழிவகைகளும் கீழைத்தேயத்தில் மட்டுமல்ல மேலைத் தேய மக்களாலும் பின்பற்றப்படுவதையும் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்துமதம் கூறும் ஒழுக்கக் கோட்பாடு இவ்வுலகில் மனிதனை மனிதனாக வாழவைத்து ஆன்மீக வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதற்கு அத்திவாரமாக அமைகின்றது எனக் கூறலாம்.

---

1. தர்ம சாத்திரங்களின் பிரதான அம்சங்களை விளக்குக:

1. தர்ம சூத்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள் என இருவகை உண்டு.

   தர்ம சூத்திரங்கள்: கௌதமர், ஆபஸ்தம்பர்,வசிஷ்டர், கௌதமர் என்போரால் இயற்றப்பட்ட நூல்கள்.

   தர்ம சாஸ்திரங்கள் ; மனு, காத்யாயனர், விஷ்ணு, நாரதர், பிருகஸ்பதி, சுக்கிராச்சாரியார், என்போரால் எழுதப்பட்டவை,

2. இவை வைதிக சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நெறி பற்றிக் கூறும் இலக்கியங்களாகும்.

3. தனி மனிதர்களதும், சமுதாயப் பிரிவுகளினதும் கடமைகளைக் கூறுகின்றன.

4. வர்ணாச்சிரம தர்மங்கள் பற்றி கூறப்படுகின்றன. அரசியல் பற்றிய பகுதிகள் விரிவானவை. சமூக வழக்காறுகளும் சட்ட வழமைகளும் சிறப்பிடம் பெறுகின்றன.

5. இவை இந்து சட்டநெறிக்கு மூலமானவை. நாரதர், விஷ்ணு முதலியோரின் நூல்களில் நீதிபரிபாலனம் பற்றிய பகுதிகளே மிக விரிவாக்கம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **வைணவ சம்பிரதாயத்தின் பிரதான கோட்பாடுகளைத் தெளிவாக்கும் இரகஸ்ய கிரந்தங்களில் இடம்பெறும் விடயங்களைச் சுருக்கமாக விளக்குக:**

1. *நித்திய பொருள் 3 (தத்வத்திரயம்) —சித், அசித், ஈஸ்வரன்*

2. *இரகஸ்ய மந்திரம் 3 (இரகஸ்யதிரயம்)—திருமந்திரம், துவயம், சரம சுலோகம்.*

3. *சேர விடுவோர் (புருஷகாரம்) பிராட்டியார்.*

4. *சரணடைதல் (பிரபக்தி, சரணாகதி)*

5. *இறைவனுக்கும், இறையடியாருக்கும் சேவை (கைங்கரியம்)*

6. *போதனைகளின் சுருக்கம் (அர்த்த பஞ்சகம்) பேறு, தகுதி, உபாயம், பலன், தடை.*

7. *ஆசார்யர்.*

8. *வைணவ இலக்கணம் முதலியவை பற்றிவிளக்கல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இராமானுசரது விசிட்டாத்துவைதத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கு மிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தெளிவுபடுத்துக:

அ) அறிமுகம்-இந்திய தத்துவக் கோட்பாட்டில் இவ்விரு தத்துவங்களின் முக்கியத்துவம்.

ஆ) பின்வரும் அடிப்படையில் ஒப்பிட்டு நோக்கலாம்.

| கோட்பாடுகள் | விசிட்டாத் வைதம் | சைவசித்தாந்தம் |
|---|---|---|
| 1. பிரமாண நூல்கள் | திவ்விய பிரபந்தம் வைணவ ஆகமங்கள் | திருமுறைகள் சிவாகமங்கள் |
| 2. கடவுட் கோட்பாடு | உண்மைப் பொருள் பரிணாமவாதிகள் சகுணன் என்பதில் நம்பிக்கை.<br>விஷ்ணு—ஈசுவரன். | மெய்ப்பொருள் பரிணாமவாதிகள் சகுண - நிர்குண சொரூபங்களில் நம்பிக்கை.<br>ஈசுவரனில் நம்பிக்கை. |
| 3. ஆன்மா | 1. பல<br>2. அறிவுடையவை தருமபூதஞானம்.<br>3. மூவகை ஆன்மாக்கள் | 1) பல<br>2) அறிவுடையவை<br>3) மூவகை ஆன்மாக்கள் |
| 4. உலகம் | உண்மைப் பொருள் | உண்மைப் பொருள் |
| 5. ஆன்மா, உலகம், இறைவன் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பு. | மூவகைப் பேதங்கள் | — |
| 6. மாயை | பிரகிருதி என்ற அடிப்படையில் கொள்ளல். | நிலையான தோற்றம் |
| 7. கன்மம் | ஒப்புக்கொள்வர். | ஒப்புகொள்வர் |
| 8. சாதனை | கன்மம், ஞானம், பக்தி பிரபத்தி மார்க்கத்தை சிறப்பாகவற்புறுத்தல் | நால்வகை மார்க்கம் சிறப்பாக வற்புறுத்தல் அவனருளாலே அவன் தாள் வணங்குதல். |
| 9. முத்தி | இறைவன் வைகுந்தத்தை அடைதல் இறைவனை அடைந்து முத்தியடைதல் | கைலாசத்தை அடைதல் முத்தி - தாடலை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சித்தாந்த சாத்திர வரிசையில் சிவஞான சித்தியார்வகிக்கும் இடத்தினை ஆராய்க:

அ) அறிமுகம்: சிவஞான சித்தியாரும் அருணந்தி சிவாச்சாரியாரும் வழிநூல் முக்கியத்துவம்-சிவாகம மார்க்கங்களுக்கெல்லாம் உரையானது

ஆ) சிவஞான சித்தியாரின் பரபக்கத்தின் முக்கியத்துவம்.

1. சிவஞான போதத்தின் அவையடக்கல் பாடலின் விரிவு.
2. சித்தாந்த தத்துவங்களோடு முரண்படும் வைதிகம், அவைதிகம் சார்ந்த மதங்களின் கருத்துக்களை விளக்கி சித்தாந்த தத்துவத்தை நிலைநிறுத்தல்.
3. 301 திருவிருத்தங்களால் இப்பகுதியானது விளக்கப்படுகின்றது.

இ) சிவஞான போதத்தின் விளக்கமே சிவஞான சித்தியார் என்பதை விளக்கல்

| சிவஞான போதம் | சிவஞானசித்தியார் |
|---|---|
| 1. 12 சூத்திரம் | 12 சூத்திரம் |
| 2. 81 வெண்பா | 328 திருவிருத்தம் |
| 3. பொது - சிறப்பு (2) | பொது உண்மை(2) |
| 4. பிரமாணயியல் | பிரமாணயியல் |
| இலக்கணவியல் | இலக்கணயியல் |
| சாதனையியல் | சாதனையியல் |
| பயன் இயல் | பயன் இயல் |

ஈ) சிவஞான சித்தியாரில் சிறப்பாக விரித்துரைக்கப்படுபவை:

1. பிரமாணங்கள்
2. துவைதம்
3. மாயை
4. அத்துவாக்கள்
5. திட்சை
6. சிவாகமத்தின் பெருமை

உ) சிறப்பு:

1. இந்நூலுக்கு பலர் உரை எழுதியுள்ளனர்.
2. பல சார்பு நூல்கள் தோன்றியுள்ளன.

ஊ) பெருமை: பார் விரித்த நூலெல்லாம்பார்த்தறியச் சித்தியிலே ஓர்விருத்தப் பாதிபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அப்பர் சுவாமிகளது சமயத் தொண்டினால் சைவசமயம் வளமுற்றவாற்றை உதாரணங்காட்டி விளக்குக:

அ) அப்பர் காலச் சூழ்நிலை.

ஆ) தொண்டுகள்: அற்புதங்கள், இறை உண்மையை புலப்படுத்தல், சிவனடியார் கூட்டத்திற் தலைமை தாங்குதல், இறைவனைப் புகழ்ந்து பாடல், சமயநெறி பிறழாது வாழ்ந்து காட்டல்.

இ) ஆலயங்கள் அழியாது நிலைத்து நிற்கும் வகையில் அமைவதற்கு வழி காட்டல், குகைக்கற்றழி அமைப்பு முறை பல்லவர் காலத்தில் தோன்றிற்று.

ஈ) பாடல் பண்ணோடு பாடுதல் முறை தொடக்கி வைக்கப்பட்டது. பண் — தமிழிசை வளர்ச்சியின் தாய்.

உ) சிவனடியார் திருக்கூட்டத்தின் பெருமை துலங்கப் பெறல் — சித்தாந்த நெறியில் நிற்றல்

ஊ) தலயாத்திரை செய்து சைவத்தை வளர்த்தல்.

எ) சைவ சித்தாந்த கோட்பாட்டின் வளர்ச்சி அப்பர் சுவாமிகளின் பாடல்கள் எடுத்துக்காட்டாக அமைந்தன.
(அப்பர் பாடல்களை மேற்கோள்காட்டி எழுதுதல் வேண்டும்).

6. சைவசித்தாந்தம் கூறும் பதி பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

1. இந்துமத தத்துவார்த்த பிரிவுகளுள் சைவசித்தாந்தமும் ஒன்று. சோழர் காலத்தில் வைசித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெற்றது. சைவ சித்தாந்தம் நூல்கள் மெய்கண்டசாத்திர நூல்கள் என்றும் கூறப்படுகின்றது.

2. மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு. அவை யாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் | ஆசிரியர் | வாழ்ந்த நூற்றாண்டு |
|---|---|---|
| 1. திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவர் | 12 |
| 2. திருக்களிற்றுப் படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவர் | 12 |
| 3. சிவஞானபோதம் | மெய்கண்ட தேவர் | 13 |
| 4. சிவஞான சித்தியார் | அருணந்தி சிவாச்சாரியர் | 13 |
| 5. இருபா இருபஃது | அருணந்தி சிவாச்சாரியர் | 13 |
| 6. உண்மை விளக்கம் | மனவாசகங்கடந்தார் | 13 |
| 7. சிவப்பிரகாசம் | உமாபதி சிவாச்சாரியார் | 14 |
| 8. திருவருட்பயன் | உமாபதி சிவாச்சாரியார் | 14 |
| 9. வினாவெண்பா | உமாபதி சிவாச்சாரியார் | 14 |
| 10. போற்றிப் பஃறொடை | உமாபதி சிவாச்சாரியார் | 14 |
| 11. கொடிக்கவி | உமாபதி சிவாச்சாரியார் | 14 |
| 12. நெஞ்சுவிடுதூது | உமாபதி சிவாச்சாரியார் | 14 |
| 13. உண்மை நெறி விளக்கம் | உமாபதி சிவாச்சாரியார் | 14 |
| 14. சங்கற்ப நிராகரணம் | உமாபதி சிவாச்சாரியார் | 14 |

3. சைவ சித்தாந்திகள் முப்பொருளும் உண்மை என்கின்றனர். அதாவது பதி, பசு, பாசம் மூன்றும் உண்மை. இம்முப்பொருள்களும் என்றும் உள்ளவை. இவை அநாதியானது.

முப்பொருள்

| பதி | பசு | பாசம் |
|---|---|---|
| அறிவிக்காமலேயே அறியும் பொருள் | அறிவித்தால் அறியும் பொருள் | அறிவித்தாலும் அறியாத பொருள் |

**பதி**

4. பதியுண்மையை நிலைநாட்டல்
உதாரணங்கள் 1. குடம்-குயவன்
2. குடை-அதைச் சேர்ப்பிப்பவன்.

5. பதியின் எண் குணங்கள்

1) தன்வயத்தனாதல் (சுவதந்திரத்துவம்)
2) தூயவுடம்பினனாதல் (விசுத்த தேகம்)
3) இயற்கை உணர்வினனாதல் (நிராமயான்மா)
4) முற்றுமுணர்தல் (சர்வ ஞத்துவம்)
5) இயல்பாகவே பாசங்களினீங்குதல் (அநாதி போதம்)
6) பேரருளுடைமை (அலுப்தசக்தி)
7) முடிவிலாற்றலுடைமை (அநந்த சக்தி)
8) வரம்பிலின்பமுடைமை (திருப்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **பதியின் இரண்டு நிலைகள் (இரண்டு இலட்சணங்கள்)**

1) சொரூப நிலை
2) தடத்த நிலை

சொரூப நிலையாவது: உலகுயிர்களின் சார்பில் வைத்து நோக்காது தானே தனித்து நிற்கும் நிலையில் வைத்துநோக்குவது. இந்நிலையில் இறைவனுக்கு குணம் இல்லை. சுயம்பிரகாசமானது. வாக்குக்கு எட்டாதது. மணிவாசகர் ''ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி'' என்றும், கூறுகின்றார். அப்பர் ''சொற்றுணை வேதியன் சோதி'' என்கின்றார்.

தடத்த நிலையானது: உலகுயிர்கள் சார்பில் வைத்து நோக்குவது. ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக இறைவன் சொரூப நிலையிலிருந்து ஒருபடி கிழிறங்கி உலகுயிர்களோடு தொடர்பு கொண்டிருத்தல் இந்நிலையாகும்.

7. இறைவன் குணங்குறிகளோடு பேசப்படும். அதாவது சிவன், முதல்வன் இறைவன் எனப் பெயர் பெறுகின்றான். இந்நிலையில் இறைவன் ஆன்மாக்களுக்காக ஐந்தொழில்களை ஆற்றுகின்றான்.

ஐந்தொழில்கள்

| படைத்தல் | காத்தல் | மறைத்தல் | அருளல் | அழித்தல் |
|---|---|---|---|---|
| தனு, கரண, புவன போகங்களைப் படைத்தல்) | (தனு, கரண, புவன போகங் களை நிலை நிறுத்தல்) | (இருவினைப் பயன்களாகிய இன்ப துன்ப ங்களில் அமிழ்த் துதல்) | (உயிர்களுக்கு முத்திகொடுத் தல்) | (தனு, கரண புவன போக ங்களை முதற் காரணத்திலே ஒடுக்குதல்) |

8. ஐந்தொழில்களை இறைவன் சக்தியுடன் சேர்ந்தே ஆற்றுகின்றார். இதை உமாபதி சிவாச்சாரியார் ''தன்நிலமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்கிறார்.

9. ஐந்தொழில்கள் மூலம் தனு, கரண, புவன போகங்களைப் பெற்ற ஆன்மா இவற்றை அனுபவித்து இறந்து-பிறந்து இறந்து ......இவ்வாறு அநுபவித்த ஆன்மா ஒரு நிலையில் களைப்படைந்து விடுகின்றது. இந்நிலையில் அதற்கு உலகியல் பற்று நீங்கி இறைப்பற்று மேலோங்கும் போது ஆன்மாக்களுக்கு இருவினை ஒப்பு ஏற்படுகின்றது. இருவினை ஒப்பு என்பது நல்வினை, தீவினைகளை ஒப்ப நோக்கும் நிலை. (ஓட்டையும் செம் பொன்னையும் ஒப்பநோக்கும் ஒரு மனோநிலை) இதனையடுத்து மலபரி பாகம் ஏற்படுகின்றது. அதாவது ஆணவத்தின் வலிமை குன்றும். இதன் பின் சக்தி நிபாதம் ஏற்படும். அதாவது திருவருட்சக்தி ஆன்மாவில் பதியும்.

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சைவசித்தாந்தத்தின்படி முத்தி, துன்பம் துணியும் இல்லாத எதிர்மறை நிலை மட்டுமன்றிப் பேரின்பமயமான உடன்பாட்டு நிலையும் ஆகும். இம்முத்தியிலே ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்தபோது தன் தனி இயல்பை முற்றாய் இழந்து விடுவதில்லை. இக்கலப்புக்குத் தாள்+ தலை என்ற இரு சொற்களின் புணர்ச்சியை உதாரணமாகக் காட்டுவது மரபு.

## 7. சைவசித்தாந்தம் கூறும் ஆன்மா பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக:

1. முகவுரை

இந்துமதத் தத்துவர்த்தப் பிரிவுகளுள் சைவ சித்தாந்தமும் ஒன்று.

சைசித்தாந்தம் முப்பொருளுண்மையை விளக்குகின்றது.

முப்பொருள்

| பதி | பசு | பாசம் |
|---|---|---|
| அறிவிக்காமலே அறியும் பொருள் | அறிவித்தால் அறியும் பொருள் | அறிவித்தாலும் அறியாத பொருள் |

2. சைவசித்தாந்திகள் ஆன்மா உண்டு என்பதை நிறுவும் வகை பற்றி விளக்கல்.

சிவஞானபோதம்- "இல்லை இல்லை என்று சொல்வது எதுவோ அதுவே ஆன்மா" என்கின்றது.

3. ஆன்மா பல என்பதை விளக்கல்.

பலவகையான ஆன்மாக்களை மூவகையாக வகைப்படுத்தியதை விளக்கல்.

1) விஞ்ஞானகலர் — ஆணவமலம் மட்டும் உடையோர்.
2) பிரளையாகலர் — ஆணவம் + கன்மம் ஆகிய இருமலங்களை உடையோர்.
3. சகலர் — ஆணவம் + கன்மம் + மாயை ஆகிய மும்மலங்களையுடையோர்.

4. ஆன்மாவின் நான்கு இயல்புகளை விளக்குதல்

1) ஆன்மா சகல கேவலப்படும் இயல்புடையது.
2) ஆன்மா அறிவிக்க அறியும் இயல்புடையது.
3) ஆன்மா சத்தையும் அசத்தையும் அறியும் இயல்புடையது.
3) ஆன்மா சார்ந்தன் வண்ணமாய் அறியும் இயல்பினது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆன்மாவின் இலட்சியம் மோட்சம் என்பதை விளக்கல்.

6. முத்தி பெறும் வகை பற்றிய விளக்கம். இருவினை ஒப்பு—மலபரிபாகம்—சக்திநிபாதம். முத்தி நிலையை 'தாடலை' மூலம் விளக்குகின்றதை கூறல்.

7. முத்தியடையும் மார்க்கம் பற்றிக் கூறல்.

8. முடிவுரை.

(சைவசித்தாந்தம் பற்றிய வினாவை தெரிவு செய்து விடையளிக்கும் போது சிவஞான போதம், சிவப்பிரகாசம், சிவஞான சித்தியார், திருவருட்பயன் போன்ற நூல்களிலிருந்து தகுந்த மேற்கோள்களை உதாரணம் காட்டி விளக்குதல் வேண்டும்.)

**பக்கம் 75-83 வரையுள்ள பகுதிகளில் வினாக்களும் சுருக்க விடைகளுமே தரப்பட்டுள்ளன. விளக்கி எழுதுங்கள்.**

1. சுருக்கமான விடை தருக.

(1) ''திரயீ வித்யா'' என்றால் என்ன?

(2) இருக்குவேதத்தில் விஷ்ணுவுக்குச் சிறப்பாக வழங்கப்படும் அடைமொழி யாது?

(3) இருக்கு வேதத்தில் உருத்திரன் மீது எத்தனை பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன?

(4) உபநிடம் என்பதன் பொருள்யாது? உபநிடதம் இரண்டின் பெயர்களைத் தருக?

(5) பிரமசூத்திரம் எதை எதனடிப்படையில் விளக்குகின்றது?

(6) சைவாகமங்களின் எண்ணிக்கை எத்தனை? அவற்றிலே பிரபல்யமானது எது?

(7) திருமந்திரத்துள் எத்தனை ஆகமங்களின் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன?

(8) பகவத்கீதைக்குப் பின்பு கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்குச் செய்த உபதேசம் மகாபாரதத்தில் பெறும் பெயர் யாது?

(9) பதினெண் புராணங்களில் விஷ்ணு புராணங்கள் எனப்படுபவை யாது?

(10) ''சித்தாந்த அட்டகம்'' என்றழைக்கப்படும் நூல்கள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) "அத்துவிதம்" என்பதற்கு மெய்கண்ட தேவர் கொண்ட பொருள் யாது?

(12) "சித்தாந்தம்" என்ற பெயர் முதன் முதலில் இடம் பெறும் தமிழ் நூல் எது?

(13) "புருஷகாரம்" என்ற வைணவ விசிஷ்டாத் வைதக் கோட்பாடு எதனைக் குறிப்பது?

(14) "வேதம் தமிழ் செய்த மெய்யன்" எனப் போற்றப்பெறும் ஆழ்வார் யார்?

(15) இராமாவதாரக் கதையினைப் பாடிமகிழ்ந்த ஆழ்வாரின் பெயர் யாது?

(16) "திருத்தொண்டத்தொகை" எத்தனையாம் திருமுறையிலே இடம் பெறுகின்றது?

(17) திருநாவுக்கரசர் ,அப்பர்' என்ற பெயர் பெறக் காரணமாக இருந்தவர் யார்?

(18) "சற்காரியவாதம்" எனச் சைவர் எதனைக் கூறுவர்?

(19) சைவ சித்தாந்த மரபில் மல அடிப்படையில் உயிர்கள் எவ்வாறு பகுக்கப்படுகின்றன? மும்மலமும் இடம்பெறும் பிரிவின் பெயர் என்ன?

(20) வைணவ விசிஷ்டாத்வைதத்தில் "துவயம்" என்பது எதனைக் குறிக் கின்றது?

க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சை 11

1. சுருக்கமான விடைகள் தருக.

(1) வேள்வியை விளக்கும் வேதப்பகுதி யாது?

(2) பிராமணர்களை அவனியில் நடமாடும் தெய்வங்கள் என்றும் கூறும் வேதப்பகுதி யாது?

(3) இருக்கு வேதத்தில் புரோகிதனாகப் போற்றப்படும் தெய்வம் யாது?

(4) ஓம் எனும் பிரணவத்தின் உட்பொருளை விளக்கும் உபநிடதம் யாது?

(5) யசுர் வேதம் கூறும் சதருத்திரியம் என்பது யாது?

(6) ஆன்மார்த்த பூசை என்பது யாது?

(7) மாகேசுர பூசை என்பதை விளக்குக ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126883

(8) நித்திய பூசையில் இடம் பெறும் சோடச உபசாரம் குறிப்பது யாது?

(9) தூலலிங்கம் என்பது யாது?

(10) திருக்கோயிலில் பாடப்பெறும் பஞ்ச புராணங்களை உரிய ஒழுங்கிலே தருக.

(11) பஞ்சகிருத்தியம் யாவற்றையும் ஒருங்கே காட்டும் தாண்டவம் யாது?

(12) கைவல்லியம் என்பது யாது?

(13) சரியைத் தொண்டென்பது யாது? சிவாலயத் தொண்டுகள் இரண்டின் பெயர் தருக?

(14) வைணவ சம்பிரதாயத்தின் 'அட்ட சுயம்புதலம்' என்பது யாது?

(15) தேவாரம் பாடப் பெற்ற ஈழத்துச் சிவதலங்கள் யாவை?

(16) ஆழ்வார் விழா அல்லது அத்தியாயனோற்சவம் என்பது யாது?

(17) ஆருத்திரா தரிசனம் என்பது யாது?

(18) உழவாரப்பணி மூலம் சிறப்பெய்திய நாயனார் யாது?

(19) பிராயச்சித்தக் கிரியை என்பது யாது?

(20) அபரக்கிரியைகளில் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக?

க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சை

## இந்து சமயம் பகுதி 1ற்கான விடைகள்

1. மூன்று வித்தைகள் (இருக்கு, யசுர், சாமம்),

2. மூவடியால் அனைத்தையும் அளந்தவன்.

3. மூன்று பாடல்கள்.

4. குருவின் முன்னிலையில் உபதேசம் பெறுதல்.

ஐதரேயம், கௌஷீதகி, தைத்திரீயம் மகாநாராயணீயம், பிருகதாரணியகம், சாந்தோக்கியம், கேநம், கடோபம், சுவேதாஸ்வரம், ஈசோ· முண்டகம், பிரச்னம், மைத்திராயன், மாண்டூக்யம்.

5. பிரமத்தை உபநிடதங்களின் அடிப்படையில் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. 28 காமிகம்

7. ஒன்பது

8. அநுகீதை

9. விஷ்ணு புராணம், பாகவத புராணம், நாரத புராணம், கருட புராணம்; பத்ம புராணம், வராக புராணம்.

10. திருவருட்பயன், சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம், வினாவெண்பா போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம்.

11. அண்மைப் பொருள்: இரண்டு அல்லாத தன்மை, ஒன்றாயும், வேறாயும், உடனாயும்.

12. திருமந்திரம்.

13. இறைவனையடையப் பிராட்டியார், ஆசாரியார் உதவி (இவர்களுடைய உதவியின்றி ஸ்ரீமத் நாராயணனை அடையமுடியாது. அதாவது விஷ்ணுவிற்கு ஊடகமாக திருமகளும் அவனுக்கு ஊடகமாக ஆசாரியரும் அமையும் படிநிலை புருஷகாரம் எனப்படும்.)

14. நம்மாழ்வார்.

15. குலசேகராழ்வார்.

16. ஏழாந்திருமுறை (சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்)

17. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

18. பிரபஞ்சம் உள்ளது; இக்காரியத்திற்குரிய காரணம் உள்ளது; காரண காரியமாய் வரும் முப்பொருள்; அது உள்பொருள்; எனவே அது இலதாகமாட்டாது. நித்தியமானது.

19. விஞ்ஞானகலர், பிரளையாகலர், சகலர்.

20. சரணாகதியையும் புருஷகாரத்தையும் குறிப்பிடும் மந்திரம். பிராட்டியார் உதவியுடன் நாராயணனுடைய பாதாரவிந்தங்களைச் சரணடைந்து அவருக்கு சேவை செய்ய வேண்டும் என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சை

## இந்து சமயம் பகுதி 11ற்கான விடைகள்

1. பிராமணம்

2. பிராமணம்

3. அக்கினி

4. சாந்தோக்கியம்.

5. உருத்திரனின் 100 பேர் கூறுவது.

6. ஆன்மார்த்தபூசை அல்லது இட்டலிங்கபூசை அல்லது சிவபூசை' சிவாசாரியாரிடம் தீட்சை பெற்று அவரிடம் பெற்றுக்கொண்ட உடையவரை எழுந்தருளப்பண்ணி நாடோறும் பூசிப்பது.

7. ஆசாரியர், நிருவாண திக்ஷிதர், விசேஷ திக்ஷிதர், சமய திக்ஷிதர் எனும் நால்வகை மகேசுரர்களையும் விதிப்படி பூசித்துத் திருவமுது செய்வித்தல்.

8. கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் காட்டுதல்.

9. கோபுரம்.

10. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா' திருப்பல்லாண்டு, திருப்புராணம்.

11. ஆனந்த தாண்டவம்.

12. மனதை வசப்படுத்தித் தியானித்து ஆன்ம விடுதலை பெற்றுச் சாந்தியடைதல்.

13. சிவாலயத்திற்கும், சிவனடியார்க்கும் செய்யும் தொண்டு திருவலகிடுதல் - திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தவனம் அமைத்தல், பத்திரபுஷ்பம் எடுத்தல், திருமாலை கட்டல், சுகந்த தூபம் இடுதல்-திருவிளக்கு ஏற்றுதல், தோத்திரம் பாடுதல், பிரசாதம் செய்தல், வாகனம் தாங்குதல், அபிஷேகப் பணியில் உதவுதல், சாமரை வீசுதல், குடை கொடி ஆலவட்டம் எடுத்தல்.

14. இயற்கையாகத் தோன்றிய எட்டுத் தலங்கள்.

15. திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. தமிழ்த்திருப்பாசுரங்களுக்குச் சங்கத வேதத்தோடு ஒத்த தகுதி அளிக்கப்பெற்றதைக் கொண்டாடும் ஞாபகார்த்த விழா.

17. அபிடேக விழா அல்லது பனிகொட்டும் மார்கழி மாத விழா. ஆர்த்ரா -நனைந்த (மார்கழித் திருவாதிரை விழா)

18. திருநாவுக்கரசு சுவாமிகள்.

19. இழைத்த தவறை நீக்கும் நோக்குடன் இயற்றப்படுவது.

20. பிரேதக்கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியொட்டி, மாசிகம், ஆட்டைத் திதி, திவசம்,

## க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சை

1. சுருக்கமான விடை தருக.

1. "சுருதி" என வேதம் பெயர் பெறுவதற்கான காரணம் யாது?
2. உருத்திரனும், விஷ்ணுவும் வேதத்தின் எப்பகுதியில் முதன் முதலாகப் பெருந் தெய்வங்கள் என்று குறிப்பிடப்படுகின்றார்கள்?
3. உருத்திரனின் நூறு பெயர்களைக் குறிப்பிடும் யசுர்வேதப் பகுதி யாது?
4. முத்திகோபநிடதம் எத்தனை உபநிடதங்களைக் குறிப்பிடுகின்றது?
5. உபநிடதம் வேதாந்தமென அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
6. சைவாகமத்தின் உட்பிரிவுகள் யாவை?
7. சைவ நூல்களுட் சிவதருமோத்தரம் எவ்வகையைச் சேர்ந்தது?
8. சைவ இலக்கியங்களுள் அடங்கன் முறை எனப்படுபவை யாவை?
9. திருத்தொண்டத் தொகையின் விரிவாக அமைந்த நூல் யாது?
10. பன்னிரு திருமுறைகளுட் காலத்தால் முந்திய தெனக் கருதப்படும் திருமுறை யாது?
11. "சைவம்" எனும் பெயர் இடம் பெறும் முதல் தமிழ் நூல் யாது?
12. சிவஞான போதம் எந்த வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு என்று கருதப்படுகின்றது?
13. தசாவதாரத்தில் இடம் பெறும் இராமாவதாரங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பதினெண் புராணங்களுள் இடம் பெறும் சிவபுராணங்கள் மூன்றினைச் குறிப்பிடுக.

15. பன்னிரு ஆழ்வார்களுள் உன்னத நிலையில் வைத்துப் போற்றப்படும் ஆழ்வார் யார்?

16. வேதாந்தி கூறும் விவர்த்தவாதம் யாது?

17. வைணவ சம்பிரதாயம் போற்றும் அர்த்த பஞ்சகம் யாவை?

18. திருமாலின் சொரூபங்களிற் சகல மக்களும் அருள் பெறக் கூடிய சொரூபம் யாது?

19. சைவ சித்தாந்தம் கூறும் முத்தி நிலை யாது?

20. பல்லாண்டு பாடிய சைவ வைணவப் பெரியார்களின் பெயர்களைத் தருக?

I. சுருக்கமான விடை தருக:

1. இருக்கு வேதத்திலுள்ள காயத்திரி மந்திரம் எதனைத் தியானிக்கிறது?

2. ஆரணியகம், வனநூல் என அழைக்கப்படுவதற்காக இரு காரணங்களைத் தருக?

3. சரணாகதி வேதம் என வைணவ ஆசாரியர் போற்றும் நூல் எது?

4. யோக நெறி விளக்கமாக அமையும் திருமுறை யாது?

5. லிங்கோத்பவர் சிவன் கோயில் அமைந்திருக்கும் இடம் யாது?

6. வைணவர் திருக்கோயிலிலே "பஞ்ச பரிவாரம்" எனப் பொதுவாக வழங்கப்படுவன யாது?

7. பத்திரலிங்கம் என்பது யாது?

8. சகஸ்ர நாமஸ்தோத்திரம் என்பதை விளக்குக?

9. ஞானநெறி என்பதனை விளக்குக?

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

10. குழந்தைகளுக்கு ஏடு தொடங்கும் நாள் யாது?

11. சாம்பவதீட்சை என்பது யாது?

12. மகோற்சவ கொடியேற்றம் குறிக்கும் தத்துவம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சங்கம வழிபாடு என்று சைவர் கூறுவது வைணவ மரபிலே எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

14. சிரார்த்தம் என்பது யாது? இரு சிரார்த்தக் கிரியைகளைக் குறிப்பிடுக?

15. குருபூசை என்பதனை விளக்குக?

16. ஆவாகனம் என்பது யாது?

17. திருச்சிற்றம்பலம் சொல்லப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

18. புராணபடனம் என்றால் என்ன?

19. சப்த விடங்கத் தலம் எனச் சைவர் கூறுவது யாது? இரு சப்தவிடங்கத் தலங்களைக் குறிப்பிடுக?

20. சக்கரத் தாழ்வார் கோயில் என ஈழத்தவர் குறிப்பிடும் கோயில் யாது?

1. செவி வழியாக கேட்கப்பட்டது அல்லது கேட்டற்கு உரிதாதல்.
2. பிரமாணம்.
3. ஸ்ரீருத்ரம் அல்லது சதருத்திரியம்.
4. 108
5. வேதத்தின் முடிவாக உள்ளது அல்லது வேதத்தின் சாரம்.
6. ஞான, யோக, கிரியா, சரியா, பாதங்கள்.
7. உபாகமம்.
8. முதலேழு திருமுறைகள்.
9. திருதொண்டர் புராணம் (பெரிய புராணம்)
10. 10ம் திருமுறை (திருமந்திரம்)
11. மணிமேகலை.
12. ரௌராகமம்.
13. தசரதராமன், பலராமன், பரசுராமன்.
14. மார்க்கண்டேய புராணம், இலிங்கபுராணம், மச்சபுராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. நம்மாழ்வார்.

16. ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்த படியே மாறிவிட்டதாகத் தோன்றுவது விவர்த்தவாதம். காரணம் உண்மை, காரியம் பொய் கயிற்றிலிருந்து பாம்பு தோன்றுகின்றது. மாறி விடவில்லை. பிரமம் உலகாகத் தோன்றுகின்றது. மாறிவிடவில்லை.

17. பேறு:- நாம் அடைய விரும்பும் பொருளின் இயல்பு.
தகுதி:- பேற்றினை அடைவதற்கு தமக்குள்ள தகுதி.
உபாயம்:- பேற்றினை அடையும் மார்க்கங்கள்.
பலன்:- பேற்றினை அடையின் நாம் பெறும் பலன்கள்.
தடை: பேற்றினை அடைய முறியடிக்க வேண்டிய தடைகள்.

18. அர்ச்சாவதாரம்.

19. அத்துவிதமுத்தி ஒன்றென்றும் இரண்டென்றும் கூறமுடியாத கலப்பு நிலை. இரண்டற்ற நிலை. தாள்தலை இரண்டாம் தன்மை அற்று தாடலை என்று ஒன்றாதல் போன்றது. பிறப்பு இறப்புத் தொடரில் விடுபட்டு இறையடியில் இரண்டறக்கலந்து, அவனது ஐந்தொழிலில் கலவாது என்றும் பேரின்பத்தை அனுபவிப்பது.

20 சேர்ந்தனார், பெரியாழ்வார்.

1. யார் நம் அறிவைத் தூண்டுகின்றாரே அந்தச் சுடர்க் கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக. பூஷன் (சூரியனது ஒளித் தோற்றம் பூஷன்)

2. (1) வானப் பிரஸ்தர்களுக்கென எழுந்தமை.
(2) மக்கள் வாழ் இடங்களில் ஓதப்படாமல் காடுகளில் தங்கி ஓதப் பட்டமை.

3. வால்மீகி ராமாயணம்.

4. பத்தாம் திருமுறை (திருமந்திரம்).

5. கருவறை மூலர்மூர்த்திக்குப் பின்பக்கத்தில் வெளி விமானத்தில் திருக் கோயிலில் மேற்கு நோக்கி அமர்ந்திருப்பார்.

6. விஷ்வக்சேனர், கருடன், ஸ்ரீதர், நியக்ஷர், பூதபீடம்.

7. பலிபீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. 1000 நாமங்களை அடுக்கிப் போற்றுவது, 1008 பெயர் சொல்லி அர்ச்சனை செய்வது மரபாய் விட்டது.

9. இறைவனை அறிவு வடிவமாகச் சிந்தித்து வழிபடல் அல்லது முப் பொருள் உணர்த்தும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்து தெளிந்து நிட்டை கூடல்.

10. விஜயதசமி.

11. விழாக்காலங்களிலே உற்சவ மூர்த்தியைத் தரிசித்தல்.

12. ஆணவம் வலியிழந்து ஆன்மா மலநீக்கம் பெறும் பொருட்டு திருவருளாகிய கொடியை ஏற்றுவது.

13. கைங்கரியம் (ஆழ்வார் வழிபாடு)

14. அந்தியேட்டிக்குப் பின் நிகழும் கிரியை; சிரத்தையோடு கொடுக்கப் படுகின்றது. ஆட்டைத்திதி, திவசம்.

15. தீக்ஷாகுரு, வித்தியாகுரு, போதககுரு, சமய குரவர், சந்தானகுரவர் முதலாம் பெரியோருக்கு அவர்கள் சிவபதமடைந்த மாசநட்சத்திரத்தி லாயினும் திதியிலாயினும் விஷேச பூசை செய்வித்து தரிசனம் செய்து சிவபக்தர்களை அவ்வராகப் பாவித்து பூசித்து திருவமுது செய்வித்தல்.

16. மந்திர உச்சாடனம் மூலம் இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டுதல்.

17. திருமுறை ஓதமுன்பும், ஓதிய பின்பும், சொல்லப்படுவது.

18. புராணங்களைப் படித்துப் பயன்சொல்லல்.

19. சப்த-ஏழு; விடங்கர்-உளியால் செய்யப்படாதவர் சுயம்பாகவுள்ளவர்-7 சுயம்புத்தலங்கள்-நள்ளாறு நாகைக்காரோணம், காறாயில் கோளிலி, வாய்மூர், மறைக்காடு, ஆரூர்.

20. வல்லிபுரம் (பெருமாள்) கோயில்.

---

126883



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. உயர்தரம், G.A.Q, இந்துசமயம், இந்துநாகரிக

## நூல்களின் விலைப்பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| ※ இந்துசமயம், இந்துநாகரிகம் | வெளியீடு I - | ரூ | 65.00 |
| ※ இந்துசமயம், இந்துநாகரிகம் | வெளியீடு II<br>பாகம் II | ரூ | 79.00 |
| ※ இந்துசமயம், இந்துநாகரிகம் | பாகம் I - | ரூ | 105.00 |
| ※ இந்துசமயம், இந்துநாகரிகம் | பாகம் III - | ரூ | 63.00 |
| ※ இந்துசமயம், இந்துநாகரிகம் | பாகம் IV - | ரூ | 45.00 |
| ※ இந்துசமயம், இந்துநாகரிகம் | வெளியீடு III<br>பாகம் V | ரூ | 96.00 |

குறிப்பு :- மேற்கூறப்பட்ட நூல்களில் அடங்கும் விடயங்கள் என்னுரையில் கொடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் எனது நூல்களை அனுப்புமாறு கேட்பர். அப்போது இதற்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை. ஆனால் தற்பொழுது மாணவர் நலன்கருதி கிடைக்கப்பெறாத நூல்களைப் பெறுவதற்கு (தனிப்பட்ட முறையில்) ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மணியோடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். உடனுக்குடன் நூல்கள் அனுப்பிவைக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திருமதி. தி. உதயா,
''ஷேசுகே'' கல்வி நிலையம்,
78, கோவிந்தன் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 065/24770.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மொத்தமாக பெற விரும்புவோர் இந்நூலை வெளியிடும் 'ராஜாஸ்' புத்தக நிலையத்தாருடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rajah's Books Centre

- *Agent for National Paper Company*
- *Wholesale Dealer for Educational Publication Department*
- *Dealers in all kinds of Stationeries*
- *School Books*
- *Indian Books and Novels*
- *Photo Copy Papers*
- *Telex and Fax Rolls*
- *Packing Material*
- *Invitation Cards*
- *Birthday Cards*
- *Sports Items*
- *Trophies, Cups & Shields*
- *Office Equipments*

☎ *065 - 22371*

*Res. 065 - 22249*

RBC

**111, Main Street,**

**Batticaloa**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org